பக்கங்கள்: 22

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 06 ஞாயிற்றுக்கிழமை 19.04.2020 கதிர் 165


**இது ரகசியம் அல்ல!**

நடக்க முடியாதவை எல்லாவற்றையும் நடத்திக் காட்டுகின்றது கொரோனா.

முகத்தை மூடி பர்தா அணிய விட மாட்டோம் என்று துள்ளினார்கள். இப்போது முகமூடி அணியாமல் பொது இடத்துக்கு வர விட மாட்டோம் என்று பக்கம் 02 »

# கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையின் வெற்றியை முழு உலகமும் ஏற்கிறது

## பிரதமர் பெருமிதம்; நமது நாடுதான் பாதுகாப்பானதாம்!



கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள வெற்றியை இன்று முழு உலகமும் ஏற்றுக்கொள்கிறது.

இன்று கொரோனா வைரஸ் காரணமாக பாதுகாப்பற்றதாக மாறியுள்ள உலகில் எமது நாடு மிகவும் பாதுகாப்பான இடமாக மாறியுள்ளது.

– இவ்வாறு பெருமிதத்துடன் அறிவித்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

'கொரோனா வைரஸ் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல்' – என்ற தலைப்பில் தாம் நேற்று விடுத்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

அமெரிக்கா, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் அண்மைக் காலத்தில் துரிதமான பொருளாதார வளர்ச்சியை அடைந்துக் கொண்டு, பலமாக காணப்பட்ட நிலையிலேயே அந்த நாடுகளில் பக்கம் 02 »

# யாழ்ப்பாணத்திலும் திங்கள்கிழமை முதல் தளர்கிறது ஊரடங்கு

## இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரை அமுலில்

கொழும்பு, ஏப்.1

**யாழ்ப்பாணம் உட்பட 18 மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை முதல் ஊரடங்கு தளர்த்தப்பட்டு பொலிஸ் மட்டத்திலான ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

கொழும்பு, கம்பஹா, கண்டி, புத்தளம், களுத்துறை, கேகாலை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு பக்கம் 04 »

## ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கூட வெளி நடமாட்டத்தை தவிருங்கள்!



### கோட்டாபய மக்களிடம் கோரிக்கை

கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தைப் படிப்படியாக தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருந்தும் இக்காலப்பகுதியில் தமது சேவை நிலையங்களிற்கு பக்கம் 04 »

## தனியார் கல்வி நிலையங்கள் தியேட்டர்கள் திறக்கத் தடை

கொழும்பு, ஏப். 19

கொரோனா தொற்று அபாயம் இன்னும் முழுமையாக நீங்கிவிடவில்லை. எனவே வைரஸ் பரவுவதற்கு மீண்டும் இடமளிக்காத வகையில் அனைத்து சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி பொறுப்புடனும் பக்கம் 04 »

## யாழில் 41 பேருக்கு சோதனை எவருக்குமே தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணத்தில் இன்று 41 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொற்று தொடர்பிலான பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு பக்கம் 02 »

## சிப்பாய்க்கு கொரோனா!

கொழும்பு, ஏப்.19

இலங்கை இராணுவத்தின் அனுராதபுரம் பொறியியல் பிரிவின் சிப்பாய் ஒருவர் விடுமுறைக்காக வீடு வந்த சமயம் கொரோனா நோய்த் பக்கம் 02 »

## தேர்தலுக்குத் திகதி குறிப்பிட்டு மக்களை ஆபத்தில் தள்ளாதீர்!

### ஆணையாளரை கோரியது கூட்டமைப்பு

கொழும்பு, ஏப்.19

கொரோனா வைரஸ் அபாயம் நீங்கிவிட்டதாக உள்ளூர் மற்றும் உலக சுகாதார நிபுணர்கள் பரிந்துரைக்கும் வரை பொதுத்தேர்தலுக்கான திகதி நிர்ணயிப்பதைத் தவிர்க்கும்படி, தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டுளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள. த.சித்தார்த்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கையெழுத்திட்டு நேற்று மாலை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிய நீண்ட கடிதத்தில் இவ் விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலைகளில் தேர்தலை நடத்துவது மிகவும் ஆபத்தானது மற்றும் பொறுப்பற்றது. இந்தச் சூழ்நிலைகளில், ஒரு திகதியை பக்கம் 02 »

## நாட்டில் வழமை நிலை திரும்பி 5 வாரங்களின் பின்னரே தேர்தல்!

### மஹிந்த தேசப்பிரிய கூறுகிறார்



கொழும்பு, ஏப்.19

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு, நாடு வழமை நிலைமைக்கு திரும்பிய பின்னர் ஐந்து வார காலஅவகாசம் தேவை என்று தேர்தல் பக்கம் 04 »

## யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் குணமடைந்தனர்

### இன்று அவர்கள் வீடுகளுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.18

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கொரோனா வைரஸ்தொற்றுக்குள்ளாகிவெலிகந்தை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர், முழுமையாகக் குணமடைந்து இன்று வீடு திரும்பவுள்ளனர்.

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர்கள் வீடுகளுக்குத் திரும்பினாலும் பக்கம் 02 »

## பாதிப்புற்றோர் எண்ணிக்கை 254ஆக உயர்வு

கொழும்பு, ஏப்.19

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 6 பேர் நேற்று சனிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று பக்கம் 02 »

## கொரொனாவின் வீரியம் இங்கு தணியவில்லை!

### நிலைமையைத் தெளிவு படுத்துகின்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்



கொழும்பு,ஏப்.19

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் வீரியம் இது வரை தணியவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் – இலங்கையில் கொரோனா வைரஸ் பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கெடுபிடி காட்டும் தலைகீழ் நிலைமை.

வேலைக்கு வந்தாலும் சம்பளம் தர மாட்டோம் என்ற நிலைமை மாறி, வீட்டில் இருங்கள் சம்பளம் தருகின்றோம் என்று கூறும் நிலைமையில் அரசு.

விளக்கமறியலில் இருப்பவர்களை பிணையில் எடுப்பதற்கு முன்னர் சட்டத்தரணிகள், நீதிமன்றங்கள் என்று அலைய வேண்டியிருந்தது. இப்போது அவர்களே தேடி வந்து சொந்தப் பிணையில் வீடு செல்ல அனுமதிக்கின்றார்கள்.

ஆஸ்பத்திரிக்கு வராதீர்கள். அருகில் இருக்கும் மருந்தகங்களுக்கு மருந்தை அனுப்பி வைக்கின்றோம் என்கிறார்கள்.

எல்லாமுமே மாற்றம். அந்த வகையில் புதிய விடயம் ஒன்று பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

'தாலி பெண்ணுக்கு வேலி' என்றார்கள். ஒரு வகையில் அதுவும் ஒரு கண்ணுக்குத் தெரியாத விலங்குதான்.

இப்போது நான் குறிப்பிட போவதும் நேரடியாக ஒரு விலங்குதான். வழக்கமாக கையில் மாட்டும் கை விலங்கை 'காப்பு' என்றும் சொல்லுவார்கள். அத்தகைய ஒரு காப்புப் பற்றிய தகவல் இது. அதுவும் கொரோனாவுக்காக வந்த காப்பு.

பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த அமிலசமீரத் நாயக்கா என்பவர் இதைத் தயாரித்துள்ளார். அதனைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடம் நேரடியாக எடுத்துச் சென்று காட்டிப் பயன்பாட்டை விளக்கினார். பிரதமருக்கும் பிடித்துப் போய்விட்டது. கைவளையலாக அதை உயர்தரத்தில் தயாரிக்கவும், அதற்கான காப்புறுதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் உரிய அதிகாரிகளைப் பணித்த பிரதமர், இந்தக் காப்பை இராணுவத் தளபதியின் கண்காணிப்புக்குச் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டார்.

அப்படி என்ன இந்தக் காப்பில் விசேஷம்? நாங்கள் ஆங்கில சினிமாவில் பார்த்தது தான். மேற்கு நாடுகளில் சில கிரிமினல்களின் காலில் ஒரு வளையமாக இதே போன்ற ஒன்றை மாட்டுவது உண்டு.

இந்தக் காப்பை அல்லது விலங்கை கையில் அல்லது காலில் சிறிய வளையமாக மாட்டி விடுவார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரி வந்து உரிய முறையைப் பயன்படுத்தினால்தான் அதைக் கழற்ற முடியும். இல்லையேல் உடல்பாகம் போல அது உங்களுடன் இருக்கும். அதில் இருக்கும் நுணுக்கமான 'சென்ஸர்' மூலம் உங்களின் நகர்வு முழுவதும் உங்களுக்குத் தெரியாமலேயே கணினியில் பதிவாகிக் கொண்டிருக்கும். நீங்கள் எங்கிருக்கின்றீர்கள் என்பதை கணினித் திரையிலேயே அவதானிக்க முடியும்.

தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்படும் நபர்களைக் கண்காணிப்பதற்கு ஆயிரக் கணக்கில் படையினரைக் களத்தில் இறக்கத் தேவையில்லை. உங்களை வீட்டில் விட்டு விட்டு, அதிகாரி அலுவலகத்தில் இருந்தபடி கணினித் திரையில் உங்கள் நகர்வுகளைக் கண்காணிக்க முடியும். தனிமைப்படுத்தல் காலம் முடிந்து, விடயம் திருப்தி என்றதும், அதிகாரிகள் வந்து காப்பைக் சுழற்றிக் கொண்டு போய் விடுவார்கள்.

அப்படிக் காப்பு அணிந்த வரைக் கண்டால் இவர் தனிமைப்படுத்தளுக்குரிய நபர் என்று ஏனையோரும் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளமுடியும்.

புதுசு, புதுசாக எத்தனை விடங்கள் தாம் கண்டு பிடிக்கின்றார்கள்...!

–மின்னல்–

## சிப்பாய்க்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்று ஏற்பட்டுள்ளது.

சாலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அவிசாவளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஐ.டி.எச்.வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதனையடுத்து சாலாவ, அவிசாவளை வைத்தியசாலைகளில் அவருக்குச் சிகிச்சையளித்த தாதியர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவருக்கு எங்கே, எப்போது, யார் மூலம் தொற்று பரவியது என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடக்கின்றன. சுமார் 200 பேருக்கும் மேற்பட்டோருடன் அவர் பழகியுள்ளமையால் அவர்கள் தொடர்பிலும் தகவல்கள் தேடப்படுகின்றன.

இதனையடுத்து சிப்பாய் வசித்த அவிசாவளை கஹாஹேன பகுதியிலும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சுகாதாரத் தரப்பு தயாராகி வருகிறது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 23 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 04 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த ஒருவர் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவர், ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த மூவர், முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த நால்வர், புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஐவர் என நாற்பத்தொருவர் தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவற்றில் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொரோனாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா வைரஸ் தொற்றுநோயின் பாதிப்பு ஏற்பட்டது.

எனினும், இலங்கை கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் மத்தியிலேயே இந்த பேரிடருக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற மோசமான ஆட்சி காரணமாக எமது கடன் சுமை 71 வீதம் இதனால் அதிகரித்தது. ரூபாயின் பெறுமதி 30 வீதம் இதனால் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார வளர்ச்சி வேகம் 2.7 வீதம் வரை குறைவடைந்தது. 2019 நவம்பரில் நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று புதிய அரசாங்கமொன்றை அமைத்த போதிலும், எமக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமையினால், கடந்த அரசாங்கத்தின் மருந்து மற்றும் உர வழங்குனர்களுக்கு நிலுவைப் பணத்தைச் செலுத்துவதற்கேனும் இடைக்கால கணக்கறிக்கையொன்ற நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலையேற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 150(3) ஆம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதிக்கு கிடைக்கும் நிதி தொடர்பான ஏற்பாடுகள் மாத்திரமே ஆறுதலாக உள்ளன. இந்த அனைத்துப் பாதகமான நிலைமைகளின் மத்தியிலேயே நாம் கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. கடந்த மார்ச் 11 ஆந் திகதி முதலாவது கொரோனா நோயாளி அடையாளங் காணப்பட்டவுடன், நாம் நோயினை முன்னரே இனங்காணுதல், நோயாளிகளை வேறுபடுத்தி சிகிச்சையளித்தல், அபாயத்தை எதிர்நோக்கிய நபர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தல், நோயாளிகளுடன் பழகிய நபர்களைக் கண்டறிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தினோம். எமது வாழ்க்கையில் இவ்வாறானதொரு நடவடிக்கையை ஒருபோதும் கண்டதில்லை. நோய் பரவுவதைத் தடுப்பதற்காக பல வாரங்கள் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியேற்பட்டது.

நாடு முழுவதும் தமது வீடுகளிலிருந்து வெளியேற முடியாத மக்களுக்கு உணவு, மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றைத் தயாரிக்க வேண்டியேற்பட்டது. குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு உதவி வழங்க வேண்டியேற்பட்டது. நாட்டின் உற்பத்திச் செயற்பாட்டை நடத்திச் செல்வதற்காக விவசாயிகள், மரக்கறி விவசாயிகள் மற்றும் மீனவர்களின உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டது. இந்த அனைத்தையும் ஒரே தடவையில் மிகவும் குறுகிய காலப்பகுதியில் ஒழுங்குபடுத்திக் கொள்ள முடிந்தமை உண்மையில் முகாமைத்துவத்தின் பிரதிபலனாகும்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள வெற்றியை இன்று முழு உலகமும் ஏற்றுக்கொள்கிறது. ஜனாதிபதி அவர்கள் இது தொடர்பாக தனித்துவமான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். எமது அரசாங்கத்தின் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாட்தொகுதியினர் முழு உலகினதும் கவனத்தை ஈர்த்துள்ளனர். நோயாளிகள் பழகிய நபர்களைக் கண்டறிவதில் எமது உளவுப் பிரிவு வெளிப்படுத்தியுள்ள திறமை, அர்ப்பணிப்புக் காரணமாகவும், தனிமைப்படுத்தல் செயற்பாட்டை மேற்கொண்டு செல்வதில் முப்படையினர் வெளிப்படுத்தியுள்ள வினைத்திறன் காரணமாகவும் நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் உள்ளிட்ட அனைத்து மட்டங்களிலான அரச ஊழியர்களும் கொரோனா தடுப்பு வேலைத்திட்டத்தின் வெற்றிக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளனர். இன்று கொரோனா வைரஸ் காரணமாக பாதுகாப்பற்றதாக மாறியுள்ள உலகில் எமது நாடு மிகவும் பாதுகாப்பான இடமாக மாறியுள்ளது. அழிக்கப்பட்ட பொருளாதாரம், இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்திற்கு இடையூறு விளைவிக்கின்ற, நாட்டின் மீது அன்பு இல்லாத சந்தர்ப்பவாத எதிர்க்கட்சியொன்று இந்த நாட்டில் உள்ள நிலைமையிலேயே நாம் இவ்வாறான கட்டத்தை அடைந்துக்கொண்டோம்.

தனிமைப்படுத்தலுக்குச் செல்வதை நிராகரித்தவர்களை ஊக்குவித்தமை மூலம் எதிர்க்கட்சித்தலைவர் ஆரம்பத்திலிருந்தே கொரோனா தடுப்பு வேலைத்திட்டத்தினைச் சீர்குலைக்க முயற்சித்தார். அதன் பின்பு, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அரச நிதியை செலவிடுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை எனக் கூறி அவர்கள் சுகாதார சேவை உள்ளிட்ட அனைத்து அரச சேவைகளையும் சீர்குலைக்க முயற்சித்தனர். புதிய நாடாளுமன்றம் ஜூன் இரண்டாம் திகதிக்கு முன்னர் கூட வேண்டும் எனவும், நாடாளுமன்றத் தேர்தலை அதற்கு முன்னர் நடாத்த முடியாது எனவும், அதனால் நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிடப்பட்ட வர்த்தமானியை ரத்துச் செய்ய வேண்டும் எனவும் இன்று அவர்கள் கூறி வருகின்றனர்.

நல்லாட்சி அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்தமையை நாம் அறிவோம். வழக்குகள் இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கேனும் தேர்தலை நடாத்துவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தமையினால் மாத்திரமே நீதிமன்றம் சென்று தேர்தலை குறிப்பான திகதியின்றி ஒத்திவைக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. 2017 ஆம் ஆண்டு மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கு சில நாள்களே இருந்த சமயத்தில், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதைத் தடுப்பதற்காக நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல் முறைமையை மாற்றியமைத்தது.

அந்த திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம் என சட்டமா அதிபர் தெரிவித்தபோது, அவர்கள் நாடாளுமன்றத்தின் நடைக்கூடத்தில் மேற்கொண்ட பேரம் மூலம் வாக்குகளுக்காக கொள்கைகளைக் காட்டிக்கொடுத்து தேவையான பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டனர்.

அந்த இழிவான கொடுக்கல் வாங்கலின் பிரதிபலனாக 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ சதவீதம் 40 வீதமாகக் காணப்பட்டதுடன், அதன் ஒரு மாதத்தின் பின்பு நிறைவேற்றப்பட்ட மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ சதவீதம் 50 சதவீதமாகக் காணப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் மனுச் சமர்ப்பித்து,

பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நாடாளுமன்றத் தேர்தலை ரத்துச் செய்த அரசியல் கட்சிகள் உள்ள உலகின் ஒரே ஜனநாயக நாடு இலங்கையாகும்.

தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு இன்று மேற்கொள்ளும் முயற்சி அந்த இழிவான வரலாற்றின் ஒரு நீட்சியாகும்.

நாட்டில் எந்த சந்தர்ப்பத்திலாவது பொது சமூக வாழ்வு மீண்டும் ஆரம்பமாக வேண்டியுள்ளது. எமது 25 நிர்வாக மாவட்டங்களில், பதினொரு மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றுள்ள ஒருவரேனும் இல்லை. மேலும் ஏழு மாவட்டங்களில் தொற்றுடைய ஒருவர் அல்லது இருவரே அடையாளங் காணப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு மாவட்டங்களில் ஐந்திற்கும் ஏழுக்குமிடையிலான எண்ணிக்கையைக் கொண்ட நபர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். ஐந்து மாவட்டங்களில் மாத்திரமே குறிப்பிடத்தக்களவான நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் இரண்டாம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல் நடாத்தப்படும் திகதி ஏப்ரல் 25 எனவும், புதிய நாடாளுமன்றம் முதலாவது கூடும் திகதி மே 14 எனவும் அறிவித்தார். அதன் பிறகு பத்து நாள்களின் பின்பு முதலாவது கொரோனா நோயாளி கண்டறியப்பட்ட சந்தர்ப்பத்தில் தேர்தல் நடாத்தப்படும் திகதியை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படவில்லை. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவுக்கு ஏற்ப, ஜனாதிபதி குறிப்பிட்ட திகதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்த முடியாவிடின், அதற்கு வேறொரு திகதியைக் குறிப்பதற்கான கடப்பாடு தேர்தல் ஆணைக்குழுவுக்கு காணப்படுகிறது.

திகதியொன்றைக் குறிப்பிடாது நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடையாது. எதிர்காலத்தில் பல வாரங்களில் அல்லது பல மாதங்களில் இடம்பெற முடியுமான அல்லது இடம்பெற முடியாத விடயங்கள் தொடர்பாக ஏற்படுத்திக்கொள்ளும் ஊகங்களின் அடிப்படையில் கட்டாயமாகப் பின் பற்ற வேண்டிய சட்டரீதியான ஏற்பாடுகளை ஒதுக்கித்தள்ளி விட முடியாது.

தேர்தல் ஆணைக்குழு முதலில் 24(3) ஆம் பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பினை சட்டத்திற்கு ஏற்புடையவாறு நிறைவேற்றி விட்டு, அதன் பின்பு கலந்துரையாட வேண்டிய விடயம் ஏதாவது இருப்பின், அது தொடர்பாக கவனஞ் செலுத்த வேண்டும்.

## தேர்தலுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிர்ணயிப்பதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலின் முன்னதாக மக்களைக் கூட்டி தேர்தல் பிரசாரம் செய்வது, வாக்கெடுப்பில் மக்கள் கலந்துகொள்வது போன்றவை மக்களை ஆபத்தில் சிக்க வைத்து விடலாமென்பதையும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், முறையான தேர்தல் பிரசாரம் நிகழ்த்தப்பட்டு தேர்தல் நடத்தப்படுவதே முறையான ஜனநாயக நடைமுறை என்பதையும் கூட்டமைப்பினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு வீட்டிலேயே இருப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் அரியாலை தேவாலயத்தில் சுவிட்ஸர்லாந்திலிருந்து வருகை தந்த போதகரால் கடந்த மார்ச் 15ஆம் திகதி நடத்தப்பட்ட ஆராதனையில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டனர்.

சுவிஸ் போதகருடன் நெருக்கமாகப் பழகிய மானிப்பாயைச் சேர்ந்த போதகர், சுவிஸ் போதகரின் சாரதி உள்ளிட்ட அரியாலை மற்றும் மானிப்பாய், வவுனியாவைச் சேர்ந்த 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி நிறுவன தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 20 பேரிடமும் ஏப்ரல் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மாதிரிகள் பெறப்பட்டு முதல்கட்டப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் மானிப்பாயைச் சேர்ந்த மதபோதகர் உள்பட 6 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அவர்கள் 6 பேரும் வெலிகந்தை வைத்தியசாலை கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் இருவரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

## பாதிப்புற்றோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோயியல் பிரிவு அறி வித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 254 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

86 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

161 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கொரோனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அச்சுறுத்தல் முற்றிலுமாக நீங்கிவிட்டதாக எனது பெயரை மேற்கோள் காட்டி சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவ்வாறு எந்தக் கருத்தையும் நான் வெளியிடவில்லை. கொரோனாவின் அபாய கட்டத்தைக் கடந்துவிட்டோம் என்றே கூறியிருந்தேன். இதன் அர்த்தம் கொரோனா வைரஸ் ஆபத்து – அச்சுறுத்தல் –இலங்கையில் முழுமையாக நீங்கவிட்டது என்பதல்ல.

இப்போதும் வைரஸ் தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் ஆபத்து நீங்கிவிட்டதாகக் கூறமுடியாது – என்றார்.

இதேவேளை கொரோனா வைரஸ் குறித்த பி.சி.ஆர் சோதனைகள் விஞ்ஞான அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காங்கேசன் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒன்றாக இருந்தமையால் தொற்றுப் பரவியதா?

## இல்லை என்று மறுக்கின்றார் இராணுவத் தளபதி

காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவர்களை ஒன்றாக வைத்திருந்தமையால் தான் அங்குள்ள ஏனையோருக்கும் கொரோனா தொற்று பரவியது என்ற வாதத்தை தாம் நம்பத் தயாரில்லை என இராணுவத் தளபதியும், கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்கள் இராணுவத்தின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குகின்றன. இராணுவத்தினர் இதனை நடத்துவதனால், இராணுவத்தினர் மீது ஏற்கனவே விமர்சனங்கள் இருப்பதனாலும், இப்படியான குற்றச்சாட்டுக்கள் வரும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அந்தந்தத் தனிமைப்படுத்தல் நிலையங்களின் பொறுப்பு இராணுவ அதிகாரிகளை ஆராயப் பணித்துள்ளேன்.

அத்துடன் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஒவ்வொரு நாளும்



பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளேன். எவ்வாறாயினும், வடக்கில் கொரோனா பரவுவதற்கு சுவிஸ் மத போதகர்தான் காரணம். – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புலனாய்வு பிரிவினர் எனக் கூறி சோதனை நடத்திய 2பேர் கைது

புலனாய்வு பிரிவினர் எனக் கூறி, வாகனங்களைப் பரிசோதித்த இருவர், நேற்று மீகஹாதென்ன பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனரென மீகஹாதென்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ வீரர் ஒருவரும் மற்றுமொரு நபருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரான இராணுவ வீரரிடமிருந்து இராணுவத்தில் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்கள் மற்றும் 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம். என்பன மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொரகாதுவ வீதி சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமையவே மீகஹாதென்ன பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்., இவர்கள் மத்துகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ வீரர் கொம்பனித்தெரு இராணுவ முகாமின் சாரதியென்றும், இங்கு கடமையாற்றும் பிரிகேடியர் ஒருவருக்குச் சொந்தமான நெலுவ பிரதேச வீடொன்றில் தற்போது பணியாற்றி வருகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். இந்து இளைஞர் துறையின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம்





யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரிஇளைஞர் துறையினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று சனிக்கிழமை யாழ் வைத்தியசாலை இரத்த வங்கியில் இடம்பெற்றது. இந்த முகாமில் 14 குருதிக் கொடையாளர்கள் கலந்து இரத்தானம் வழங்கினர். தற்போதைய நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சமூக இடைவெளியைப் பேணும் வகையில் ஒரு தினத்தில் மட்டுபடுத்தப்பட்ட அளவிலான குருதிக் கொடையாளர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும்.

தொடர்சியாக நாளை திங்கள்கிழமை, 23 ஆம் திகதி வியாழக்கிழமை, அடுத்த நாள் 24ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆகிய மூன்று தினங்களும் குருதிக் கொடை முகாம் நடைபெறுமென யாழ் இந்து இளைஞர் துறையினர் தெரிவித்துள்ளனர். கலந்துகொள்ள விரும்பும் யாழ் இந்து பழைய மாணவர்கள் மற்றும் தன்னார்வல குருதிக் கொடையாளர்கள் 0775127096/ 0767922193 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் வரவை உறுதிப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மற்றும் குருதிக் கொடை வழங்க முன்வருவோர் பொலிஸ் அனுமதி பத்திரமாக குருதிக்கொடை புத்தகத்தினைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோத மதுபாவனை தேசிய ரீதியில் அதிகரிப்பு

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டத்தை அடுத்து நாடளாவிய ரீதியில் சட்டவிரோத மதுபாவனை அதிகரித்துள்ளதாக மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

“நாங்கள் எதிர்பாரக்காத அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலை கொவிட் 19 ஐ போன்றது அல்ல. இந்த சூழ்நிலையில் சமூக இடைவெளி என்பது பின்பற்றப்படுவதில்லை” – என மதுவரித் திணைக்களத்தின் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

குறிப்பாக சட்டவிரோத மதுபாவனை உற்பத்தி, விற்பனை அதிகரித்துள்ளது.

ஊரடங்கு நேரத்தில் அரச சாராயம் விற்பனை மற்றும் விநியோகம் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

எனவே சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்கான விசேட திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இதுவரை கைதானவர்களின் விபரத்தையும் மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

# விவசாய இரசாயனப் பொருள்களை எடுத்துச் சென்ற இரண்டு பேர் கைது

அத்தியாவசிய பொருள்கள் என்ற போர்வையில் விவசாய இராசாயனப் பொருள்களைக்கொண்டுசென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி – புனான் பகுதியில் கடற்படையினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்திற்கிடமான லொறியொன்றை அவதானித்த கடற்படையினர் அதனை சோதனைக் குட்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த லொறியில் அத்தியாவசிய பொருள்களுடன் எந்த வித சுகாதார பாதுகாப்புமின்றி ஏற்றிச் செல்லப்பட்ட விவசாய இரசாயன பொருள்கள் அடங்கிய போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# வீதிச் சோதனையில் வசமாகச் சிக்கிய நபர்

வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சூரியவெவ பொலிஸ் அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

அவரது பையைப் பொலிஸார் சோதனை செய்ததில் 5 மொபைல் போன்கள், 200,000 ரூபாரொக்கம் மற்றும் 18 சிம் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சந்தேக நபர் கடந்த சில நாள்களில் தனமால்வில பொலிஸ் பகுதியில் பல வீடுகளில் வசிப்பவர்களை அச்சுறுத்தினார் எனவும், சொத்து மற்றும் நகைகளை கொள்ளையடித் தார் எனவும் அவரிடம் மேற்கொண்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட சொத்துகளில் பணம், நகைகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் ஆகியவை அடங்கும்.

சந்தேக நபர் சிறையிலிருந்து தப்பிச் சென்று மறைந்திருந்த ஒருவருடன் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் எம்பிலிப்பிட்டி பகுதியில் வசிக்கும் 20 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஒலுவிலில் அடையாளம் காணப்பட்ட மூவர் இரணவில நோயாளிகள் சிகிச்சை பிரிவுக்கு

ஒலுவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் மூவருக்கு கொரோனோ தொற்று இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சிலாபம் பகுதியில் அமைந்துள்ள இரணவில கொவிட் நோயாளிகளுக்கான சிகிச்சை பிரிவுக்கு நேற்றிரவு அவர்கழ்ல் அனுப்பப்படவிருந்தனர் எனவும் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கு.சுகுணன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் கொரோனா வைரஸ் நிலைமை தொடர்பாக நேற்றிரவுமாலை 6 மணியளவில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொர்ந்தும் அவர் கூறுகையில் –

எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் ஒலுவில் பகுதியில் கடற்படையினரால் துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் 80பேர் கொழும்பு, ஜாஎல பிரதேசத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு இருந்தார்கள்.

முதலாவது தொகுதியில் 28 பேரும், இரண்டாவது தொகுதியில் 52 பேரும் ஆக 80 பேர் கொண்டுவரப்பட்டார்கள். இந்த முதலாவது தொகுதியில் கொண்டுவரப்பட்டிருந்த 28 பேரில் 5 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை கண்டறியப்பட்டு ஏற்கெனவே சிலாபத்தில் அமைந்துள்ள இரணவில பகுதியில் உள்ள பராமரிக்கும் பிரிவுக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து நேற்று நாங்கள் முதல் தொகுதியில் வந்த 23 பேருக்கான மாதிரிகளை எடுத்து ஆய்வுக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பினோம்.

அதன் மூலமாக அந்த 23 பேரில் 3 பேருக்கு நோய் தொற்று உள்ளதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆகவே அந்த 23 பேரில் அந்த மூவரையும் நாங்கள் தனிமைப்படுத்தி தற்போது வைத்திருக்கின்றோம். அவர்களை இன்னும் ஒரு மணி நேரத்தில் நாங்கள் சிலாபத்தில் அமைந்துள்ள இரணவில பகுதியில் அமைந்துள்ள கொரோனா தொற்றாளர்களுக்கான சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்ப இருக்கின்றோம்.”

அங்கு அவர்கள் பராமரிக்கப்படுவார்கள். ஏனைய 52 பேருக்குமான ஆய்வுகள் திங்கட்கிழமை மாதிரிகள் எடுக்கப்பட்டு, கண்டி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் என மேலும் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com



## அபாயகரமான தீர்மானம்

அரசு தனது அரசியல் இலக்கை – நோக்கத்தை – எட்டுவதற்கான ஆட்டத்தை ஆரம்பித்து விட்டது என்பது தெளிவாகியுள்ளது.

இவ்வளவு அவசரப்பட்டு ஊரடங்கை விலக்கும் அரசின் தீர்மானத்துக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் நோக்கம் – கருத்து – யாது என்பது தொடர்பில் கற்றறிந்தவர்கள் புருவத்தை உயர்த்துகின்றனர்.

தேர்தல் ஆணையம் நாளை கூடவிருக்கின்றது. அதற்கு முன்னர், கொரோனா ஆபத்து நீங்கி விட்டது, நாடு சுமூக நிலைக்கு வந்து விட்டது, இயல்பு நிலை ஏற்பட்டு விட்டது என்று பகிரங்கப்படுத்தி, வெளிப்படுத்துவதன் மூலம், தேர்தல் திகதியை நிர்ணயிப்பதா என்பது தொடர்பில் தேர்தல் ஆணையத்தின் தீர்மானித்தில் செல்வாக்கு – அழுத்தம் – பிரயோகிக்கும் ஓர் அறிவிப்பாகவே ஊரடங்கு நீக்கம் பற்றிய இந்தத் திடீர் பிரகனடத்தை நோக்க வேண்டியுள்ளது.

அந்த முடிவிலும் கூட இன்னும் – இந்தச் செய்தி எழுதப்படும் வரை – சில தெளிவுபடுத்தல்கள் இல்லை.

சரி, ஊரடங்கு நீக்கப்படுகின்றது. அல்லது தளர்த்தப்படுகின்றது. ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 15 மணி நேரம் தளர்த்தப்பட்டுகின்றது. ஒன்பது மணி நேரம் மட்டுமே மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டும் என்பது புதிய கட்டுப்பாடு.

பதினைந்து மணி நேரம் தாராளமாக மக்களை ஊடாட விட்டுவிட்டு, இரவில் ஒன்பது மணி நேரம் ஏன் தடுக்க வேண்டும்? அந்தத் தடை மூலம் – அல்லது பகுதி நேர முடக்கம் வாயிலாக – அதிகாரத் தரப்பு எதை ஈட்டப்போகின்றது? அல்லது எதைச் சாதிக்க எண்ணுகின்றது?

ஊரடங்கை நீக்குவதன் மூலம், மக்கள் முடக்கத்தை விலக்கிக் கொள்வதாயின், மக்கள் முண்டியடிக்காமல் – நெருக்கிப் பிடிக்காமல் – வழமையான விடயங்களைச் செய்வது என்றால் அதற்கு நேரத்தைக் குறுக்கிக் கொள்ளாமல் தாராளமாகக் கால அவகாசத்தைத் கொடுப்பதுதானே நல்லது... ?

பதினைந்து மணி நேரத்தில் செய்வதை 24 மணி நேரத்தில் செய்ய அனுமதித்தால், மக்கள் ஒன்றுபட்டு முண்டியடிக்காமல், விலகி நின்று, சமூக இடைவெளியைப் பேணுவதற்கு வாயப்பாக நேர நெருக்கடி குறையும் அல்லவா?

இவ்வளவு காலமும் ஊரடங்கு, முடக்கம் என்று அறிவித்த பின்னர் தளர்வைத் தாராளமாக வழங்காமல் இரவு நேர ஊரடங்கை – அதுவும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை அது தொடருவதாக – நீடிப்பதாக – அறிவிப்பு விடுத்தமை இவ்விவகாரத்தில் வழமையான இராணுவமயப்படுத்தப்பட்ட மனோ நிலையைத்தான் வெளிப்படுத்துகின்றது. அவ்வளவுதான்.

இதுவரை காலமும் ஊரடங்கு உத்தரவு பற்றிய அறிவித்தலில் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்கு மக்கள் செல்வதற்குத் தடை என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், நேற்று விடுக்கப்பட்ட ஊரடங்குத் தளர்வு பற்றிய அறிவிப்பிலோ, அதன் பின்னரான வழிகாட்டுதல் குறிப்பிலோ அது பற்றிய தெளிவான விவரம் ஏதுமில்லை.

கொழும்பு உட்பட பல மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையானோர் வெளி மாவட்டங்களில் இருந்து வந்து சிக்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் போக்குவரத்துக்கான அனுமதி குறித்து இந்த ஊரடங்கு அறிவித்தலில் ஏதும் இல்லை.

கொரோனா வைரஸ் முடக்கத்தினால் நாட்டுக்குப் பெரும் பின்னடைவு, பொளாதாரப் பாதிப்பு. நாள் செல்லச் செல்ல அந்தச் சுமையை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சுமக்க வேண்டியிருக்கப் போகின்றது.

அப்போது மக்களின எரிச்சல், எதிர்ப்பு அரசுத் தரப்புக்கு எதிராகத் திரும்பக் கூடும். அதற்கு முன்னர் தேர்தலை நடத்தி முடித்து விட்டால் தனது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம் என்று ஆட்சித் தரப்பு துடிக்கின்றது.

அந்த அவசரத் தேர்தலுக்கான, அவசர முடிவுதான் இந்த ஊரடங்குச் சட்ட நீக்கம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தனது இராணுவப் பாணி அணுகுமுறை மூலம் நல்ல பெயரை சம்பாதித்துக் கொண்ட கோட்டா தரப்பு, தேர்தலை நடத்தி முடிப்பதற்காக இப்போது அவரசப்பட்டு எடுத்திருக்கும் தனது ஊரடங்கு விலக்கல் நடவடிக்கை மூலம் எல்லாவற்றையும் – மக்கள் ஆதரவு, நற்பெயர் உட்பட அனைத்தையும் – தொலைக்கப் போகின்றது போலவே படுகின்றது.

தனது அரசியல் நோக்கங்கள், இலக்குகளை எட்டுவதற்கான இந்த அபாயகரமான முடிவை – 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போன்ற ஆபத்தான தீர்மானத்தை – நாட்டின் தலைவர் எடுத்திருக்கின்றார்.

நாட்டு மக்கள்தான் பாவம்!

### தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமையாகவும் செயற்படுமாறு அரசு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் தொழிலுக்காகச் சென்றுவருவதைத் தவிர வேறு சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்துகொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் மற்றும் திரையரங்குகள் மீண்டும் அறிவிக்கும் வரை மூடப்பட்டிருக்கவேண்டும். அனைத்து வகையான விழாக்கள், சுற்றுப்பயணங்கள், யாத்திரைகள், களியாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் போன்றவை மீண்டும் அறிவிக்கும் வரை தடை செய்யப்பட்டுள்ளன.

மக்கள் ஒன்றுகூடுவது வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்குத் தடை என்பதால் சமய விழாக்களையும் இடைநிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் வழமையான ஒழுங்கில் செயற்படும்.

கொழும்பு மாவட்டத்தின் உள்ளே அரச நிறுவனங்களில் ஊழியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும். ஏனைய மாவட்டங்களில் உள்ள அரச நிறுவனங்களில் 50 வீதமான ஊழியர்கள் கடமைக்கு சமுகமளிக்கவேண்டும். அனைத்து அரச நிறுவனங்களிலும் பணிக்குச் சமுகமளிக்காத ஊழியர்கள் வீட்டிலிருந்து தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நிறுவனத்திலும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் யார் கடமைக்கு சமுகமளிக்கவேண்டும் என்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க முடியும். ஒரு நாளில் பணிக்கு சமுகமளிக்கும் மூன்றில் ஒரு பகுதியினர் மற்றும் 50 வீதமானவர்களுக்கு பதிலாக அடுத்த நாளில் வேறு பிரிவினரை தெரிவு செய்வதற்கு நிறுவனத் தலைவர்களுக்கு முடியும்.

அலுவலகங்களைத் திறந்து நடத்திச் செல்லுகின்ற போது கோரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ள நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு தேவையான வசதிகளை வழங்குவது நிறுவன தலைவர்களின் பொறுப்பாகும்.

தனியார் துறை நிறுவனங்கள் முற்பகல் 10.00 மணிக்கு திறக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களில் கடமைக்கு சமுகமளிக்க வேண்டிய எண்ணிக்கை மற்றும் யார் சமுகமளிக் வேண்டும் என்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும். இந்நிறுவனங்களும் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

மீண்டும் திறக்கப்படும் அலுவலகங்களில் ஊழியர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்க போக்குவரத்துச் சபை மற்றும் ரயில் சேவை ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அரசின் ஏனைய நிறுவனங்களில் கடமைக்குச் சமுகமளிக்கும் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பினும் அரச போக்குவரத்து சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் அனைத்து ஊழியர்களும் கடமைக்கு சமுகமளிப்பது கட்டாயமானதாகும்.

பஸ்கள், வான் அல்லது ரயில்களில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையில் அரைவாசி அளவு மட்டுமே பயணம்செய்ய வேண்டும். அனைத்து வாகனங்களும் கிருமி தொற்றுநீக்கத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த நிபந்தனைகளின் கீழ் தமது பணிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அரசு தனியார் துறைப் போக்குவரத்துநிறுவனங்களிடமும்கேட்டுக்கொண்டுள்ளது.

### யாழ்ப்பாணத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை திங்கள்கிழமை காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறப்படுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்படும் மாவட்டங்களில் மீள் அறிவித்தல் வரும் வரை இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில் –

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கோகலை, புத்தளம் மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இவ்வாறு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படவுள்ளது.

இந்தப் பகுதிகளில் தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மாத்திரமே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும்.

இந்த மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை தினமும் இரவு 8 மணி முதல் மறு நாள் அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கண்டி, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அலவத்துகொடை, அக்குரணை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த 3 மாவட்டங்களினதும் ஏனைய பொலிஸ் பிரிவுகளில் ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் தினமும் காலை 5 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் இரவு 8 மணிக்கு மீண்டும் பிறப்பிக்கப்படவுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்படாத பகுதிகள்:–

கொழும்பு மாவட்டம் – கொட்டாஞ்சேனை, கிராண்ட்பாஸ், பம்பலப்பட்டிய, கெசல்வத்த, மருதானை, கொத்தட்டுவ, முல்லேரியா, வெல்லம்பிட்டிய, கலிகிஸை, தெஹிவளை, கொஹுவல.

கம்பஹா மாவட்டம் – ஜாஎல, கொச்சிக்கடை, சீதுவை.

புத்தளம் மாவட்டம் – புத்தளம், மாரவில, வென்னப்புவ.

களுத்துறை மாவட்டம் – பண்டாரகம, பயகல, பேருவளை, அளுத்கம.

இந்த மாவட்டங்களின் ஏனைய பொலிஸ் பிரிவுகளில் ஏப்ரல் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 5 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங் குச் சட்டம் இரவு 8 மணிக்கு மீண்டும் பிறப்பிக்கப்படவுள்ளது.

ஊரடங்கு உத்தரவு அகற்றப்பட்ட பகுதிகளில்கூட, பிரதானசாலைகள் வேலைவாய்ப்பு உள்ளிட்ட அத்தியாவசிய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்து வேலைவாய்ப்பு தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பிரதேசம் அல்லது ஒரு கிராமம் இடர்நிலைக்குள்ளான பிரதேசமாக இனம்காணப்பட்டால் அப்பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட இடமுள்ளது. ஏதேனும் ஓரு பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக குறிப்பிடப்பட்டிருந்தால் எவரும் அங்கு உள்வருவது மற்றும் வெளியேறுவது முற்றாக தடை செய்யப்படும்.

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் பொலிஸ் பிரிவுகளில் அத்தியாவசிய சேவைகளுக்காக பிரதான வீதிகளினூடாக பயணம் செய்யமுடியும். ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலும் பிரதான வீதிகளை தொழிலுக்காக சென்று வருதல் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும். மாவட்டங்களுக்கிடையிலான பயணம் தொழில் தேவை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைக்காக மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

### ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமுகமளித்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக வெளியில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கோட்டபயராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமது முகப்புத்தக வலைத்தளத்திலேயே அவர் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

நாம் பின்பற்றிய கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக கிடைத்த முன்னேற்ற நிலைமைகளின் மூலமே இந்த முடிவை எடுத்ததோடு பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்ட வறிய மற்றும் இடர் நிலைக்குள்ளான மக்கள் பிரிவினரின் வாழ்க்கையை பாதுகாப்பது மற்றுமொரு நோக்கமாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைக்கு அமைய செயற்படுவதன் மூலமே இந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க முடியும் என்பதை நான் உங்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். – என பதிவிட்டுள்ளார்.

### நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்படும் தினம் தொடர்பாக ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலை நடத்தும் தினம் குறித்து தேர்தல் ஆணைக்குழு இதுவரை தீர்மானிக்கவில்லை. தேர்தல் நடத்தப்படும் தினம் எனக் கூறி பல்வேறு வதந்திகள் பரவி வருவதுடன் சமூக வலைத்தளங்களிலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனைத்து நிலைமைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடத் தேர்தல் ஆணைக்குழு நாளை கூடவுள்ளது – என்றார்.

# கொவிட் - 19 உள்ள வௌவால்கள் வுஹானிலேயே இல்லை: ட்ரம்ப்!

## கொரோனா எப்படி வந்தது என்று விசாரிப்போம் என்கிறார் அமெ. அதிபர்

வௌவ்வால்களிடம் இருந்து கொரோனா வைரஸ் பரவவில்லை, சீனாவின் வுஹான் ஆய்வகத்திலிருந்தே கொவிட் - 19வைரஸ் தப்பித்துள்ளது என்று வரும் செய்திகளை அப்படியே புறந்தள்ளிவிட முடியாது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுவரை சீனாவின் வுஹான் நகரில் உள்ள ஈரச் சந்தைகள் என வர்ணிக்கப்படும் விலங்குகளின் இறைச்சிச் சந்தையில் விற்பனையான வௌவால்களிடம் இருந்துதான் பரவியதாகக் கூறப்பட்டு வந்தது. சீன அரசும் வௌவால்கள் மூலம் இந்த வைரஸ் பரவியதாகத் தெரிவித்தது. மருத்துவர்களும் அவ்வாறே நம்பி வருகிறார்கள்.

ஆனால், அமெரிக்காவிலிருந்து வெளிவரும் புகழ்பெற்ற நாளேடான தி வோஷிங்டன் போஸ்ட், தி ஃபாக்ஸ் நியூஸ் அலைவரிசை ஆகியவை இரகசியமாகச் சேகரித்த செய்திகளின் அடிப்படையில் சார்ஸ் - கொவிட் - 19 வைரஸுகள் வௌவால்களிடம் இருந்து பரவவில்லை, அது சீனாவின் வுஹான் நகரில் இருக்கும் சீன அரசின் ஆய்வகங்களிலிருந்து கவனக்குறைவு காரணமாகவே பரவின எனச் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக இதுவரை எந்தவிதமான கருத்தையும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவிக்காமல் இருந்தார். இந்த நிலையில் அதிபர் ட்ரம்பிடம் வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் ஆய்வகத்திலிருந்து பரவியதாக செய்திகள் வெளியாகியுள்ளதே, அது குறித்து அமெரிக்கா விசாரிக்கத் திட்டம் வைத்திருக்கிறதா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

நாங்கள் தொடர்ந்து அந்தச் செய்திகளை கவனித்து வருகிறோம், ஏராளமானோரும் இதைக் கவனித்து வருகிறார்கள். நிச்சயம் இது அனைவரையும் சிந்திக்க வைக்கிறது.

குறிப்பிட்ட வகை வௌவ்வால்களைத்தான் கொரோனா வைரஸோடு தொடர்புபடுத்திப் பேசுகிறார்கள். ஆனால், அந்த வகை வௌவ்வால்கள் அந்த பகுதியிலேயே இல்லை. இதை உங்களால் நம்பமுடிகிறதா?

அந்த வகை வௌவ்வால்கள் வுஹானின் ஈரச் சந்தைகளில் விற்கப்படவும் இல்லை. சீனா குறிப்பிடும் அந்த குறிப்பிட்ட வகை வௌவ்வால்கள், அந்த இடத்திலிருந்து 40 மைல்களுக்கு அப்பால்தான் வசிக்கின்றன.

இந்த விஷயத்தில் ஏராளமான புதிரான சம்பவங்கள் நடந்துள்ளன. இதுதொடர்பாக விசாரணைகள் நடந்து வருகின்றன. அது என்ன என்பதைக் கண்டுபிடிப்போம். எங்கிருந்து வேண்டுமானாலும் கொரோனா வைரஸ் வந்திருக்கட்டும், சீனாவிலிருந்து கூட வந்திருக்கட்டும், ஆனால் இன்று அந்த வைரஸால் 184 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வுஹானில் உள்ள 4ஆம் கட்ட அதிநவீன பாதுகாப்பு ஆய்வகங்களுக்கான உதவியை அமெரிக்கா முன்பே நிறுத்திவிட்டது, ஒபாமா அரசு 37 லட்சம் டொலர்கள் நிதியுதவி வழங்கியது. சீனாவுக்கு தொடர்ந்து ஆய்வகங்கள் நடத்த உதவி அளிக்கக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர்களும், செனட்டர்களும் கேட்டுக்கொண்டதால் அந்த உதவி நிறுத்தப்பட்டது எனத் தெரிவித்தார்.

ஆனால் ஃபாக்ஸ் நியூஸ் வெளியிட்ட செய்தியில், கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் நகர ஆய்வுக்கூடங்களிலிருந்து தப்பியதா என்பது குறித்து அமெரிக்க அரசு விசாரித்து வருகிறது. அமெரிக்க உளவுத்துறை இதுதொடர்பாக தகவல்களை ரகசியமாகச் சேகரித்து வருகிறது. விரைவில் அதுகுறித்த முழுமையான தகவல்கள் வெளியாகும் எனத் தெரிவித்துள்ளது.

## கொரோனா தரவுகளை அனைத்து நாடுகளுமே திருத்த வேண்டி வரும்

### உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

சீனாவைப் போன்றே மற்ற நாடுகளும் கொரோனா பாதிப்பு குறித்த தரவுகளை திருத்த வேண்டியிருக்கும் என உலக சுகாதார அமைப்பு சூசகமாகக் கூறி உள்ளது.

சீனாவின் வுகான் நகரை முதன் முதலில் தாக்கிய கொரோனா, இப்போது உலகம் முழுவதும் 210 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களுக்குப் பரவி 1.5 லட்சத்துக்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு வாங்கி உள்ளது.

சீனாவில் அதிகம் பாதிப்படைந்த வுகான் நகரில் கடைசி நிலவரப்படி, கொரோனா வைரசுக்கு பலியானோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 579 ஆக இருந்தது. நாடு முழுவதும் பலி எண்ணிக்கை 3 ஆயிரத்து 342 என்ற அளவில் இருந்தது. புதிய நோய்த்தொற்றும் வெகுவாக குறைந்திருப்பதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், வுஹான் நகரில் கொரோனாவுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் வெள்ளிக்கிழமை திருத்தம் செய்யப்பட்டது.

வுஹான் நகரில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 579 என்ற உயிரிழப்பு எண்ணிக்கை 3 ஆயிரத்து 869 ஆக மாற்றம் செய்யப்பட்டது. இது 50 சதவீத உயர்வு ஆகும். ஊரடங்கு காலத்தின்போது மருத்துவமனைக்கு வெளியே இறந்தவர்கள் மற்றும் வீடுகளில் தனிமைப்படுத்தலின்போது இறந்தவர்களின் பெயர்கள் விடுபட்டதாகவும், அந்த வகையில் வுஹான் நகரில் இறந்தவர்களின் பட்டியலில் மேலும் ஆயிரத்து 290 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் நாடு முழுவதும் மொத்தம் 4 ஆயிரத்து 632 பேர் பலியாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பாதிப்பு விவகாரத்தில் சீனா உண்மையை மறைக்கிறதோ என்ற கருத்துக்களும் சந்தேகங்களும் தொடர்ந்து எழுப்பப்பட்டு வந்த பின்னணியில் சீனாவின் புதிய அறிவிப்பு அதனை மேலும் வலுப்படுத்தியது.

இந்த நிலையில், "கொரோனா பாதிப்பு குறித்த தரவுகளில் சீனா திருத்தம் செய்திருப்பது, யாருடைய பெயரும் விடுபடாமல் அனைத்தையும் ஆவணப்படுத்தும் முயற்சி. கொரோனா பாதிப்புகள் மற்றும் இறப்புகள் அனைத்தையும் அடையாளம் காணும் பணி ஒரு சவால். பல நாடுகள் சீனா போன்று இதே சூழ்நிலையில் இருக்கப்போகின்றன என நினைக்கிறேன். எனவே உலக நாடுகள் கொரோனா பதிவுகளை மறுஆய்வு செய்து பார்க்க வேண்டும்" என்றார் உலக சுகாதார அமைப்பின் கொரோனா வைரஸ் தொழில்நுட்ப அமைப்பை சேர்ந்த மரியா வான் கெர்கோவ்.

உலக சுகாதார அமைப்பின் அவசரகால இயக்குனர் மைக்கேல் ரியான் கூறும் போது, "அனைத்து நாடுகளும் சீனாவைப் போன்றே செயல்படும். ஆனால், துல்லியமான புள்ளிவிவரங்களை சீக்கிரம் தயாரிக்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

## சுவீடன் இளவரசியும் கொரோனா பணியில்

### வைத்தியசாலையில் சுகாதாரப் பணியாளராக இணைந்தார்



சுவீடன் நாட்டு இளவரசி கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனையில் பணியாற்றத் தொடங்கியுள்ளார்.

கொலைகார கொரோனா வைரஸ் உலகையே அச்சுறுத்தி வருகிறது. இந்த கொடிய வைரசுக்கு உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் எகிறி வருகிறது.

கொரோனா வைரஸால் ஐரோப்பிய நாடுகள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. ஐரோப்பாவில் கொரோனா தாக்குதலுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தை கடந்துள்ள நிலையில், உயிரிழப்பு 1லட்சத்தை நெருங்கி வருகிறது.

ஐரோப்பிய நாடான சுவீடனில் இதுவரை 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆயிரத்து 200க்கும் அதிகமானோரின் உயிரை இந்த வைரஸ் பறித்துள்ளது.

இந்த நிலையில், நாட்டின் இளவரசி சோபியா, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும் மருத்துவமனையில் பணியாற்றத் தொடங்கியுள்ளார்.

35 வயதான இவர், இணைய வழி மூலம் 3 நாள் சிறப்பு பயிற்சியினை முடித்த பின்பு தலைநகர் ஸ்டாக்ஹோமில் உள்ள சோபியா ஹெமெட் மருத்துவமனையில் தனது சேவைப் பணியை தொடங்கி இருக்கிறார்.

மருத்துவமனையில் சுகாதார உதவியாளராக சேர்ந்துள்ள இளவரசி சோபியா, கொரோனா நோயாளிகளைக் கையாள்வதில் நேரடியாக ஈடுபட மாட்டார். அதேசமயம் மருத்துவர்கள் மற்றும் தாதிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்.

சோபியாஹெமெட் மருத்துவமனையின் இணையப் பாடத்திட்டமானது, சுகாதாரம் குறித்த சில முக்கிய பயிற்சிகளை வழங்குகிறது. சுத்தம் செய்தல், சமையலறையில் வேலை செய்தல், உபகரணங்களைக் கிருமி நீக்கம் செய்தல் என பலவற்றைக் கொண்டிருக்கிறது.

இந்தப் பயிற்சியினை முடித்தவர்கள் சுகாதார ஊழியர்களின் பணிச்சுமையைக் குறைக்க உதவ முடியும். தற்போது வாரத்திற்கு 80 பேர் வீதத்தில் மருத்துவமனை இந்த பயிற்சியினை தன்னார்வலர்களுக்கு வழங்கி வருகிறது. இளவரசி சோபியா, தனது முதல் நாள் பணியின் ஒளிப்படத்தினை இணையத்தில் பகிர்ந்திருக்கிறார். நீல நிற மருத்துவ உடையுடன் சமூக விலகலைக் கடைப்பிடித்து நிற்கும் அந்த ஒளிப்படம் சமூக வலைத்தளத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

முன்னாள் மொடல் அழகியான சோபியா 2015ஆம் ஆண்டு சுவீடன் இளவரசர் கார்ல் பிலிப்பை திருமணம் செய்துகொண்டதன் மூலம் அரச குடும்பத்தின் அங்கமானார். இளவரசர் பிலிப் - சோபியா தம்பதிக்கு அலெக்சாண்டர் என்ற மகனும், கேப்ரியல் என்ற மகளும் உள்ளனர்.

## பிறந்த நாளுக்கு அணிவகுத்து வந்து சிறுவனை மகிழ்வித்த பொலிஸார்

தனது பிறந்தநாளன்று தன்னை வாழ்த்த எவரும் வரவில்லையே என்று கவலைப்பட்ட சிறுவனை மகிழ்விக்க பொலிஸார் தமது கடமை வாகனங்களில் அணிவகுந்து வந்து பிறந்த நாள் வாழ்த்துப் பாடலைப் பாடி மகிழ்வித்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. 7.10 லட்சம் மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 37 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

நோய் அறிகுறி உள்ளவர்கள், அவர்களுடன் தொடர்பில் இருப்பர்கள் எனப் பல லட்சம் மக்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். பொது நிகழ்ச்சிகள் எதிலும் பங்கேற்க முடியாமல் மக்கள் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர்.

இந்நிலையில், கொரோனா அச்சம் மற்றும் ஊரடங்கு காரணமாக பிறந்த நாளன்று தன்னை வாழ்த்த யாரும் வராததால் கவலையில் இருந்தான் ஒரு சிறுவன். வீட்டில் இருந்தவர்களுடன் மட்டும் எளிமையாக அவனது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

வாழ்த்த, நண்பர்கள், உறவினர்கள் யாரும் வராததால் அவன் கவலை அடைந்திருந்ததைக் கவனித்த அவனது தந்தை, பொலிஸாரைத் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார்.




இதையடுத்து 7 பொலிஸ் சுற்றுக்காவல் வாகனங்களில் சிறுவனின் வீட்டுக்கு அணிவகுத்து வந்த பொலிஸார் சிறுவனின் வீட்டின் முன்பு வாகனங்களை நிறுத்தி சிறுவனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். சைரன்களை ஒலித்தும், 'ஹேப்பி பர்த்டே' பாடலைப் பாடியும் சிறுவனை மகிழ்வித்தனர்.

இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் மிக வேகமாகப் பரவி வருகிறது.



# அல்ப்ஸ் மலையில் இந்தியக் கொடி!

## கொரோனாப் போராட்டத்திற்காக சுவிற்சர்லாந்து ஒளிரவிட்டது

கொரோனாவை எதிர்த்துப் போராடி வரும் இந்தியாவுக்கு நம்பிக்கை தரும் விதமாக, மேட்டர்ஹான் என்ற மலையில் இந்திய தேசிய கொடியை ஒளிரவிட்டது சுவிட்சர்லாந்து.

கொரோனா வைரஸ் உலகில் கடும் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. பாதிக் கப்பட்டதில் அமெரிக்கா முதலிடத்திலும், இத்தாலி இரண்டாவது இடத்திலும், ஸ்பெயின் மூன்றாவது இடத்திலும் உள்ளன. இந்தியாவிலும் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருகிறது.

சுவிட்சர்லாந்தில் 25 ஆயிரத்துக் கும் மேற்பட்டோர் கொரோனாவல் பாதிப் படைந்துள்ளனர். இதேபோல், இந்தி யாவில் கொரோனாவால் பாதிப்பு அடைந் தோர் எண்ணிக்கை 14 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடி வரும் இந்தியாவுக்கு உறு துணையாக இருப்போம் என சுவிட்சர் லாந்து தனது ஒற்றுமையை வெளிப் படுத்தி உள்ளது.

அதன் ஒரு பகுதியாக, ஆல்ப்ஸில் மேட்டர்ஹான் என்ற பிரமாண்ட மலை யில் வண்ண விளக்குகளால் இந்திய தேசிய கொடியை ஒளிரவிட்டுள்ளது.

கொரோனாவை எதிர்த்துப் போராடி வரும் இந்தியர்களின் நம்பிக்கையை யும் வலிமையையும் அதிகரிக்கும் வகை யில் ஆல்ப்ஸ் மலையில் இந்திய கொடியை ஒளிர விட்டுள்ளோம் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஆல்ப்ஸ் மலையில் இந்திய தேசிய கொடி ஒளிரும் புகைப்படத்தை பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட் டுள்ளார். அதில், உலகமே கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடி வருகிறது. மனித குலம் நிச்சயம் வெல்லும் எனவும் பதிவிட்டுள்ளார்.

# திருடர்கள் என்ற சந்தேகத்தில் நையப்புடைப்பு; 3 பேர் சாவு!

## மராட்டியத்தில் வியாழனிரவு சம்பவம்

மராட்டிய மாநிலத்தில் திருடர்கள் என நினைத்து 3 பேரை கிராம மக்கள் அடித்துக்கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளபோதும் ஆங்காங்கே கொள்ளை சம்பவங்க ளும் நடந்து வருகின்றன.

இந்தநிலையில் மராட்டிய மாநிலம் பால்கர் மாவட்டம் கட்சின்சலே கிராமம் அருகே உள்ள தபாடி - கான்வெல் சாலையில் வியாழக்கிழமை இரவு 9.30 மணி அளவில் கார் ஒன்று ஊரடங்கை மீறி சந்தேகப்படும் வகையில் சென்று கொண்டிருந்தது.

சந்தேகப்பட்ட கிராம மக்கள் சுமார் 100 பேர் காரைச் சுற்றி வளைத்து மடக்கினர். காரில் இருந்தவர்கள் கொள் ளையர்கள் என்று சந்தேகப்பட்டதால் அதனை மடக்கிப் பிடித்ததாக அவர்கள் கூறினர்.

நிறுத்தப்பட்ட காரில் இருந்த 3 பேரையும் வெளியே இழுத்துப்போட்டு அடித்து உதைத்தனர். கற்கள் மற்றும் கையில் கிடைத்த பொருள்களை கொண் டும் சரமாரியாக தாக்கினர். மேலும் காரையும் அடித்து நொறுக்கி சூறையா டினர்.

இந்த தாக்குதலில் பலத்த காயம் அடைந்த 3 பேரும் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்தனர்.

இது குறித்து நள்ளிரவில்தான் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. காசா பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தி னர். மேலும் கொலையான 3 பேரின் உடல்களையும் உடற்கூறுப் பரிசோத னைக்காக பால்கர் அரசு வைத்தி யசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

விசாரணையில் உயிரிழந்த 3 பேரும் மும்பையில் இருந்து வந்தவர் கள் என்பது தெரியவந்தது. ஆனால் அவர்கள் யார் என்பது குறித்து அடை யாளம் காணப்படவில்லை. இது குறித்து பொலிஸார் கிராம மக்கள் 100 பேரை பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஊரடங்கு நேரத்தில் திருடர்கள் என நினைத்தே காரை மடக்கினர் என்றும் அவர்கள் தங்களைத் தாக்க முயன்ற தால் திருப்பின் தாக்கினர் என்றும் கிராம மக்கள் பொலிஸாரிடம் தெரிவித் தனர்.

# வீட்டு சாப்பாடு அலுத்துப்போய் உணவகங்களை நாடும் மக்கள்

## இணையவழி விற்பனை 80 சதவீதம் அதிகரிப்பு

நீண்ட நாள்களாக வீடுகளிலேயே முடங்கிக் கிடந்த இந்தியர்கள், குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்கள் தற்போது உணவ கங்களில் இருந்து இணையம் மூலம் உணவைத் தருவித்து உண்ணபதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளார்கள். இதனால் இணைவழி உணவு விற்பனை சடுதியாக எகிறியுள்ளது.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட தால் வீடுகளில் முடங்கிய மக்கள் முதலில் வீட்டில் நன்கு சமைத்துச் சாப்பிடு வதில் ஆர்வம் காட்டினார்கள். நீண்ட நாளைக் குப் பின்னர் குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்திருக்கும் நிலையில் நல்ல சாப்பாடுகளைச் சமைத்து குடும்பத்தோடு இருந்து உண்பதில் பொழுதுகள் கழிந் தன.

நாளாக நாளாக இதில் சலிப்பு ஏற்படத் தொடங்கியது. ஊரடங்கு ஒரு மாதத்தை யும் தாண்டிச் செல்லும் நிலையில் மக் கள் உணவகங்களின் ருசிக்கு ஏங்கத் தொடங்கிவிட்டார்கள். இந்தியாவில் உண வகங்கள் இணையத்தின் மூலமாக தமது பண்டங்களை விற்க அனுமதிக்கப்பட் டுள்ளது. இதனால் இணைய வழி விற் பனை எகிறத் தொடங்கியுள்ளது.


"ஊரடங்கு உத்தரவுக்குப்பிறகு இணைய வழி விற்பனை 80 சதவீதமாக உயர்ந் துள்ளது. நேரில் வந்து பொதி வாங்குப வர்கள் 20 சதவீதம் பேர் மட்டுமே. ஆட்டி றைச்சி விலை அதிகமாக இருப்பதால் ஆட்டிறைச்சி பிரியாணி விற்பனை செய் யப்படுவதில்லை.

சொமெட்டோ, சுகி ஆகிய தனியார் நிறுவன ஆப் மூலம் உணவு பண்டங்கள் விற்பனை செய்யப்படுகிறது" என்று கூறினார் பெரம்பூரில் உள்ள அல்ரபி யாஸ் ஓட்டல் உரிமையாளர் ஹமீது.

# பிளாஸ்மா சிகிச்சைக்கு தமிழகத்தில் அனுமதி!

தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிளாஸ்மா முறை சிகிச்சை அளிக்க இந்திய அரசு அனு மதி அளித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் உலக நாடு



கள் திணறி வருகின்றன.

இந்த நிலையில் கொரோனாவுக்கு எதிராக பிளாஸ்மா தெரபி முறையில் சிகிச்சை அளிக்க தமிழகம் முடிவு செய் துள்ளது.

கொரோனாவால் பாதிப்புக்குள் ளாகி குணம் அடைந்தவரின் உடலில் வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடி அழிக்கும் எதிர் அணுக்கள் (பிளாஸ்மா) உருவாகும். இந்த அணுக்களை எடுத்து கொரோ னாவால் பாதிக்கப் பட்ட மற்றைய நபர்க ளுக்கு செலுத் தும்போது அவர்களது உடம்பில் உள்ள வைரஸ் தொற்றை அழிக்க முடியும். இந்தச் சிகிச்சைக்குப் பெயரே பிளாஸ்மா தெரபி.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட நபரும் குணம் அடைவார். இதன்படி கொரோ னாவால் பாதிக்கப்பட்டு குணம் அடைந் தவர்களின் உடலில் இருந்து குருதி எடுக்கப்படும். அதிலிருந்து பிளாஸ்மா மட்டும் பிரித்து எடுக்கப்பட்டு நோயாளர் கள் உடலில் செலுத்தப்படும்.

ஒரு தகுதிவாய்ந்த, குணம் அடைந்த நோயாளி உடலில் இருந்து எடுக்கப் படும். பிளாஸ்மா மூலம் 4 நோயாளிக ளுக்கு செலுத்த முடியும். கேரள மாநி லத்தில் இந்தச் சிகிச்சை வெற்றி பெற் றுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தி யா விலேயே கொரோனாவை வெற் றிகரமாகக் கட்டுப்படுத்திய மாநிலம் கேரளா.

இந்த பிளாஸ்மா சிகிச்சையை அளிக்க இந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஐ.சி.எம்.ஆர். இடம் அனுமதி பெறவேண்டும். இந்த அனுமதியை கேட்டு தமிழக அரசு, விண்ணப்பித்தி ருந்தது. அதற்கான அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்னும் இரு வாரங் களில் இந்த பிளாஸ்மா சிகிச்சை தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

# பார்வையற்ற பெண் மீது ஊரடங்கில் பலாத்காரம்

## மற்றொரு மாநிலத்தில் கணவன் பரிதவிப்பு

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் தனியாக இருந்த பார்வையற்ற பெண்ணை மர்ம நபர் ஒருவர் வன்புணர்ந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவன் ராஜஸ்தானில் உள்ளார். ஊரடங்கு காரணமாக அங் கிருந்து வெளியேற முடியாமல் பரிதவித் துப் போயுள்ளார்.

போபால் நகரின் ஷாபுரா பகுதியில் வசித்து வந்த 53 வயது நிரம்பிய பார் வையற்ற பெண், வெள்ளிக்கிழமை வீட் டில் தனியாகத் தூங்கிக்கொண்டிருந்த போது உள்ளே நுழைந்த மர்ம நபர் பெண்ணை வன்புணர்ந்தார். பின்னர் தப்பிச் சென்றுவிட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் அளித்த முறைப் பாட்டின் அடிப்படையில் ஷாபுரா போலீசார் வழக்குப்பதிவு செய்து, குற்றவாளியைத் தேடி வருகின்றனர். பார்வையற்ற பெண் என்பதால், குற்றவாளி குறித்த எந்த துப்பும் அவரால் கொடுக்க முடிய வில்லை. தொடர்ந்து விசாரணை நடை பெறுகிறது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் ஊரடங்கு காரணமாக ராஜஸ்தானில் இருந்து வெளியேற முடியாமல் உள் ளனர்.

ஊரடங்கு நடைமுறையில் இருக்கிற நிலையில், பெண்களுக்கு எதிரான குற் றங்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக தேசிய மகளிர் ஆணையத்தில் ஏராளமான புகார்கள் குவிந்துள்ளன.

**தியாதீபம் அன்னை பூபதியின் 32 ஆவது ஆண்டு நீங்கா நினைவு இன்று. அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

# தியாகச் சிகரம் அன்னை பூபதி

- பா.அரியநேத்திரன் -



ஆம்.அன்று 32,வருடங்களுக்கு முன்.

மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் 1988 ஆண்டு இந்தியப்படைகள் முகாம்கள் அமைத்துத் தங்கியிருந்துகொண்டு சொல்லமுடியாத கொடுமைகளைச் செய்தன. தேடுதல் வேட்டை என்ற பெயரில் வீடு வீடாகப் புகுந்து வெறித்தாண்டவம் ஆடினார்கள். உடைமைகள் சூறையாடப்பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சந்தேகத்திற்குரிய இளைஞர்கள் உடனடியாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக இராணுவத்தினர் பெண்களிடம் மிருகத்தனமாக நடந்துகொண்டனர். பெண்கள் வெளியில் நடமாடவே அஞ்சினர்.

தியாகி திலீபன் காட்டிய வழியில் உண்ணாவிரதப்போராட்டம் நடத்துவதென அன்னையர் முன் னணி முடிவு செய்தது.

1.இந்தியப்படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும்.

2.விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

- இந்த இரண்டு கோரிக்கைகளை முன் வைத்து மாமாங்கப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக குருந்தமர நிழலில் அன்னையர் முன்னணியின் உண்ணாநோன்புப் போராட்டம் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் இதை அலட்சியப்படுத்தினர். ஆனால் உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு ஆதரவாக மட்டக்களப்பு நகரில் மட்டுமன்று மாவட்டம் முழுவதிலும் உள்ள பெண்களும், மாணவிகளும் ஆர்த்தெழுந்ததைப் பார்த்தவுடன் அவர்கள் திகைத்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தைப் பார்க்கவும் ஆதரவு தரவும் மக்கள் அணி அணியாக அங்கு வரத்தொடங்கினார்கள். இப்போராட்டத்தை திசை திருப்ப பல வழிகளில் ஈடுபட்டது இந்தியத் தரப்பு.

அன்னையர் முன்னணி தங்கள் உண்ணாநோன்பு போராட்டத்தை தொடர் உண்ணாநோன்புப் போராட்டமாக மாற்றித் தீவிரப்படுத்தியது. நாள்தோறும் ஏராளமான பெண்களும்,மாணவிகளும் போராட்டத்தில் புதிய உத்வேகத்துடன் குதித்தனர். இது ஒரு மக்கள் போராட்டமாக வெடித்தமை கண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அதிர்ச்சியடைந்தார்.

இந்திய அமைதிப்படை இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடவில்லை;

விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே போராடுகிறது என வானொலி மூலம் அவர் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு அவருடைய அறியாமையைக் காட்டியது. மக்கள் வேறு, விடுதலைப்புலிகள் வேறல்ல. மக்களிலிருந்தே புலிகள் தோன்றி மக்களைக் காக்கப் போராடுகிறார்கள் என்ற உண்மையை அவர் உணரவில்லை.?எனவே அவருடைய அறிவிப்பால் அன்னையர்கள் மனம் மாறிவிடவில்லை.

1988 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் நாளன்று பேச்சுக்கு வரும்படி அன்னையர் முன்னணியை இந்திய இராணுவத்தினர் அழைத்தனர். அதனை ஏற்று அன்னையர்கள் திருகோணமலைக்குச் சென்று பேச்சில் கலந்துகொண்டனர்.

பிரிகேடியர் சண்டேஸ் என்னும் உயர் அதிகாரி இந்திய அரசு சார்பில் கலந்துகொண்டு “புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும். அதற்குப் பின்னரே அவர்களுடன் பேச்சு நடத்தமுடியும்.” - என்று கூறினார்.

“எங்கள் நகைகளைக் கொடுத்து எங்களைக் காக்க எமது பிள்ளைகள் வாங்கிய ஆயுதங்களைக் கேட்பதற்கு நீங்கள் யார்?” என்ற சூடான வினா அன்னையரிடமிருந்து கிளம்பியது.

பிரிகேடியர் சண்டேஸ் வாயடைத்துப் போனார். பேச்சுவார்த்தை முறிந்தது. உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தது.

அன்னையர் முன்னணியினர் மீண்டும் பேச்சுக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். பெப்ரவரி 10 ஆம் நாளன்று கொழும்பில் இந்தியத் தூதுவர் டிக்சிற் அன்னையர் முன்னணியினர்களுடன் பேசினார். ஆயுதங்களைக் கொடுக்க வேண்டும் என்ற பழைய பல்லவியையே பாடினார். அவருடைய மிரட்டலுக்கு அன்னையர் அஞ்சவில்லை. மீண்டும் பேச்சு முறிந்தது.

ஆத்திரமடைந்த இந்திய இராணுவம் மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தைச் சுற்றி வளைத்தது. அப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது. பெப்ரவரி 12,13,14 ஆகிய மூன்று நாள்களும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. யாரும் வெளியில் நடமாடக்கூடாது. நடமாடுபவர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்கள் என எச்சரிக்கை விடப்பட்டது.

அன்னையர் முன்னணிக்கு எதிரான இராணுவ அழுத்தங்கள் நாளுக்குநாள் அதிகரித்தன. அன்னையர்களும் பதிலடி கொடுக்கத் திட்டமிட்டார்கள்.

அடுத்த கட்டப் போராட்டமாக சாகும்வரை உண்ணாநோன்பு இருப்பதென முடிவுசெய்தார்கள்.

ஆனால் அந்த வாய்ப்பைத் தனக்கு தாருங்கள் எனப் போராடினார்கள் அன்னம்மா டேவிட்டும் அன்னை பூபதியும்.

இணைபிரியாத தோழிகளாக இருந்து அன்னையர் முன்னணியை வழிநடத்திய அந்த இரு தாய்மார்களும் தாயகத்திற்காக உயிரைத் தியாகம் செய்யும் உன்னதமான வேள்வியில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இருவரும் போட்டிபோட்டனர். வேறுவழியில்லாமல் சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டது. அன்னம்மா டேவிட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ம் நாள் மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன் பாக அன்னம்மா டேவிட் சாகும் வரை உண்ணாவிரதத்தைத்தொடங்கினார்.

சைவக்கோயில் முற்றத்தில் கிறிஸ்தவத்தாய் உண்ணாநோன் பிருந்த காட்சி மதங்கள் வேறாயினும் அனைவரும் தமிழரே என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியது.

அன்னம்மாவிற்கு ஆதரவாகத் தமிழீழமெங்கும் மக்கள் அனுதாப உண்ணாவிரதங்களும் ஊர்வலங்களிலும் ஈடுபட்டனர். கிராமம் கிராமமாக இந்த அலை பரவியது. வழக்கம்போல இராணுவம் மிரட்டியது. அன்னம்மா சாகநேர்ந்தால் அன்னையர் முன்னணி மீது கொலைவழக்குப் போடப்போவதாக எச்சரித்தது. எதுவும் பலிக்கவில்லை.

கடைசியாக சூதுத்திட்டமொன்று வகுக்கப்பட்டது. அன்னம்மாவின் பிள்ளைகளைக் கைதுசெய்து மிரட்டியும், ஆசைவார்த்தை காட்டியும் ஒரு கடிதத்தில் கையெழுத்து வாங்கப்பட்டது. அன்னம்மாவைப் பலவந்தமாக உண்ணாநோன்பில் ஈடுபடுத்தி அரசியல் ஆதாயம்தேட முயற்சி நடப்பதாகவும், எனவே அவரைக் காப்பாற்றி மீட்டுக்கொடுக்கும்படியும் இந்திய இராணுவ அதிகாரியிடம் அக்கடிதம் முறையிட்டது.

இப்பொய்யான கடிதத்தை ஆதாரமாகக் காட்டி இந்திய இராணுவம் அன்னம்மாவைத் தூக்கிச்சென்றது. இந்த நயவஞ்சக நாடகத்தின் விளைவாக அன்னையர் முன்னணி மீது பூசப்பட்டிருக்கும் களங்கத்தைத் துடைத்தெறியச் சபதம் செய்து களத்தில் இறங்கினார் அன்னை பூபதி. அதேவேளை அன்னம்மாவிற்கு நேர்ந்ததைப்போல தனக்கும் நேர்ந்துவிடக்கூடாதென்பதற்காக ஒரு கடிதத்தை தானே எழுதிக்கொடுத்தார்.

நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே எனது கோரிக்கை நிறை வேறும்வரை உண்ணாநோன்பு இருக்கிறேன். நான் நினைவிழந்து போகும் நிலை ஏற்பட்டாலும் என்னுடைய கணவரோ அல்லது பிள்ளைகளோ உறவினர்களோ என்னைக் காப்பாற்றவோ தூக்கிச்செல்லவோ அனுமதிக்கக் கூடாது. - என மரண சாசனம் எழுதி அன்னையர் முன்னணியிடம் ஒப்படைத்துவிட்டுச் சாவை நோக்கி பயணத்தை அன்னை பூபதித் தாய் தொடங்கினார்.

அன்னையர் முன்னணியின் ஆவேச நெருப்பை அணைத்து விட்டோம். மக்களின் எழுச்சியை மழுங்கடித்துவிட்டோம் - எனக் கொக்கரித்த இந்திய இராணுவத்தின் ஆணவத்திற்கு அன்னைபூபதி மீண்டும் போராட்டத்தை தொடங்கி முகத்திலறைந்தார்.

18/03/1988 அன்று அன்னை பூபதி இருகரங்களையும் கூப்பியபடி மாமாங்கவீதியை வலம்வந்தபோது அலைகடலென மக்கள் திரண்டு இந்தியப்படைக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

அன்னை பூபதி மூட்டிய தீ தமிழீழமெங்கும் பற்றியெரியத் தொடங்கியது.

- இந்தியப்படையே திரும்பிப்போ
- அன்னை பூபதியைச் சாகடிக்காதே.
- புலிகளுடன் பேசு.
- தமிழீழத்தைச் சுடுகாடாக்காதே.

என்ற முழக்கங்களை வான்அதிர முழங்கியவண்ணம் மாணவ,மாணவியர்கள் கொளுத்தும் வெயிலையும்,கொளுத்தும்சாலையையும் பொருட்படுத்தாது அலையலையாக அன்னை பூபதியைப் பார்க்க வந்து கொண்டிருந்தனர்.

அன்னைபூபதியின் கோரிக்கை களை நிறைவேற்றும்படி தமிழீழமெங்கும் போராட்டங்கள் வெடித்தது.

உண்ணாநோன்புப் பந்தலில் ஆயிரக்கணக்கான பெண்கள் கூடியிருந்து சர்வமத பக்திப்பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். அன்னை பூபதி மயங்கிய நிலையில் கிடந்தார். காண்போரின் உள்ளங்கள் உருகின.

இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் ஓட்டமும் நடையுமாக உண்ணாநோன்புப் பந்தலுக்கு வந்தார். அங்கிருந்த முக்கியமானவர்களிடம் இரகசியமாக மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அன்னை பூபதி அம்மாவைத் தூக்கிப்போவதற்கு திட்டமிட்டுள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று கூறினார். (09 ஆம் பக்கம் பார்க்க)

**பிரிகேடியர் சண்டேஸ் என்னும் உயர் அதிகாரி இந்திய அரசு சார்பில் கலந்துகொண்டு “புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும். அதற்குப் பின்னரே அவர்களுடன் பேச்சு நடத்தமுடியும்.” - என்று கூறினார். “எங்கள் நகைகளைக் கொடுத்து எங்களைக் காக்க எமது பிள்ளைகள் வாங்கிய ஆயுதங்களைக் கேட்பதற்கு நீங்கள் யார்?” என்ற சூடான வினா அன்னையரிடமிருந்து கிளம்பியது.**

காலைக்கதிர் Kalaikkathir





# வெளவால்களை அழிப்பதால் கொரோனா நோய் அழிந்துவிடுமா?

உலக நாடுகளை கொரோனா வைரஸ் கொள்ளை நோய் (கோவிட் - 19) அச்சுறுத்தி வரும் நிலையில், தமிழகம், புதுச்சேரி, இமாசலப் பிரதேசம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்களிலுள்ள வெளவால்களில் கொரோனா வைரஸ் இருப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்ஸில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. எனினும், இந்த கொரோனா வைரஸால் மனிதர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று இந்த ஆய்வை நடத்திய ஆய்வாளர்கள் தெளிவுபடுத்திவிட்டனர்.

இருப்பினும், கொரோனா விவகாரம் தொடங்கியது முதல் வெளவால்கள் மீது மக்களில் ஒரு சாராருக்கு கோபம் உண்டாகியுள்ளது. வெளவால்களை ஒட்டுமொத்தமாக அழிக்க வேண்டும் என்று சமூக வலைதளங்கள் உட்பட பல தளங்களில் பரவலான கருத்து வலுப்பெற்றுள்ளது. வெளவால்களை ஒழித்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா?

கொரோனா வைரஸ் என்பது ஒரு தனி வைரஸ் அல்ல, அது ஒரு வைரஸ் குடும்பம். இதில் எல்லா கொரோனா வைரஸ்களாலும் மனிதர்களை தாக்கிவிட முடியாது. இக்குடும்பத்தை சேர்ந்த SARS - COV2 என்ற வைரஸே தற்போது உலகை அச்சுறுத்தும் கோவிட் -19 நோய்க்கு காரணமாக உள்ளது. இதர கொரோனா வைரஸ்களால் தற்போது மனிதர்களுக்கு ஆபத்து இல்லை. பொதுவாக, வெளவால்கள், எறும்புத் தின்னிகள், ஒட்டகங்களில் கொரோனா வைரஸ்கள் அதிகம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இயற்கையாகவே வெளவால்களில் ஏராளமான வைரஸ்கள் குடியிருக்கின்றன.

அண்மையில், வெளிநாடுகளில் வெளவால்கள், எறும்புத் தின்னிகள் தீயிட்டுக் கொளுத்தப்படுவதாக சில செய்திகள் வந்துள்ளன. இதுபோல உயிரினங்களை கொல்வதால் நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுமா? இதுகுறித்து சுற்றுச்சூழல் அமைப்பான பூவுலகின் நண்பர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், கொள்ளை நோய்கள் பற்றியும் இயற்கையில் உயிரினங்களின் பங்கு பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. அதில் கிடைத்த முக்கியத் தகவல்களை

> **“கொரோனா விவகாரம் தொடங்கியது முதல் வெளவால்கள் மீது மக்களில் ஒரு சாராருக்கு கோபம் உண்டாகியுள்ளது. வெளவால்களை ஒட்டு மொத்தமாக அழிக்க வேண்டும் என்று சமூக வலைதளங்கள் உட்பட பல தளங்களில் பரவலான கருத்து வலுப்பெற்றுள்ளது. வெளவால்களை ஒழித்து விட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா?”**

தொகுத்திருக்கிறோம்.

உலெகெங்கும் கொரோனா வைரஸ் கொள்ளை நோய் கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கும் நிலையில் இன்று விலங்குகளால் பரவும் நோய்கள் (Zoonoses) பேசுபொருளாகியிருக்கிறது.

பழங்காலத்திலேயே தொற்று நோய்கள் இருந்தாலும் அவை பெருமளவு கொள்ளை நோய்களாய் உருப்பெறத்தொடங்கியது, மனிதன் விவசாயத்தைக் கைக்கொண்டு கூட்டமாக வாழத்தொடங்கிய பின்புதான். குடியிருப்புகளின் மக்கள் நெருக்கமும் சுகாதாரமின்மையும், உலகமயமாதல் போன்ற விடயங்களால் தொற்றுநோய்கள் கூட்டம் கூட்டமாய் மனிதர்களைக் காவுவாங்கத் தொடங்கின.

காலநிலை மாற்றம் பனிப்பாறைகளில் உறைந்து கிடக்கும் வைரஸ்களைத் தட்டி எழுப்பபோகிறது என்று அறிவியலறிஞர்கள் எச்சரித்திருந்த நிலையில் இன்னொருபுறம் காடழிப்பும் நகர்மயமாதலும் மனித - விலங்கு நெருக்கத்தை அதிகரித்து. அதனால் பரவும் நோய்களையும் துரிதப்படுத்தியிருக்கிறது.

இன்றும் மனித சமூகத்துக்குச் சவாலாக விளங்கும் எச்ஐவி உட்பட பல நோய்கள், சிம்பென்சிகள், வெளவால்கள், எலிகள் போன்ற விலங்குகளிடமிருந்தே மனிதனுக்குப் பரவியவை என்பது பொய்யல்ல. ஆனால் எப்போது மனிதன் அவற்றின் வாழிடத்தை ஆக்கிரமித்து நெருங்கினானோ அப்போதுவரை அவை மனித சமூகத்துக்கு அச்சுறுத்தலாகவிருக்கவில்லை.

உயிரினங்கள் குறித்த சரியான புரிதலின்மையால் பாதிக்கப்படும் அப்பாவி விலங்குகளின் பட்டியல் மிக நீண்டது. ஆந்தைகள், பல்லிகள், பாம்புகள் என நீளும் அவற்றில் பாலூட்டிகளின் வரிசையில் குறிப்பிடத்தக்க அளவில் பெரும் அவப்பெயரை மக்களிடம் சந்தித்திருக்கும் ஒரு உயிரினம் வெளவாலாகத்தான் இருக்க முடியும். எத்தனையோ அறிவியல் தொழில்நுட்பத்தில் நம் சமூகம் முன்னேறியிருந்தாலும் இன்றும் சாலையைக் கடக்கும் பூனைகளும் சுவரில் இருக்கும் பல்லிகளும் தங்கள் வாழ்வின் நல்லது, கெட்டதைத் தீர்மானிக்கின்றன என்று நம்பும் ஒரு சமூகத்தில் இவ்வுயிரினங்கள் சந்திக்கும் சிக்கல்கள் சொல்லிமாளாது. பெரும்பாலும் இரவில் வேட்டையாடுவதும், விநோதமான உருவமும், மனிதனுக்கு பரிச்சயமில்லாத தன்மையும் வெளவால்களுக்கு இத்தகைய அவப்பெயரைக் கொடுத்திருக்கக்கூடும்.

இவ்வுலகில் பயனற்ற உயிரினம் என்று எதையும் ஒதுக்கிவிடவோ ஒழித்துவிடவோ முடியாதபடி, மனித வாழ்வு ஒவ்வொரு உயிரினத்துடனும் நுட்பமாகப்பிணைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இரவாடிகளான வெளவால்களின் அளப்பெரிய சூழல் முக்கியத்துவத்தைத் தெரிந்த எவரும் இதை மறுக்க முடியாது. இயற்கையின் இந்த நுட்பமான வலைப்பின்னலை நவீன மனிதர்களைவிட நன்கு உணர்ந்தவர்கள் செறிந்த அறிவு கொண்ட நம் பழங்குடியினர்தான்.

சுற்றுச்சூழல் ஆர்வலரான இரவீந்திரன் நடராஜன் அவவெளவால்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் பளியர்கள் வெளவால்களை வளத்தின் குறியீடாகக் காண்கிறார்கள எனக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர், மிகப்பெரும் எண்ணிக்கையில் அந்தி வானில் கூட்டமாகப் பறக்கும் வெளவால் காலனியை ஒரு குறிப்பிட்ட பருவத்தில் காணமுடியவில்லையென்றால் பளியர்கள் அதைச் சாபமாகக் கருதுகிறார்கள் எனச் சொல்கிறார். பளியர்களின் மரபுஅறிவில் விழைந்த வெளவால்கள் குறித்த நம்பிக்கையை நாம் அறிவியல் மொழியில் இன்னும் சிறப்பாய் விவரிக்க முடியும்.

வெளவால்களில், உருவத்தில் பெரிய பழம்தின்னும் வெளவால்கள் மற்றும் உருவத்தில் சிறிய பூச்சியுண்ணும் வெளவால்கள் என உணவின் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகள் உள்ளன. பூச்சியுண்ணும் வெளவால்கள் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றன. ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் ஓரிடத்தில் நிலை கொண்டிருக்கும் வெளவால்கள் எத்தனை ஆயிரம் எண்ணிக்கையில் ஒவ்வொரு நாளும் பூச்சிகளை உண்ணும் என்று எண்ணிப்பார்த்தாலே அவற்றின் முக்கியத்துவத்தை நாம் உணர முடியும். அதுமட்டுமின்றி பகலில் நடமாடும் பூச்சிகளைப் பறவைகள் கட்டுக்குள் வைத்திருக்க, இரவாடிப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் வெளவால்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

அடுத்ததாக பழங்களை உண்ணும் வெளவால்கள், 500 க்கும் மேற்பட்ட பூக்கும் தாவரங்களின், குறிப்பாக இரவில் மலரும் சில தாவரங்களின் அயல்மகரந்தச் சேர்க்கைக்கும், விதைப்பரவலிலும் முக்கிய பங்குவகிக்கின்றன.

இவற்றில் பல தாவரங்கள் வெளவால்கள் நுழைவதற்கென்றே அமைந்ததுபோன்ற விரிந்த பெரிய மணிவடிவிலான பூக்களைக் கொண்டுள்ளன. நம் நிலப்பகுதியின் முக்கிய பயிர்களான வாழை மற்றும் மாம்பழங்களின் மகரந்தச்சேர்க்கைக்குகூட வெளவால்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இவற்றில் எதையும் நாம் குறைத்து மதிப்பிடமுடியாது.

எடுத்துக்காட்டாக, மெக்சிகோவின் தனிப்பெருமை வாய்ந்த மதுபானத்தைத் தரும் கற்றாழைச் செடிகளின் மகரந்தச் சேர்க்கையில் வெளவால்களே முக்கியப் பங்குவகித்தன. ஆனால் சமீபகாலங்களில் பண்ணைகளில் வளர்க்கப்படும் கற்றாழைகள் பூக்கும் பருவத்திற்கு முன்பே அறுவடைச் செய்யப்பட்டு விடுவதால் அப்பகுதியின் வெளவால்கள் பெருமளவில் அழிந்தன. இப்போது பெரும் பரப்பில் பரவியிருக்கும் கற்றாழைப் பண்ணைகளில் இருக்கும் அனைத்து கற்றாழைச்செடிகளும் ஆய்வுக்கூடங்களில் குளோனிங் முறையில் சில செடிகளிலிருந்து பெறப்பட்டவையே.

### எறும்புத் தின்னி

எப்போது ஓர் இனத்தின் பல்வகைமை (Diversity) அழிகிறதோ அப்போது அவற்றின் நோய்தாங்கும் திறனும், பிழைக்கும் திறனும் குன்றி விடும்.

சமீபத்தில் ஏற்பட்ட நோய்த் தாக்குதலால் மெக்சிகோவின் கற்றாழைப் பண்ணைகள் பெருமளவில் அழிந்தன. மது உற்பத்தியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதோடு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. ஒருவேளை அவை வெளவால்கள் மூலமாக இயற்கையான அயல்மகரந்தச் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் குறைந்தபட்சம் கற்றாழைகளின் பல்வகைமையானது, பெரும் இழப்பிலிருந்து விவசாயிகளைக் காத்திருக்கும்.

(09 ஆம் பக்கம் பார்க்க)







அன்னை பூபதியின் 32ஆவது ஆண்டு நிகழ்வை ஒட்டி மட்டக்களப்பு நாவலடி அன்னைபூபதி நினைவு முற்றத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும், பட்டிருப்புத் தொகுதி இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தன்னந்தனியாக சிரமதானம் மேற்கொண்டார்.

# வெளவால்களை அழிப்பதால் ....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வுலகின் பறக்கும் ஒரே பாலூட்டி உயிரினம் வெளவால்கள்தான். வெளவால்களில் உலகெங்கும் 950க்கும் மேற்பட்ட உள் இனங்கள் உள்ளன. கொறி விலங்குகளுக்கு (Rodents) அடுத்ததாக அதிக உள்ளினங்களைக்கொண்ட பாலூட்டிகள் வெளவால்கள்தான். எந்த பாலூட்டியும் வெளவால்களைப் போன்ற கேளா ஒலி (Ultrasonic sound) எழுப்பி அதன் எதிரொலிப்பு மூலம் இரைகொல்லும் பரிணாமத்தைப் பெறவில்லை. இவற்றின் பரிணாமச் சிறப்புகளைப் பற்றி குறிப்பிடும்போது இரவீந்திரன் நடராஜன் அவர்கள், இத்தனைச் சிறப்புத் தகவமைப்புகளைப் பெற்ற ஒரு உயிரினம் நிச்சயம் தனது வாழ்விடத்தின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உயிரினமாகத்தான் (Key species) இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உயிரினத்தை நோய்ப்பரவலைக் காரணம்காட்டி அழிக்க முற்படுவது முட்டாள் தனமானது. வாழிட அழிப்பு, பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு, பழத்தோட்ட உரிமையாளர்களால் கொல்லப்படுதல், ஒளிமாசு போன்றவற்றால் ஏற்கெனவே பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் வெளவால்களில் பல இனங்கள் அருகிவரும் உயிரினங்களின் பட்டியலில் இருக்கின்றன. பழமுண்ணும் வெளவால்களில் பெரும்பாலானவை வருடத்துக்கு ஒரு குட்டி மட்டுமே ஈனுபவை. குறைந்த எண்ணிக்கையில் குட்டிகளை ஈனும் உயிரினங்கள் எப்போதும் விரைவில் அற்றுப்போகும் வாய்ப்புள்ளவை.

இயற்கைக்கு மாறான ஓர் உயிரினத்தின் பெருக்கமோ, அழிவோ சூழலில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்கு நம்முன் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. குறிப்பாக தவளைகளின் வீழ்ச்சி மிதமிஞ்சிய கொசுக்களின் பெருக்கத்தையும் அவற்றின் மூலம் பரவும் நோய்களையும் கொண்டுவந்துள்ளது போன்று, நரிகளின் அழிவு மயில்களைப் பெருக்கி விவசாயப் பயிர்களுக்கு அச்சுறுத்தலாகவும் மாறியிருக்கின்றது. 1950களில் சீனாவில் அழிக்கப்பட்ட சிட்டுக்குருவிகள் அந்த நாட்டின் உணவு உற்பத்தியை எவ்வளவு மோசமாக பாதித்து பல உயிர்களை நாம் இழக்க காரணமாக இருந்தது என்பதை வரலாற்றின் சுவடுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இவ்வரிசையில் இன்று வெளவால்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அதன் விளைவுகள் எங்கெங்கு என்னவாறு இருக்கும் என்று நாம் கண்டறிவது எளிதானதல்ல. ஆனால் அவை நிச்சயம் விரும்பத்தகாத விளைவாகத்தான் இருக்கும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறமுடியும். எபோலா வைரஸ் தொற்றுக்கு வெளவால்கள் காரணமாகச் சொல்லப்பட்டதுபோன்று இன்று கொரோனா தொற்றுக்குக்கூட வெளவால்களோ அல்லது எறும்புத் தின்னிகளோ காரணமாகச் சுட்டப்படுகின்றன. எப்படி சிம்பன்சிகளைக் கொல்வது எயிட்ஸ் பரவலைத் தடுக்காதோ அதே போன்று வெளவால்களையோ அல்லது அலங்குகளையோக் கொல்வது எந்த தொற்றுப் பரவலையும் தடுக்கப்போவதில்லை.

ஆகையால், கொரோனா வைரஸ் கொள்ளை நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியம் அளித்து வெளவால்கள் மீதான வெறுப்பை விடுக்க வேண்டும். வெளவால்களை அழிக்க முயன்றால் கோவிட் - 19 நோய் ஒழியாது. மாறாக, இயற்கையின் வலைப்பின்னலில் இடையூறு ஏற்பட்டு மனிதர்களுக்கே மற்றொரு பிரச்சினையாக வந்து விடியக்கூடும்.

# தியாகச் சிகரம் ....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம் கூடியிருக்கும் கூட்டத்தினரிடையே குழப்பத்தையும், பீதியையும் பரப்பத் திட்டமிட்டே இவ்வாறு கூறினார் என்பதைப் புரிந்துகொண்ட தாய்மார்கள் அன்னை பூபதியைச் சுற்றி வியூகம் அமைத்தார்கள்.

எங்கள் பிணத்தின்மீது ஏறிக்கடந்துதான் பூபதியைத் தொடமுடியும். என முழங்கினார்கள்.

திடீரென தொலைவில் துப்பாக்கி வெடிக்கும் ஒலி கேட்கிறது. உடனே கூட்டத்தைச் சுற்றிலும் நிற்கும் இராணுவம் வானைநோக்கிச் சுடுகிறார்கள். மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி கலைந்தோடச் செய்யவே இவ்வாறு செய்கிறார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்கிறார்கள்.

உன் துப்பாக்கி மிரட்டல்களுக்கெல்லாம் இந்தப்பூபதி அசைமாட்டாள் என்கிறார் அன்னை பூபதி. களைத்துப்போன அந்த முகத்தில் உறுதியும் தீரமும் பளிச்சிடுகின்றன.

உடல் களைத்ததே தவிர உள்ளம் களைக்கவில்லை.

உலகப் பத்திரிகையாளர்கள் மட்டக்களப்பில் குவிகிறார்கள். அன்னை பூபதியின் உண்ணாவிரதம் மக்களிடையே ஏற்படுத்தியிருக்கும் எழுச்சியை நேரில் கண்டு உலகமெங்கும் செய்தியைப் பரப்புகிறார்கள்.

அன்னை பூபதியைச் சோதித்த மருத்துவர்கள் அவர் அபாயகட்டத்தை அடைந்துவிட்டார் எனக் கூறுகிறார்கள். மக்கள் பரபரப்பையும் துயரத்தையும் அடைகிறார்கள். ஆனால் ஆணவம் கொண்ட இந்திய அதிகாரிகளோ மேலும் மேலும் அடக்குமுறைகளில் ஈடுபடுகிறார்கள்.

இப்போராட்டத்தை தூண்டிவிட்டனர் என்ற குற்றஞ்சாட்டி அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வண.பிதா சந்திரா பெர்னாண்டோ, ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்த கிங்ஸ்லி இராசநாயகம், பூபதி அன்னையின் பிள்ளைகள் எனப் பலர் கைது செய்யப்படுகிறார்கள்.

அன்னையின் கணவர் கணபதிப்பிள்ளையை இந்திய இராணுவ அதிகாரிகள் அழைத்துச்சென்று நயமாகவும், பயமாகவும் மிரட்டினார்கள். ஆனால் அவரோ தமிழ் மக்களுக்கு நியாயம் தேடித்தான் என் மனைவி தன் உயிரைத் தியாகம் செய்ய உறுதிபூண்டிருக்கிறாள் எனக்கூறுகிறார்.

அதிகாரிகளின் அத்தனை முயற்சிகளும் வீணாகின்றன. வெறிகொண்ட வேட்டை நாய்களைப்போல இந்திய இராணுவம் மட்டக்களப்பு வீதிகளில் அலைகிறது. 19/03/1988 அன்று தனது தியாகப் பயணத்தை தொடங்கிய அன்னை பூபதி சரியாக 31ஆம் நாள் தனது உயிரைத் 19/04/1988, அன்று தியாகம்செய்து சாவைத் தழுவிக்கொள்கிறார்.

இரவோடு இரவாக எல்லா ஏற்பாடுகளும் நடந்து அன்னை பூபதியின் உடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைக்கப்பட்டது. ஊர்வலம் புறப்பட்டு விட்ட செய்தி கணநேரத்தில் பரவி மக்கள் வெள்ளம்போலத் திரளுகிறார்கள்.

நாவலடிக்கடற்கரை இதுவரை காணாத காட்சியைக்கண்டது. ஒருபுறம் அலைகடல். மறுபுறம் மக்கள்கடல் இடையே அன்னை பூபதியின் திருவுடல்.

அன்னை பூபதி உயிரோடு இருக்கும்போதும் அவரின் உறுதியைக் குலைக்க இந்திய - சிங்களக் கூட்டு இராணுவத்தால் முடியவில்லை. அவர் இறந்த பிறகும் அவர் உடல் அருகேகூட நெருங்க முடியவில்லை.

அன்னை பூபதியின் அளவற்ற தீரமும் ஒப்பற்ற தியாகமும் தமிழீழப் பெண்களுக்கு என்றென்றும் வழிகாட்டிக்கொண்டே இருக்கும். தமிழீழப் பெண்களின் எழுச்சி வடிவமாகவும், தமிழர் வரலாற்றில் ஒரு கலங்கரை விளக்காகவும் அன்னை பூபதித்தாய் என்றும் திகழ்வார் என்பது உண்மை.

இன்று 19/04/2020, அன்னாரின் 32 ஆவது நினைவு வணக்கத்தை கொரோனோ நோய் காரமா வெளியில் செல்லாமுடியாத நிலையில் வீட்டில் இருந்து நினைவு கூருவோம்.

**மட்டக்களப்பு மண் ஈன்ற மகத்தான தாய்..!**
**மறத்தமிழ குலத்தின் சரித்திர நாயகி!**
**மாற்றான் படைகளுக்கு அஞ்சாத தேவி!**
**மானத்தமிழ் அன்னை பூபதியின் தியாகம்!**
**மண் உள்ளவரை மனதை விட்டு அகலாது.”**







# ஏப்பிரல் 16 இல் தமது 93ஆவது அகவையில் ஓய்வு நிலைத் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்



உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 265 ஆவது திருத்தந்தையாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் 16 ஏப்பிரல் 1927 இல் ஜேர்மனியில் பிறந்தவர். யோசவ் றற்சிங்கர் என்ற இயற்பெயருடன் பெயர்போன இறையியலாளராக கத்தோலிக்க திருச்சபையின் இறையியலுக்கே வரைவிலக்கணம் கொடுத்தவர். 2005இல் தனது 78ஆவது அகவையில் திருத்தந்தையாகப் பொறுப்பேற்றவர். இவர் 2013இல் தனது திருத்தந்தை பதவியிலிருந்து விலகி கத்தோலிக்க திருச்சபையில் ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஒரு அபூர்வ நிகழ்வை நிகழ்த்தியவர். திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் – திருத்தந்தை பிரான்சீஸ் ஆகிய இரு திருத்தந்தையர்களும் கத்தோலிக்க திருச்சபையில் சம காலத்தில் இருப்பது ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஒரு அபூர்வ நிகழ்வு. 600 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறு ஒரு திருத்தந்தை பணியிலிருந்து விலகியதில்லை என்பதோடு திருத்தந்தைப் பதவி வாழ்நாள் முழுவதற்கும் நீடிக்கும் ஒரு பதவி என்பதே வழக்கமாகும்.

பொதுவாகத் திருத்தந்தையின் இறப்புக்குப் பின்னர்தான் புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமாகும். ஓய்வு நிலைத் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் உயிருடன் இருக்கும்வரை கத்தோலிக்க திருச்சபையில் ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத இந்த அபூர்வ நிகழ்வு நீடித்துக் கொண்டே இருக்கும். ஓய்வு நிலைத் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களுக்கு காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழின் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலைப் பேராயர் கலாநிதி நீக்கிலஸ் மாக்கஸ்பெர்ணான்டோ இறைபதம்



அப்போதைய கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கருதினால் தோமஸ் கூரே அ.ம.தி ஆண்டகையின் பணி ஓய்வைத் தொடர்ந்து கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் 7 ஆவது பேராயராக 44 வயதையுடைய இவர் 1977ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். 1995இல் அப்போதைய திருத்தந்தை புனித 2ஆம் அருளப்பர் சின்னப்பரை இலங்கைக்கு அழைத்து புனித யோசப் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பெற்றவர் பட்டமளித்தார். தனது 70வது வயதில் 2002 தனது பதவியை இராஜினாமாச் செய்து ஓய்வு பெற்றார். தமிழ்ப் பரம்பரையில் வந்தாலும் பேராயர் அவர்கள் சிங்கள சார்புடையவாரகவே செயலாற்ற வேண்டியிருந்தது.

1989 – 1995 காலப் பகுதியில் பேராயர் அவர்கள் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவராக இருந்தவேளை நாட்டில் இனப்பிரச்சினை அதி தீவிரம் அடைந்திருந்தது. மதத்தலைவர்கள் பல துன்பங்களை சந்தித்மையோடு பல ஆலயங்கள், வணக்கஸ்தலங்கள் மீது குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றன. பல மக்கள் கொல்லப்பட்டனர். அவ்வேளை பேராயர் அவர்கள் மக்களின் மேய்ப்பனாய் இருந்தும் மௌனமாகவே இருந்தம்சி வருத்தத்திற்குரியது.

காலைக்கதிர் Kalaikathir


**கிறிஸ்தவ செய்தி இதழ்**

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

## தமிழ் மக்களுக்காகத் துணிந்து குரல் எழுப்பிய ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை



### எண்பதாவது பிறந்த தினத்தை கொண்டாடினார்

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை ஏப்பிர்ல் மாதம் 16ஆம் திகதி 2020 அன்று தனது 80ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளார்.

1992இல் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 2015இல் 75 வயதை நிறைவு செய்து தனது ஆயர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். தனது பதவிக்காலத்தில் ஈழப் போரில் தமிழ்மக்களின் நிலை குறித்தும், நாட்டின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் துணிவாக விமரிசனம் செய்து வந்தவர்.

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் இலங்கைக்கு வந்து போது போரினால்அல்லற்பட்டமண்ணில் கால் பதிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து மடுப்பதிக்கு கொண்டு வந்து சரித்திரம் படைத்தார். திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களும் வேத சாட்சிகளின் இரத்தத்தால் தோய்ந்த மன்னார் தமிழ் மண்ணில் கால் பதித்து மடுப்பதியைஉலகிற்குதெளிவாகக் காட்டினார்.

## கொரோனா வைரஸ் நெருக்கடியால் பாதிப்புற்றோருக்கு திருமறைக் கலாமன்றத்தினால் நிவாரண உதவி

கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைகளால் வாழ்வாதார பாதிப்புக்களைச் சந்தித்துள்ள மக்களுக்கு திருமறைக் கலாமன்றத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற உலர்உணவு வழங்கும் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகள் யாழ்.பிரதேச செயலகத்திற்குட் பட்ட சில பிரதேசங்களில் இடம்பெற்றன. இதன் போது மக்களுக்கு உலர் உணவுகளுடன் முகக் கவசங்களும் வழங்கப்பட்டன.







படம் 1



படம் 2

# தினம் ஒரு தலைப்பு

# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

**படம் 1**
பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**படம் 2**
கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'சைக்கிள் சவாரி'

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'ஆகாய விமானம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யதுஷி ரமேஷ் - தரம் 8
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

ஹொனுஜா சுகுணவேல் - தரம் 4
யா/ அருணோதயா கல்லூரி

ரமேஷ் ரமியன் - தரம் 5
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

தவேந்திரன் ஆஹர்ன் - தரம் 2
யா/ நெல்லியடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பரணீதரன் அபிராம் - தரம் 4
யாழ். பரியோவான் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

எம். எவ். பஸ்லுல்லாஹ் - தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

லீனா பர்ஹான்
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

எம். எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எஸ். எவ். ருஷ்தா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எஸ். எவ். இஸ்ரத் - தரம் 11
பொ/ அல் - ஹிலால் மத்திய கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தர்மிகா உமாசுதசர்மா - தரம் 6
கொக்குவில் இந்துக் கல்லூரி

கிசேந்த் கீர்த்திராஜ்
ஹற்றன் ரெகொபோத் ஆரம்பப் பாடசாலை

இ. சிந்தூரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

த. ஆரூசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

இ. பவிான் - தரம் 3
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பானா ஹர்ன் - தரம் 7
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

ஜெ. வித்யாசாகர் - தரம் 2
யாழ். பரியோவான் கல்லூரி

டேவிராஜ் பிலெஷின் - தரம் 6
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

கே. பிரிதிவிகரன் - தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

எம். சி. ஜோசுவா சொலொமன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

வி. சஞ்ஜனா - தரம் 3
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

கே. தர்சன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கே. திகேசன் - தரம் 10
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ் சீமா ஹானி - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikathir

## சைக்கிள் சவாரி

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



## தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி


**இன்று (19/04/2020) தலைப்பு**
**சைக்கிள் சவாரி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**



# பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

# அமேசான் காடுகளில் விவசாயம் பார்த்த மக்கள்

மிகவும் அடர்த்தியான அழகிய வனப் பகுதியாக நாம் அறியும் அமேசான் காடுகளில் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே பயிர் இடப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

10,000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளடங்கிய பகுதியாக கருதப்பட்ட தற்போதைய வடக்கு போலியாவில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச ஆராய்ச்சி குழு ஒன்று கண்டறிந்துள்ளது. இந்த பகுதியில் வசித்த மக்கள் மக்காச்சோளம், பூசனி, மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட கிழங்கு வகைகளை பயிர் செய்துள்ளனர் என்றும் இந்த ஆராய்ச்சி குழுவினர் குறிப்பிடுகின்றனர்.

மழைக்காலத்தில் வெள்ளக்காடாகிவிடும் இந்த நிலப்பரப்பில் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மக்கள் எப்படி விவசாயம் செய்தார்கள் என்ற விதத்தையும் இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆங்காங்கே தீவுகளைப் போல மேடுகளை உருவாக்கி அந்த மேடுகளின் மீது அவர்கள் விவசாயம் செய்துவந்தனர் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த பனி யுகத்திற்கு பிறகு, உலகின் வெப்பநிலை தொடர்ச்சியாக உயர்ந்தது. இதனால் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இவற்றில் மிக முக்கியமானது என்னவென்றால், ஆரம்பகால நாகரிகங்கள் வேட்டையாடி, வனப் பொருள் திரட்டி வாழும் வாழ்க்கையில் இருந்து முன்னேறி, உணவைப் பயிரிடத் தொடங்கினர்.

உலகில் இப்படி ஆதியில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் என நான்கு இடங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

சீனா நெல் பயிர் செய்துள்ளது, மத்திய கிழக்கு



நாடுகளில் தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன, மத்திய அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் மக்காசோளம் பயிரிடப்பட்டுள்ளது, சீமைத்தினை மற்றும் கிழங்கு வகைகள் தென் அமெரிக்காவின் அண்டெஸ் மலைப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

தென்மேற்கு அமேசானின் லானோஸ் டி மோக்சோஸ் பகுதியை ஆதியில் விவசாயம் நடந்த ஐந்தாவது முக்கியப் பகுதியாகப் பார்க்க வேண்டும் என்று தற்போதைய புதிய ஆய்வு குறிப்பிடுகிறது. தற்போது இந்த பகுதிகள் மரங்கள் அடர்ந்த நிலப்பரப்புகளாக விளங்குகின்றன. இந்த மேட்டுத் தீவுகள் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை.

இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் குறிப்பிட்ட இடங்களைத் தேர்வு செய்து அங்கு தங்கள் கழிவுப் பொருள்களை கொட்டிக்கொண்டிருந்ததால் நாளடைவில் இந்த மேடுகள் தீவுகளைப் போல உருவாகின என சுவிஸ்சர்லாந்தின் பெர்ன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அம்பேர்ட்டோ லொம்பார்டோ கூறுகிறார். நிச்சயமாக, குப்பைகளில் ஊட்டச்சத்துக்கள் அதிகம் உள்ளன. இப்படி உருவான மேடுகளில் முளைக்கும் மரங்கள், தாவரங்கள் மழைக் காலத்தில் இங்கே தேங்கும்போது, நீர்மட்டத்துக்கு மேலே இருந்தன. மண்ணும் வளம் மிக்கதாக இருந்ததால் இந்த மேட்டுத் தீவுகள் மக்கள் குடியேறவும் உகந்ததாக அமைந்தன.

இதைப் போல 4,700 மேட்டுத் தீவுகள் இன்றும் காணப்படுகின்றன.

இத்தகைய தீவுகளில் 30 சதவீதத்தை ஆராச்சியாளர்கள் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

தாவரங்களின் உயிரணுக்களுக்குள் உருவாகும் பைட்டோலித்ஸ் எனப்படும் சிலிக்காவின் நுண் துகள்களை அவர்கள் கண்டுபிடித்தனர். இந்த பைட்டோலித்ஸ் சிறிய கண்ணாடி துண்டுகள் போல காட்சி அளிக்கும். வெவ்வேறு தவரங்களில் பைட்டோலித்ஸ் வெவ்வேறு வகையாக காட்சி அளிக்கும்.

இவற்றை வைத்து மரவள்ளிக்கிழங்கு 10,350 ஆண்டுகளுக்கு முன்பே பயிரிடப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பூசனி வகை காய்கள் 10,250 ஆண்டுகளுக்கு முன்பும், மக்காசோளம் 6,850 ஆண்டுகளுக்கு முன்பும் பயிரிடப்பட்டன எனவும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மனிதர்கள் தடம்படாத காடுகள் என்று நாம் கருதும் அமேசான் காடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் வாழ்ந்து விவசாயம் மேற்கொண்டுள்ளனர் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் அந்த காலக்கட்டத்தில் வாழ்ந்த மனிதர்கள் இனிப்பு கிழங்கு வகைகள், வேர்க்கடலை, மற்றும் மீன் இறைச்சியையும் உட்கொண்டு வாழ்ந்து வந்தனர் என்பதற்கான ஆதாரமும் கிடைத்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

உலகம் வெப்பமடைந்து வரும் நிலையில் சுற்றுசூழல் மாற்றங்களின் உலகளாவிய தாக்கத்திற்கு இந்த ஆய்வு முக்கிய எடுத்துக்காட்டாக இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

மனித வரலாறு தோன்றும் காலக்கட்டத்திற்கு முன்பே விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இந்த ஆய்வின் மூலம் மீண்டும் தெளிவுபடுத்த முடிகிறது, பனியுகத்தில் இருந்து விடைபெற்று கால நிலை மாற்றம் நிகழ துவங்கிய காலகட்டத்தில் விவசாயம் மேற்கொண்டுள்ளனர் என்பது நல்ல செய்தியும் கூட என்கிறார் முனைவர் லோம்பார்டோ.

வெப்பம் நிறைந்த காலக்கட்டத்திற்குள் நாம் நுழையும்போது, உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களும் விவசாயம் செய்ய தொடங்கியுள்ளார்கள்.

**இங்கு மரவள்ளிக்கிழங்கு 10,350 ஆண்டுகளுக்கு முன்பே பயிரிடப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பூசனி வகை காய்கள் 10,250 ஆண்டுகளுக்கு முன்பும், மக்காசோளம் 6,850 ஆண்டுகளுக்கு முன்பும் பயிரிடப்பட்டன எனவும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.**





# அழியும் கடல்களைக் காப்பாற்ற 30 ஆண்டுகள்!



● க.சுபகுணம்

## வழிகாட்டும் ஆய்வுகள்

எதிர்கால சந்ததிகளுக்கு ஒரு பாதுகாப்பான, எதிர்த்திறன் மிகுந்த, வளம்மிக்க கடல்களை விட்டுச்செல்லப்போகிறோமா அல்லது மீட்டெடுக்கவே முடியாத மோசமான நிலையில் அவற்றைப் போட்டுவிட்டு போகப்போகிறோமா?

காலநிலை அவசரமும் அதனால் வேகமாகும் புவி வெப்பமயமாதலும், முதலில் பாதிப்பது பூமியின் கடல் பகுதிகளையும் கடல்வாழ் உயிரினங்களையும்தான். அந்தப் பாதிப்பிலிருந்து கடலையும் கடலின் சூழலியல் சமநிலையையும் 2050 ஆம் ஆண்டுக்குள்ளாகவே மீட்டெடுக்க முடியும் என்று சர்வதேச ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர்.

எதிர்கால சந்ததிகளுக்கு ஒரு பாதுகாப்பான, எதிர்த்திறன் மிகுந்த வளம்மிக்க கடல்களை விட்டுச்செல்லப் போகிறோமா அல்லது மீட்டெடுக்கவே முடியாத மோச



மான நிலையில் அவற்றைப் போட்டுவிட்டு போகப் போகிறோமா என்ற கேள்வி இருந்துகொண்டேயிருக்கிறது. இதுவரை ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்யவே வழியின்றி நாம் விழிபிதுங்கிக்கொண்டிருக்க, இன்னொரு புறம் பெருநிறுவனங்களும் மேற்கத்திய நாட்டு மக்களும் கடல் பகுதிகளை மேன்மேலும் சீரழித்துக் கொண்டேயிருக்கின்றனர். இந்நிலையில்தான், இவை அனைத்திலிருந்தும் பெருங்கடல்களைக் காப்பாற்ற இந்த சர்வதேச ஆய்வாளர்கள் குழு திட்டம் தீட்டியுள்ளது. ஆனால், அதற்கு சில கடுமையான, நீண்டகாலத்திற்கான செயல்திட்டம் அவசியம் என்றும் கூறுகிறார்.

இந்த செயல்திட்டத்தை உருவாக்க உதவியது, ஹம்ப்பேக் என்றழைக்கப்படும் ஒரு திமிங்கில வகை. 1960களில் கிட்டத்தட்ட அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டு,



பின்னர் பல்வேறு கடினமான பாதுகாப்பு முயற்சிகளுக்குப் பிறகு, 2015ஆம் ஆண்டில் மீட்டெடுக்கப்பட்டது. ஓர் உயிரினத்தைப் பாதுகாப்பது, அதன் வாழ்விடத்தை மீட்டுருவாக்குவது, மாசுபாட்டைக் குறைப்பது, பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டைக் குறைத்து, காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவது போன்ற மிகப் பெரிய வேலைகள் நம்முன் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் திட்டமிட்டு ஒவ்வொன்றாகச் செய்தாக வேண்டும்.

### ஹம்ப்பேக் திமிங்கிலம்

பெருங்கடல்களை மீட்டெடுக்கும் திட்டங்களுக்காக, ஆண்டுக்கு 10 பில்லியன் முதல் 20 பில்லியன் டிலர் வரை செலவாகும் என்று கணக்கிட்டுள்ளனர். இவ்வளவு செலவு இருந்தாலும்கூட, இதில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு டொலருக்குமே 10 டொலர்கள் திரும்பக் கிடைக்கும் என்பதையும் ஆய்வுக்குழுவினர் உறுதியாக நம்புகின்றனர்.

நம்முடைய பேரக்குழந்தைகளின் தலைமுறைக்கு ஆரோக்கியமான கடல் மற்றும் கடல் சூழலியலை வழங்க நமக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பு இது. நம்மிடம் தகவல்கள் இருக்கின்றன. அறிவு இருக்கிறது. தேவையான கருவிகளும் இருக்கின்றன. செயல்பட வேண்டியது மட்டுமே பாக்கி என்று குறிப்பிட்டுள்ளார், ஆய்வுக்குழுவின் துணைத்தலைவரான கிங் அப்துல்லா அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் ஆய்வாளருமான சவுதி அரேபியாவைச் சேர்ந்த கார்லோஸ் டுவார்டே.

கார்லோஸ் டுவார்டே சொல்வதுபோல், நம் எதிர்காலத் தலைமுறைகளுக்காக கடல் சூழலியலைப் பாதுகாக்கத் தேவையான செயல்திட்டத்தை முழுவீச்சில் அமல்படுத்தாமல், அவர்களுக்கு தரமற்ற, மோசமான நிலையில் கடல்களைக் கொடுப்பது மன்னிக்க முடியாத குற்றம். நேச்சர் இதழில் தற்போது வெளியாகியுள்ள இந்த ஆய்வுக்கட்டுரை, பூமியின் கடல் வாழ்வியலை 2050இற்குள் மீட்டுருவாக்க, அழிந்துகொண்டிருப்பதை மீட்டெடுக்க என்னென்ன நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கூறுகின்றது.

### பெருங்கடல்

கடல்வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை, அவற்றின் வாழ்விடம், சுழலியல் அமைப்பு, கடந்தகாலச் சூழலியல் பாதுகாப்பு நடவடிக்கைகள், நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் போன்றவற்றை அந்த ஆய்வுக் கட்டுரை பட்டியலிட்டுள்ளது.

மனிதர்கள், கடந்த சில பத்தாண்டுகளாக, கடல் வாழ்வியலின் மோசமான அளவில் தலையிட்டு மாற்றியமைத்திருக்கிறோம். இருப்பினும்கூட, கடலின் சூழலியல் அதற்கு எதிராகக் குறிப்பிடத்தக்க அளவில்



எதிர்த்தும் செயலாற்றியிருக்கின்றன என்பதை இந்த ஆய்வு கண்டுபிடித்துள்ளது. 124 கடல்வாழ் பாலூட்டி வகைகளின் எண்ணிக்கை 47 சதவிகிதம் அதிகரித்துள்ளது. 20ஆம் நூற்றாண்டில், பூமி கடல்வாழ் உயிரினங்களை இழந்துகொண்டிருந்த வேகம், தற்போது மட்டுப்பட்டுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகளிலிருந்து சில உயிரினங்கள், சில சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

உதாரணம் - 1960களில் அழிவின் விளிம்பிலிருந்து, 2015ஆம் ஆண்டின்போது மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஹம்ப்பேக் திமிங்கிலம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளும் அழியும் நிலையிலுள்ள உயிரினங்களுக்கான சட்டமும் சில நூறுகளில் இருந்த இந்தத் திமிங்கிலத்தின் எண்ணிகை



யைத் தற்போது, பல ஆயிரங்களாக உயர உதவி புரிந்தன. அன்டார்டிகாவிலிருந்து கிழக்கு ஆஸ்திரேலியாவிற்கு இடம்பெயர்ந்து வரும் ஹம்ப்பேக் திமிங்கிலங்களின் அளவு, ஆண்டுக்கு 10 சதவிகிதம் என்ற கணக்கில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. 1968 ஆம் ஆண்டின்போது அப்படி இடம்பெயர்ந்து சில நூறு திமிங்கிலங்களே வந்தன. தற்போது, சுமார் 40,000 திமிங்கிலங்கள் வருகின்றன.

வடக்கு நீர்நாய்கள் (**Northern elephant seals**), அவற்றிலிருந்து கிடைக்கின்ற இயற்கை எரிவாயுவிற்காகத் தொடர்ந்து வேட்டையாடப்பட்டன. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிட்டத்தட்ட முற்றிலுமாக அழிந்து, வெறும் 20 வடக்கு நீர்நாய்களே எஞ்சியிருந்தன. பலகட்டப் பாதுகாப்பு முயற்சிகளினால், தற்போது அவற்றின் எண்ணிக்கை 2,00,000 ஆக உயர்ந்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கொரோனா பாதிப்புப் பற்றிய எண்ணிக்கை; சீனாவின் கணக்கும் ட்ரம்பின் கருத்தும்!

- சத்யா கோபாலன் -

சீனாவில் ஒரே நாளில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. அந்நாட்டுத் தரவுகளில் ஏற்பட்ட பிழையே இதற்குக்காரணம்எனசீனஅதிகாரிகள் கூறியுள்ளனர்.



சீனாவின் வுகான் நகரிலிருந்து கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் உருவானதாகக் கூறப்படும் கொரோனா வைரஸ் இன்று மொத்த உலகத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. இந்தவைரஸ்தொற்றால்சர்வதேச அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 22,50,689 - ஆகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,54,256 - ஆகவும் உள்ளன. சீனாவில் வைரஸ் உருவாகியிருந்தாலும் தற்போது அங்கு நிலைமை சீராகி மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டனர்.

சீனாவில் மட்டும் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 82,719ஆகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,342 ஆகவும் இருந்தன. ஆனால் நேற்று முன்தினம் இந்த மதிப்பில் 1,290 அதிகரித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4,632 ஆக உள்ளதாகக் கூறியுள்ளது சீன அரசு. இது நிச்சயமாக ஒரே நாளில் நிகழ்ந்த உயிரிழப்புகள் இல்லை, சீனாவில் கொரோனா தாக்கம் உச்சநிலையில்




இருந்தபோது ஏற்பட்ட உயிரிழப்புகளாகவே இவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாகவே தங்கள் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை சீனா மறைப்பதாக சர்வதேச ஆர்வலர்கள், அமைப்புகள், வல்லுநர்கள் எனப் பலரும் குற்றம்சாட்டி வந்தனர். அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும் சீனாவின் இறப்பு விவகாரத்தில் பல்வேறு சந்தேகங்கள் இருப்பதாகவும் விரைவில் அது கண்டுபிடிக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் சீனா தங்கள் நாட்டின் உயிரிழப்பில் திடீரென 50 வீதம் அதாவது 1,290 பேரை ஒரே நாளில் சேர்த்துள்ளது. இதற்கு விளக்கமளித்துள்ள அந்நாட்டு அதிகாரிகள் 'கொரோனாவால் பாதிக்கப்பட்டு வெளியில் சொல்லாமல் வீட்டிலேயே இறந்தவர்களின் எண்ணிக்கை எங்களுக்குக் கிடைக்கவில்லை. மேலும் மருத்துவர்கள் அனைவரும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் பணிகளில் இருந்ததால் உயிரிழப்புகள் சரியாகக் கணக்கிடப்படவில்லை. தற்போது அனைத்துத்தரவுகளும் முழுமையாகப் பெறப்பட்டு விட்டதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் இந்த எண்ணிக்கை உண்மையானது இல்லை. சீனாவில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் மதிப்பு இன்னும் அதிகமாக இருக்கும் எனச் சந்தேகிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ட்ரம்ப் நேற்று வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை சீனா இரட்டிப்பாக அறிவித்துள்ளது. இந்த மதிப்பு இன்னும் அதிகமாக அமெரிக்காவின் மதிப்பை விடவும் அதிகமாக இருக்கலாம் அல்லது அதற்கு சற்று அருகிலாவது இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்

இதற்கு பதில் அளித்துள்ளது சீனா. கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை நிச்சயமாகக் குறைக்கப்படவில்லை. அப்படி நடக்கவும் நாங்கள் விட மாட்டோம்" என அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

சீனாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையிலும் அடக்கம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் பல மாற்றங்கள் இருந்ததாகச் சமீபத்தில் ஒரு புகார் எழுந்தது. அதற்குப் பிறகே பலரும் இது தொடர்பாகக் கேள்வி எழுப்பத் தொடங்கினர்.

இதற்கிடையில் சீனாவின் இறப்புத் தரவுகள் பற்றி ஜெனிவாவில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்துள்ள உலக சுகாதார அமைப்பின் கொரோனா தொழில்நுட்ப தலைவர் மரியா வான் கெர்கோவ், ஒரு நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பது பெரும் சவாலாக உள்ளது. பல நாடுகள் இதே போன்ற சூழ்நிலையில் இருக்கப் போகின்றன என நான் நினைக்கிறேன். அவர்கள் தங்கள் தரவுகளை மறு மதிப்பீடு செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இவரைத்தொடர்ந்து பேசியுள்ள உலக சுகாதார அமைப்பின் அவசரக் கால இயக்குநர் மைக்கேல் ரியான், "எல்லா நாடுகளும் நிச்சயம் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளும். ஆனால் அனைத்து நாடுகளும் தங்களின் துல்லிய தரவை விரைவில் தயாரிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம். பாதிப்பு என்பதையும் தாண்டி துல்லிய மதிப்பால் நாட்டின் நிலையை அறிவது அதிலிருந்து வெளியேற உதவும் என்று பேசியுள்ளார்.

> **கடந்த சில நாள்களாகவே தங்கள் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக் கையை சீனா மறைப்பதாக சர்வதேச ஆர்வலர்கள், அமைப்புகள், வல்லுநர்கள் எனப் பலரும் குற்றம்சாட்டி வந்தனர். அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும் சீனாவின் இறப்பு விவகாரத்தில் பல்வேறு சந்தேகங்கள் இருப்பதாகவும் விரைவில் அது கண்டுபிடிக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.**



# 10 லட்சம் நடுத்தர அமெரிக்கர் ஏழ்மைக்குள் தள்ளப்படுவர்!

அமெரிக்காவில் கொவிட் - 19 வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ள 10 லட்சத்துக்கும் மேற்பட்ட நடுத்தர வர்க்கத்தினர் வறுமைக்குச் செல்லும் ஆபத்து இருப்பதாக ஐக்கிய நாடுகள் (ஐ.நா.)எச்சரித்துள்ளது. உடனடியாக அமெரிக்கா தனது கொரோனா வைரஸ் தடுப்பு உத்திகளை மாற்றி அவசரகால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பது அவசியம் என்றும் ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. தீவிர வறுமை மற்றும் பட்டினி சிறப்பு அதிகாரி மற்றும் மனித உரிமைகள் தலைவர் பிலிப் ஆல்ஸ்டன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். அமெரிக்காவின் அனைத்து மக்களுக்கும் சென்று சேரும் வகையில் நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை எனில் அமெரிக்க மக்கள்தொகையில் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையினர் வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் என்றார் அவர்.

குறைந்த வருவாய் மற்றும் ஏழை மக்கள் நீண்ட காலமாகப் புறமொதுக்கப்பட்டமை மற்றும் பாகுபாடு காரணமாக கொரோனாவினால் அதிகபட்ச இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். பெரு நிறுவனங்களின் லாப வேட்டை நலனைக் கவனிக்கும் இந்த அரசின் நடவடிக்கைகள் சமூகத்தின் பெரும்பிரிவைச் சேர்ந்தவர்களுக்குச் சென்றடையவில்லை, அமெரிக்க அரசு தொழிலதிபர்களையும் நல்ல நிலையில் வசதிபடைத்தவர்களை மட்டுமே கவனிக்கிறது என்று அவர் கடுமையாக எச்சரித்தார்.

மார்ச் 27ஆம் திகதி அதிபர் ட்ரம்ப் வரலாறு காணாத நிவாரணமான 2 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகைக்கான சட்டத்தில் கையெழுத்திட்டார். இது தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், தொழிற்துறையினருக்கானது. ஏற்கெனவே அங்கு உருப்படாத சில பெரு நிறுவனங்கள் ட்ரம்பின் இந்தத் திட்டம் மூலம் நிதியை அபகரிக்க முயற்சித்து வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் மத்தியதர மற்றும் அதற்கும் கீழ் உள்ள 10 - 30 லட்சத்துக்கும் அதிகமானோர் அமெரிக்காவில் வறுமைக்குள் மூழ்கலாம் என்று ஐநா எச்சரித்துள்ளது.

கடந்த 4 வாரங்களில் 2 கோடியே 20 லட்சம் பேர் வேலையின்மை காரணமாக நிவாரணத்துக்காக விண்ணப்பித்துள்ளனர். இது 4 கோடியே 70 லட்சம் ஏன் 5 கோடியாகவும் அதிகரிக்கலாம் என்ற ஐயம் எழுந்துள்ளது.

உணவு வங்கியின் பயன்பாடு வானளாவ உயர்ந்துள்ளது. வீடுகளின் வாடகையையும் குடியிருப்போர் தரவில்லை.

லட்சக்கணக்கானோருக்கு காப்பீடும் கிடையாது. இவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக அரசு எதையும் செய்யவில்லை என்று ஐ.நாவின் ஆஸ்ல்டன் சாடுகிறார்.

நாளை கொரோனா தடுப்பூசி வந்தாலும் முதலில் செல்வந்தர்களுக்குத்தான் அது செல்லும் பிறகுதான் சமூகத்தின் விளிம்பில் உள்ளவர்களுக்கு செல்லும் என்று அவர் கொடிய பாகுபாட்டினை துல்லியமாக எடுத்துரைக்கிறார்.

கொரோனா நெருக்கடிக்கு முன்னரே கூட 5 அமெரிக்கர்களில் 2 பேர் 400 டாலர்கள் செலவினத்தைக் கூட சந்திக்க ந்முடியாத நிலையில் இருந்தனர், அதாவது கடன் வாங்காமல் இவர்களால் 400 டாலர் செலவினத்தைச் சந்திக்க முடியாது. அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 2018இல் 3 கோடியே 81 லட்சம் பேர் வறுமையில் உள்ளனர்.

சாதாரணமாக நன்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் கிடைக்கும் உலகளாவிய சுகாதார, மருத்துவ வசதிகளும் அமெரிக்காவில் இவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதுதான் உலகின் பணக்கார நாடான அமெரிக்காவின் நிலை. இவர்கள் படுமோசமான பணிச்சூழ்நிலைகளில் வாழ்கின்றனர். குறைந்த சம்பளம், கொடுக்க முடியாத வீட்டு வாடகை என்று ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினராக இவர்கள் இருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசு இவர்களுக்கு எதுவும் செய்யாவிட்டால் நிச்சயம் இவர்கள் கடும் வறுமைக்குள் தள்ளப்படுவது உறுதி என்று ஐ.நா. எச்சரிக்கிறது.

# கொடிய முகமெடுத்து கொல்லுகிறாய் உலகை!

சீனாவில் தோன்றி வானளவு உயர்ந்தாய்
மானுடத்தை வதைக்க வாஞ்சியுடன் வந்தாய்
ஊணுறக்கம் தவிர்த்து உழைக்கிறார் பலரை
வானுலகம் அனுப்ப வந்தாயோ யமனாய்!

வல்லரசு என்று மார்தட்டி நின்றார்
சொல்ல முடியாமல் சோகமுற வைத்தாய்
அல்லலுறு மக்கள் அழுகுரலைக் கேட்டும்
அரக்ககுணம் அகல மறுப்பதுதான் ஏனோ!

மாடிமனை உள்ளார் மனமொடிய வைத்தாய்
வீதிவீடு கொண்டார் விரக்தியுற செய்தாய்
கோடிகோடி பார்த்தார் குலைநடுங்கி நிற்க
நாடளவில் நீயும் நடனமாடு கின்றாய்!

அணுகுண்டை செய்வார் அலைந்தோட வைத்தாய்
அணுவளவு உருவால் அணுகுண்டை சிதைத்தாய்
நினைவெல்லாம் உன்னை நினைக்கவே செய்ய
கொடிய முகமெடுத்து கொல்லுகிறாய் உலகை!

மழைவெள்ளம் வந்தால் வற்றிவிடும் என்னும்
நம்பிக்கை மனதில் யாவருக்கும் இருக்கும்
உன்பிடிக்குள் மாட்டி உழலுகின்ற உலகு
உருப்படியாய் ஆக காலக்கெடு இலையே!

எதிரியென வந்தால் எதிர்கொண்டும் விடலாம்
அதிரடியாய் எதிர்த்து அழித்துமே விடலாம்
கண்காணா உருவில் காட்டுகிறாய் அழிவை
மண்மீது கொரனோ எனும்பெயரால் நீயும்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்போண் - அவுஸ்திரேலியா

# யாழ். மாவட்ட விவசாயிகள் கோரிக்கைக்கு விரைந்து தீர்வளித்தார் மாவட்ட செயலாளர்

## ரெலொ தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் நன்றி தெரிவிப்பு



யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்கொள்ளும்அசௌகரியங்கள்தொடர்பாக தெளிவுபடுத்தி அதற்கு தீர்வாக யாழ், உற்பத்திகளை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதிகளை அதிகரிக்குமாறு கோரியமைக்கு அமைவாக உடனடியாக அதற்கான தீர்வாக யாழ்ப்பாண மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரின் அத்தாட்சிப்படுத்தலுடன் வரும் விவசாய உற்பத்திகளை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லும் வியாபாரிகளுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்க தீர்மானித்துள்ளமைக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலாளருக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலருக்கு நன்றி தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

கடந்த வெள்ளியன்று (17.04.2020) யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தி அதற்கு தீர்வாக நுகர்ச்சிக்கு மேலதிகமான யாழ், உற்பத்திகளை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதிகளை அதிகரிக்குமாறு கோரி மின்னஞ்சல் ஊடாக நான் அனுப்பிவைத்த கோரிக்கையை சாதகமாக பரிசீலித்து தீர்வுவழங்கியமைக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கு எனது கட்சி சார்பாகவும் யாழ். மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் கோரிக்கையை மின்னஞ்சல் ஊடாகஅனுப்பிவைத்ததன்பின்னர்தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது இந்த விடயத்தில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தையும் வெளிப்படுத்தியிருந்தமையுடன் அதற்கான உடனடித்தீர்வாக யாழ்ப்பாண மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரின் அத்தாட்சிப்படுத்தலுடன் வரும்வியாபாரிகளுக்குவிவாசாயஉற்பத்திகளை சரியான பாதுகாப்பு முறைமைகளை பின்பற்றி வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்தத் தீர்மானம் தமது உற்பத்திகளை விற்பனைசெய்ய முடியாமல் வாழ்வாதாரத்திற்காக போராடிக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு நல்லதொரு தீர்வாக அமையும் என நம்புகின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்ற யாழ்ப்பாண மாவட்ட மக்களின் நுகர்ச்சிக்கு மேலதிகமாகவுள்ள காற்கறிகள் உள்ளிட்ட விவசாயஉற்பத்திகளைவெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகள் உரிய சுகாதார முறையினை பின்பற்றி, உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, யாழ்ப்பாண மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரின் சிபாரிசின் ஊடாக மாவட்ட செயலகத்தில் அனுமதிகளை பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

- என குறிப்பிடப்பட்டுள்ளது.

Free Online Seminar!
Android App Development for KIDS!
பாடசாலை மாணவர்களுக்கானது!

10 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான
2 மணிநேர இலவச செயலமர்வு!

இந்தியா - தமிழ்நாட்டின் Robatics கற்பித்தலில் புகழ்பெற்ற நிறுவனமான OTOMATIKS நிறுவனத்தினால் நேரடியாக நாடாத்தப்படும் இலவச செயலமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 4 மணிமுதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் உங்கள் வீட்டுப் பிள்ளைகளும் கலந்து பயன்பெற விரும்பினால் கீழுள்ள இலக்கத்திற்கு உங்கள் மின்னஞ்சல் முகவரியை What's app செய்யவும்.

(தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்கைநெறிகள் நடைபெறும்.
உலகின் எந்தப் பாகத்தில் இருந்தும் கலந்துகொள்ளலாம்.
முழுமையான இணையவழி கற்கைநெறி 30 மணிநேரம் -
விருப்பம் உள்ளவர்கள் கட்டணம் கட்டி முழுமையான
பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம் -சான்றிதழ் வழங்கபடும்)

முதலில் பதிவுசெய்யும் 250 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி!


மேலதிக விபரங்களுக்கு: 076 817 0077

அனுசரணை: கற்பகவனம், காலைக்கதிர் பத்திரிகை

காலைக்கதிர்
Kalaikathir



# அழியும் கடல்களைக் காப்பாற்ற ....



(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடலின் சூழலியல் அமைப்பும் வாழ்வியலும் இப்படி மீட்டெடுக்கப்படுவதை சற்று மேலும் துரிதப்படுத்தினால், அடுத்த 30 ஆண்டுகளில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கடல் சூழலியலில் காணமுடியும் என்று ஆய்வுக்குழுவினர் வலியுறுத்துகின்றனர். உப்பளங்கள், அலையாத்திக்காடுகள், கடல் புற்கள், பவளப்பாறைகள், சிப்பிப் பாறைகள்,கடல் பாசிகள், மீன்வளம், கடல்வாழ் பேருயிர்கள் மற்றும் ஆழ்கடல் வளம் ஆகியவற்றை மீட்டெடுக்கவும் மீட்டுருவாக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டால், கடல் பகுதிகளை நாம் மீட்டுருவாக்கிவிட முடியும்.

இவற்றை மீட்டெடுக்க, சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவை, புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டு கடல் தாவரங்களை அறுவடைசெய்தல், அவற்றுக்குத் தேவையான இடத்தை ஒதுக்கிப் பாதுகாத்தல், வாழ்விடங்களை மீட்டுருவாக்குதல், மாசுபாட்டைக் குறைத்தல், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டைக் குறைத்தல். கடல் வாழ்வியலை, அதன் சூழலியல் சமநிலையை மீண்டும் கட்டமைப்பது என்பது, மனித இனத்தின் முன் நிற்கக்கூடிய ஒரு மிகப்பெரிய சவால்தான். ஆனாலும், சாத்தியமற்ற காரியம் கிடையாது. நிலைத்தன்மையுடைய எதிர்காலத்திற்கான புத்திசாலித்தனமானதொரு பொருளாதாரத் திட்டமாகவும் இதை நாம் கருதலாம். அத்தகைய பலன்களை இந்த மீட்டுருவாக்கம் நமக்கு எதிர்காலத்தில் கொடுக்கும்.

### பவளப்பாறைகள்

இந்த நடவடிக்கைகளை மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பாக, நலன்களாக வடிவமைக்க வேண்டும். இதன்மூலம், பூமிக்கும் மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டும். திட்டமிட்டபடி, இந்த நடவடிக்கைகளை மக்களின் உதவியோடு முன்னெடுத்தால், ஏற்பட்டிருக்கும் சேதங்களை, கடல் வாழ்வியலை ஒரேயொரு மனிதத் தலைமுறைக்குள்ளாகவே, அதாவது அடுத்த 30 ஆண்டுகளுக்கு உள்ளாகவே நம்மால் சரி செய்துவிட முடியும். வெப்பமண்டலங்களில் அமைந்துள்ள பவளங்களை மீட்டெடுப்பதில் தற்போதைய காலநிலை மாற்றம் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, அவற்றை முற்றிலுமாகச் சரிசெய்ய முடியாமல் திணறுகிறோம். இந்நிலையில், இந்த செயல்திட்டத்தை சாத்தியப்படுத்த வேண்டுமெனில், நாம் இன்னொரு சிக்கலையும் சரிசெய்தாக வேண்டும். நேச்சர் ஆய்விதழில் வெளியாகியுள்ள இந்த சர்வதேச செயல் திட்டம் சாத்தியப்பட வேண்டுமெனில், அதற்கு நாம் பாரீஸ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைந்தாக வேண்டும். அப்போதுதான் இது சாத்தியப்படும்.



காலநிலை மாற்றத்தைக் கட்டுக்குள் கொண்டுவர, சர்வதேச அளவில் இந்தப் பாரீஸ் உடன்படிக்கை, 2015 ஆம் ஆண்டு முதன்முதலில் கையெழுத்திடப்பட்டது. புவியின் தட்பவெப்பநிலை மேலும் 2 டிகிரி செல்ஷியஸுக்கும் மேலாக அதிகரிக்காமல் தடுக்க வேண்டுமென்று முடிவுசெய்தது. அதேநேரம், இருக்கின்ற வெப்பநிலையை 1.5 டிகிரி செல்ஷியஸுக்கு உள்ளாகவே வைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இரண்டாவது பெரிய பசுமைஇல்ல வாயு வெளியீட்டாளரான அமெரிக்கா - பாரீஸ் உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தார். இந்நிலையில், தற்போதைய நிலவரப்படி சமீபத்திய மாநாடுகளில் புவி 1.5 டிகிரியைக் கடந்து வெப்பமடைந்து கொண்டிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. பூமியின் 25 சதவிகிதப் பகுதிகளில் வெப்பநிலை வேகமாக அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

### அழியும் கடல் சூழலியல்

காலநிலை மாற்றத்திற்கு எதிரான நான்கு இலக்குகளை பாரீஸ் உடன்படிக்கை நிர்ணயித்தது.

புவியின் வெப்பநிலை 2 டிகிரிக்கு மேல் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது.

வெப்பநிலை 1.5 டிகிரிக்கும் கீழே குறைய, கட்டுப்படுத்த செயல்பட வேண்டும். அதுவே, காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை, இழப்புகளைக் குறைக்கும் என்று கூறப்பட்டது.

அதைச் சாத்தியப்படுத்த, அரசுகள் சர்வதேச அளவிலான பசுமை இல்ல வாயு வெளியீட்டை முடிந்த அளவுக்குக் குறைக்க வேண்டும். இதற்கு, சில காலம் தேவைப்படும் என்றாலும், செய்வோம் என்று பாரீஸ் உடன்படிக்கையில் உலக நாடுகள் கையெழுத்திட்டன.

அதேநேரம், விரைவாக வெப்பநிலையைக் குறைக்க என்னென்ன செய்ய வேண்டுமென்று கண்டுபிடிக்கத் தேவையான காலநிலை மாற்றம் குறித்த ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்த இலக்குகளில் ஒன்றைக்கூட முழுமையாக உலக நாடுகள் பின்பற்றவில்லை. கரிம வெளியீடு அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. கடல் அமிலமயமாதல் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. புவியின் வெப்பநிலை, நிர்ணயிக்கப்பட்ட அளவைக் கடந்து அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்த, பாரீஸ் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரேயொரு இலக்கையாவது முழுமையாக சாத்தியப்படுத்தினாலே கிட்டத்தட்ட போதுமானது. பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டை இயன்ற அளவுக்குக் குறைத்தாலே, வெப்பநிலையை கட்டுக்குள் கொண்டுவர முடியும். அப்போது, கடல் சூழலியலை மீட்டுருவாக்க, சர்வதேச ஆய்வுக்குழு அமைத்துக்கொடுத்துள்ள இந்தச் செயல்திட்ட வடிவமும் முழுவீச்சில் பலன் கொடுக்கும்.

### மீன் வளம்

உலக நாடுகளும் அதில் வாழும் மக்களும், ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி ஒற்றுமையாக ஓடினால் மட்டுமே இதில் வெற்றி கிடைக்கும். அத்தகைய இலக்காக முதலில் இருக்கவேண்டியது பாரீஸ் உடன்படிக்கைதான். அதற்கு, போதுமான பொருளாதார வளங்களும் தேவைப்படுகிறது. சூழலியல், பொருளாதார, சமூக நலன்களை உள்ளடக்கிய திட்டத்தை அதற்கு வடிவமைக்க வேண்டியது அவசியம். அதுவே, பொருளாதாரப் பலன்களை நல்குவதோடு, சமூக மற்றும் சூழலியல் நன்மைகளையும் செய்யும். அதன்மூலம் சுற்றுச்சூழலும் மீட்டுருவாக்கப்படும், அதைச் சார்ந்து வாழும் மக்கள் சமூகங்களும் பலனடையும்.

இந்த ஆய்வு, 4 கண்டங்களில் ஆய்வு செய்துகொண்டிருந்த, 10 நாடுகளைச் சேர்ந்த உலகின் மிக முக்கியமான கடலியல் ஆய்வாளர்களை ஒன்றிணைத்தது. அதையே உலக அரசுகள் மத்தியிலும் செய்யும் என்று நம்புவோம்.

> “காலநிலை அவசரமும் அதனால் வேகமாகும் புவி வெப்பமயமாதலும், முதலில் பாதிப்பது பூமியின் கடல் பகுதிகளையும் கடல்வாழ் உயிரினங்களையும்தான். அந்தப் பாதிப்பிலிருந்து கடலையும் கடலின் சூழலியல் சமநிலையையும் 2050 ஆம் ஆண்டுக்குள்ளாகவே மீட்டெடுக்க முடியும் என்று சர்வதேச ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர்.”

# தலை முதல் கால் வரை அழகு தரும் கற்றாழை



கற்றாழை ஒரு குளிர்ச்சி தன்மையுடைய பொருள் என்று நம் அனைவருக்கும் தெரிந்த விடயம் தான். இந்த கற்றாழை ஜெல், பல மருத்துவ பயன்களை கொண்டது. பல ஆரோக்கிய பிரச்சினைக்கு தீர்வாக அமைகின்றது.

* வெள்ளரிக்காயை அரைத்து, அத்துடன் ஓட்ஸ் பொடி மற்றும் கற்றாழை ஜெல் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 5 நிமிடம் ஸ்கரப் செய்து, 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி செய்து வர, முகத்தில் உள்ள இறந்த செல்கள் முழுமையாக வெளியேறி, முகம் பிரகாசமாக இருக்கும்.

* பொடுகு பிரச்சினை, முடி உதிர்வு பிரச்சினை நீங்க கற்றாழை ஜெல்மிகவும் பயன்படுகிறது. மேலும் தலைமுடி அடர்த்தியாக வளர்வதற்கு கற்றாழை ஜெல் பெரிதும் பயன்படுகிறது.

* தலைமுடி நன்கு வளர ஒரு மடல் கற்றாழையை எடுத்து அவற்றில் உள்ள தோல் பகுதியை நீக்கிவிட்டு, அவற்றில் இதுக்கும் ஜெல்லை எடுத்து மிக்சியில் தண்ணீர் சேர்க்காமல் நன்றாக கட்டிகள் இல்லாதவாறு அரைத்து கொள்ளவும். பின்பு அரைத்த இந்த கற்றாழை ஜெல்லை ஒரு போத்தலில் ஊற்றி வைத்து கொள்ளவும். பின்பு அந்த போத்தலில் உள்ள ஜெல்லை எடுத்து தலைமுடியின் வேர்பகுதில் நன்றாக தேய்த்து, நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். பின்பு சிறிது நேரம் கழித்து தலை அலச வேண்டும்.

இவ்வாறு செய்வதினால் தலைமுடி நன்றாக வளரும், பொடுகு பிரச்சினை இருக்காது, முடி உதிர்வு பிரச்சினை இருக்காது. இருப்பினும் இந்த முறையை வாரத்தில் இரண்டு முறை செய்ய வேண்டும். கற்றாழை ஜெல் முகத்தில் உள்ள கருவளையங்களை மறைய செய்ய ரொம்பவே பயன்படுகிறது.

* எனவே கற்றாழை ஜெல்லை கண்களில் உள்ள கருவளையங்களின் மீது தடவி சிறிது நேரம் மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதினால் முகத்தில் உள்ள கருவளையங்கள் மறையும் இருப்பினும் இந்த முறையை தொடர்ந்து 10 நாள்கள் வரை செய்து வர வேண்டும்.

* மேலும் சருமத்தில் கரும்புள்ளிகள் மற்றும் பருக்கள் இருந்தால் இந்த கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவலாம். சில பேருக்கு கழுத்து பகுதி மிகவும் கருப்பாக இருக்கும். அவர்கள் இந்த கற்றாழை ஜெல்லை கழுத்து பகுதில் நன்றாக தடவும் கொஞ்ச நேரம் வரை மசாஜ் செய்ய வேண்டும்.

இப்படி செய்வதினால் கழுத்து பகுதில் உள்ள கருமை நிறம் மறைந்து விடும். இருப்பினும் இந்த முறையை தினமும் செய்து வந்தால் மிகவும் நல்லது.

* பல பேருக்கு இருக்கின்ற ஒரு பிரச்சினை, பாதவெடிப்பு பிரச்சினை என்று சொல்லலாம். இந்த பாத வெடிப்பு மறைய கற்றாழை ஜெல்லினை பாத வெடிப்பு உள்ள இடத்தில் நன்றாக தேய்த்து சிறிது நேரம் மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு இந்த முறையை தொடர்ந்து செய்து வர பாத வெடிப்பு பிரச்சினை உடனே சரியாகும்.



# இன்றைய கொரோனாவும் பேரிடர் முகாமைத்துவத்தில் வெற்றி பெற்ற அன்றைய தமிழீழ கருநிலை அரசும்

ஓதுவோன்

கொரோனா பேரிடரால் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க தேசங்கள் தள்ளாடுகின்றன. இலங்கை போன்ற இனப்படுகொலைத் தேசங்கள் மார்தட்டுகின்றன.

கொலரா (வாந்திபேதி), மலேரியா போன்ற இடர் காலங்களையும் சுனாமி போன்ற பேரிடர் காலங்களையும் புலிகளின் தலைமையில் இயங்கிய கருநிலைத் தமிழீழ அரசும் மக்களும் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதைப் பார்த்தால் அது அமெரிக்கா உட்பட ஒவ்வொரு நாடும் கற்றுக்கொள்ள வேண்டிய வரலாற்றுப் பாடமாக அமைவதோடு அத்தகைய தமிழீழ நிழல் அரசை அழித்த இலங்கை போன்ற இனப்படுகொலை அரசுகள் மார்தட்டுவதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை என்ற உண்மையும் புலப்படும்.




1995, 1996 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட யாழ் இடப்பெயர்வைத் தொடர்ந்து வன்னியில் மக்கள் செறிவாக குடியேறியிருந்த 1996 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட யுத்தகாலத்தில் வந்த கொலரா (வாந்திபேதி), மலேரியா போன்ற இடர்காலத்திலும் சரி சமாதான காலமான 2004 இல் ஏற்பட்ட சுனாமி பேரிடர் காலத்திலும் சரி கருநிலைத் தமிழீழ அரசின் நடவடிக்கைகளை இன்றைய காலத்தோடு ஒப்பிடும் போது வியப்பாகவும் பெருமையாகவும் இருக்கிறது.

1998 காலப்பகுதியில் கொலரா (வாந்திபேதி):-

வன்னியெங்கும் கொலரா நோய் செய்தி பரவியது, அக்கராயன், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிகளில் சிறப்பு நோயாளர் பகுதிகள் உருவாக்கப்பட்டன. ஒலி பெருக்கியில் நோய்பற்றி காடு கரப்பை எல்லாம் புலிகள் அறிவித்தார்கள். படைக்கு ஆள் சேர்க்கும் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் வாகனங்கள் ஒலி பெருக்கி கட்டி ஊர்களில் அலைந்தன. நோய் அறிகுறி பற்றியும் தடுக்கும் வழிகள் பற்றியும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தார்கள்.

தெருக்கூத்து கலைஞர்கள் போர்பற்றிய கூத்துக்குப் பதிலாக நோயின் தாக்கம், அலட்சியத்தின் விளைவு மற்றும் தடுப்பு முறைகள் பற்றி கூத்து தயாரித்து சந்தையிலும் கோயில் முன்றிலிலும் பள்ளி களிலும் பஸ்தரிப்பு நிலையங்களிலும் கூத்துப்போட்டார்கள். வன்னியே கலங்கியது.

பிரச்சாரம் படைக்கு ஆள் சேர்ப்பதை விடவும் உக்கிரமாக இருந்தது. பிரச்சாரத்தைப் பார்த்தே மக்கள் பயம் கொள்ளும் அளவுக்கு காடு மேடெல்லாம் நோய் பற்றிய பிரச்சாரம். மருத்துவப்பிரிவில் இருந்து பொறுப்பாளர் ஒருவரை புலிகளின் மருத்துவப்பிரிவு கொலராநோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்பு நடவடிக்கைப் பொறுப்பாளராக நியமித்தது. அவரிற்கு சகல அதிகாரங்களும் வழங்கி ஆளணிகளையும் பொருளுதவிகளையும் வாகனங்களையும் வழங்கியது.

புலிகளின் நிர்வாகப் பிரிவுகள் அத்தனையும் நோயை அடக்கும் பொருட்டு திருப்பி விடப்பட்டன. மூன்றாவது மரணமும் நிகழ்ந்துவிட்டது. நோயளர்கள் தொகை அறுபதை தொட்டுவிட்டது. பொறுப்பாளர் முதலில் இட்ட கட்டளை வருகிற நோயளர்களிற்கு சேலைன் ஏற்றி அவர்களைக் கதைக்க வைத்து விசாரணை செய்து தகவல்களைப் பெறவேண்டும்.

விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவு மாணவர்களும் சில வைத்தியர்களும் கூட இருந்தார்கள். நோயாளர்கள் எங்கே மலம் கழித்தார்கள்? வழிதெருவில் எங்கெல்லாம் கழுவினார்கள்? எங்கே உடையை மாற்றினார்கள்? எங்கு எங்கு போனார்கள்? எங்கு சாப்பிட்டார்கள்? என முழுவதுமாமய் விசாரணையில் துல்லியமாக திரட்டப்படவேண்டும். நோயாளர்கள் இராணுவ விசாரணைபோல விசாரிக்கப்பட்டார்கள்.

விசாரணைத் தகவல்களைக் கொண்டு செயல்படை செயலில் இறங்கியது. நோய்த்தாக்கம் கண்ட ஊர்களை முற்றுகையிட்டது (Lockdown) புலிகளின் மருத்துவச்சேவை. (கவனிக்க: ஊர்களை முற்றுகையிட்டு கட்டுப் படுத்தியதால் முழுத் தேசத்தையும் முற்றுகையிடவேண்டிய தேவை ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது) அவசியம் இன்றி வெளியே இருந்து ஊருக்குள்ளேயோ ஊரில் இருந்து வெளியேயோ யாரும் போவதை தடுத்துவிட்டார்கள்.

ஊரில் மலசல கூடம் எல்லா வீடுகளிற்கும் இருக்கிறதா என்று கவனித்தார்கள். யாரும் வெளியே மலம் கழிக்கக் கூடாது, குழந்தைகளைக்கூட அனுமதிக்கக்கூடாது. முறையான மல சல கூடம் இல்லாதவர்களுக்கு உடனடியாக தமிழீழ நிர்வாக சேவை மலசலகூடம் அமைத்துக்கொடுத்தது.

போராளிகளும் ஊர்மக்களும் ஊரைச்சுத்தப்படுத்தும் வேலையில் ஈடுபட்டார்கள். நோயாளி பாவித்த

தெருக்கூத்து கலைஞர்கள் போர்பற்றிய கூத்துக்குப் பதி லாக நோயின் தாக்கம் அலட்சியத்தின் விளைவு மற்றும் தடுப்பு முறைகள் பற்றி கூத்து தயாரித்து சந்தையிலும் கோயில் முன்றிலிலும் பள்ளி களிலும் பஸ்தரிப்பு நிலையங்களிலும் கூத் துப்போட்டார்கள். வன்னியே கலங்கியது.

உடைகள் எரிக்கப்பட்டன. நோயாளிபோய் உணவருந்திய உணவுக்கடைகள் மூடப்பட்டன. நோயாளிகள் போய்வந்த பாதைகளில் எச்சரிக்கைப் பலகைகள் இடப்பட்டன. நோயாளிகள் மலம் கழுவிய வாய்க்கால்கள், குளங்கள் உடனடியாக தடைசெய்யப்பட்டன.

நீர் வழங்கலிற்கு தமிழீழ நிர்வாக சேவை நீர் வழங்கல் தாங்கிகளைப் பயன்படுத்தியது. அரச அதிபரை அரசிடம் மருந்துக்கு விண்ணப்பிக்குமாறு அவசரமாக கொழும்புக்கு அனுப்பிவைத்தார்கள்.

அரச அதிபர் வெறும் கையோடு திரும்பிவந்தார். குறைந்தபட்சம் அன்ரிபக்ரீரியா மருந்துகளை கூட தர மறுத்தது அரசு. சேலைன் கூட தர மறுத்துவிட்டார்கள்.

பெருகும் நோயாளர்களிற்கு ஏற்றுவதற்கு சேலைன் இல்லை. இயக்கம் தன் மருத்துவப்பிரிவில் இருந்து அரச ஆஸ்பத்திரிகளிற்கு சேலைன் கொடுத்தார்கள். மிகுதிக்கு ஊர்மனைகள் எங்கும் அரசியல் போராளிகள் செவ்விளநீர் சேர்த்துவந்து ஆஸ்பத்திரிக்கு கொடுத்தார்கள்.

வன்னி நோய்ச்சூறாவளிக்கு அஞ்சும் நிலமாகியது, போரை அஞ்சிய காடுகள் கொள்ளை நோயை அஞ்சின. அரசாங்க அதிபர் வெறும் கையோடு வந்ததும் புலிகள் இதனை வேறு கோணத்தில் பார்த்தார்கள்.

காரணம் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் நோய்க்குச் சாட்சியாக உலக மனச்சாட்சியை உலுப்பும் இந்தச் செய்தியை வெளியிட அதிகம் விரும்பவில்லை. அரசாங்கத்தை உதவச் சம்மதிக்க வைக்கவும் அவற்றால் முடியவில்லை. புலிகள் இதனை அரசாங்கம் தொடுக்கும் இன்னொரு போர் என்று கருதினார்கள். கிருமிப்போர். போரை வெல்ல முடியாத அரசு கிருமித்தொற்றுப் போரை நடத்தும் அயோக்கியத் தனத்தில் இறங்கிவிட்டதா?

நோய்வந்த திசையை பொறுப்பாளர் கண்டுபிடித்து புலிகளின் புலனாய்வுத் துறையை உசுப்பிவிட்டார். நோய் அரச கட்டுப்பாட்டில் இருந்து உள்வந்த பயணிகளுடன்தான் வன்னிக்கு வந்திருக்கிறது. அது பண்டிவிரிச்சான் பாதையூடாக உள்வந்ததை பொறுப்பாளர் உறுதிப்படுத்தினார்.

நோயாளிகளைப் பராமரிக்க ஆஸ்பத்திரி தாதியர்கள், சிற்றூழியர்கள் அஞ்சினார்கள். உயிரைப் பணயம் வைக்கும் வேலை. சிலர் சவாலாக முன்வந்தார்கள். புலிகள் தங்கள் மருத்துவப் போராளிகளை ஆஸ்பத்திரி சிறப்பு விடுதிகளிற்கு நோயாளர்களை பராமரிக்க அனுப்பிவைத்தார்கள்.

– இப்படி அன்றைய கருநிலை தமிழீழ அரசு தனது மக்களை நோக்கி வரும் இடரை எதிர்கொண்ட விதத்தையும் அதன் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஆபத்துக்களை விளங்கிவைத்திருந்த விதத்தையும் போருழல் காதை நாவலில் விவரிக்கிறார் போராளியும் எழுத்தாளருமான குணா கவியழகன்.

இவ்வாறே மலேரியா தொற்று ஆசியாவின் பெரும்பாலான நாடுகளை ஆட்டிப்படைத்த காலத்தில் வன்னிக் காட்டுப்பிரதேசத்திற்குள் சென்ற புலிகளையும் மக்களையும் நுளம்புகள் கவனித்துக்கொள்ளும் என்று சந்திரிக்கா அம்மையாரின் மாமனாரான அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த எக்காளமிட்ட காலத்தில் – பொருளாதாரத் தடை போட்டு மலேரியாவிற்கான மருந்தான குலோரோகுயினையும் பிறீமாக்குயினையும் தடைசெய்த காலத்தில் – புலிகளும் மக்களும் இயற்கை மருத்துவத்தையும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடித்து அதில் இருந்து மீண்டு வந்தார்கள்.

உணவு, உரம் மற்றும் பூச்சிகொல்லி போன்ற தடைகளை எதிர்கொள்ள மூன்று மாத மரவள்ளி, சோழப் பயிர்ச் செய்கை உட்பட பொருத்தமான விவசாய நடவடிக்கைகளையும் இயற்கை உரம் மற்றும் இயற்கை பூச்சிகொல்லி வழிமுறைகளையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைக்கு கொண்டு வந்து மண்ணையும் மக்களையும் பஞ்சத்தில் இருந்தும் நோயில் இருந்தும் காத்தது.

## 2004 சுனாமி ஆழிப்பேரலை

ஆழிப்பேரலைத் தாக்கம் ஒரு அதிர்ச்சியாகவும் பேரிடராகவும் இருந்தபோதிலும் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் ஒருங்கிணைப்பின் கீழ் வடக்கு, கிழக்கு என்று தமிழீழ நிலப்பரப்பு எங்கும் வாழ்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிற்கான பேரிடர் முகாமைத்துவம் நெறிப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு தளபதிகள் நியமிக்கப்பட்டு அனைத்து வளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு பகிரப்பட்டு இனபேதம் பாராது நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. வெறும் மூன்று மாதத்தில் சுனாமியின் சுவடுகள் அழிக்கப்பட்டு இயல்பு வாழ்வு மீட்டுக்கொடுக்கப்பட்டது.

(21 ஆம் பக்கம் பார்க்க..)

# ஊரடங்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் உதவி



*யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.இயூஜீன் பிரான்சிஸ் அடிகளார் தெல்லிப்பளை, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 265 குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கினார். இந்த உதவிக்கான நிதியை தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத கனடா பிரான்ஸ் லண்டன் ஆகிய இடங்களைச் சேர்ந்த எஸ்.இயூஜீன் பிரான்சிஸ் அடிகளாரின் நண்பர்கள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*



# வருமானத்தை இழந்த 400 குடும்பங்களுக்கு சம்பல் அமைப்பு உலர் உணவு நிவாரணம்



'ஒரு மனதிற்கு உதவி ஒரு வாழ்வைக் கட்டி எழுப்ப' என்ற நோக்குடன் செயற்படும் சம்பல் (ளுயுஆடீயுடு) என்ற அமைப்பும் மாறி மற்றும் லோகன் சவரிமுத்து என்பவர்களால் இயக்கப்படும் சவரிமுத்து குடும்பநிறுவனமும் இணைந்து கொரோனா வைரஸ் தாக்கத்தால் அன்றாட வருமானத்தை இழந்த 400 குடும்பத்தவர்க்கு உலர் உணவு வழங்கியுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த வேலணை, அச்சுவேலி, வசாவிளான்,குருநகர் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கனகபுரம், அம்பிகைக்குளம், உதயநகர், பெரிய பரந்தன், விநாயகபுரம்,செல்வநகர், திருநகர் ஆகிய இடங்களிலும் வேலணையைச் சேர்ந்த துறையூர், அம்பிகாநகர் ஆகிய இடங்களிலும் வாழும் 400 குடும்பங்களே மேற்படி உலர் உணவுவைப்பெற்றுக்கொண்டவர்களாவர்.

இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வேலணையைச் சேர்ந்த உள்ளூர்ப் பிரதிநிதிகள் மற்றும் கிராம சேவகர் ஊடாக இனம் காணப்பட்டனர். இவ்விடங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற மேலதிகவேண்டுகோள்களை பரிசீலனை செய்யும் இந்த அமைப்பினர் வருகின்ற வாரங்களில் இன்னும் அதிக குடும்பத்தினருக்கு உதவிகளை வழங்கவுள்ளனர். தேவையில் இருக்கும் இவர்களுக்கு உதவ மேற்படி மாவட்டங்




களில் தமது நேரத்தை அர்ப்பணித்த அனைவருக்கும் சவரிமுத்து குடும்பத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

# ஓட்டமாவடி பகுதியில் வெள்ளியன்று கிராம சேவையாளர் மீது தாக்குதல்!

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காகித நகர் கிராம சேவை அதிகாரி தாக்கப்பட்டு நேற்று வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

காகித நகர் கிராம சேகர் பிரிவிலுள்ள மக்களுக்கு ஏப்ரல் மாத்திற்கான சமுர்த்தி கொடுப்பனவும், அதனுடன் இணைந்தஉலர்உணவுப் பொதிகளும் காகித நகர் கிராம அதிகாரி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் காகித நகர் கிராம அதிகாரி பிரிவில் கிராம சேவை அதிகாரி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உதவிகளை வழங்கும் சமயத்தில் அவ்விடத்தில் நின்ற நபர் மக்களைப் புகைப்படம் எடுக்கின்றனர் எனக் கிராம சேவை அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்வரிடம் முறையிட்டுள்ளனர்.

இதன்பிரகாரம்வெள்ளிக்கிழமை மாலை கிராம சேவை அதிகாரி காவத்தமுனையைச் சேர்ந்த புகைப்படம் எடுத்த நபரான நைனா முஹம்மது முஹம்மட் சியாம் என்பவரை புகைப்படம் எடுக்க வேண்டாம் என்று கூறிய போது அவர் கிராம சேவை அதிகாரியைப் பிடித்து தள்ளியதால் கிராம சேவை அதிகாரி விழுந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அதன் பிற்பாடு சிறு வாக்குவாதம் இடம்பெற்றது. கிராம சேவை அதிகாரி வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிராம அதிகாரியை தாக்கிய நபரை பொலிஸார் தேடிவரும் நிலையில், நேற்று சனிக்கிழமை மாலை வரை அவர் தலைமறைவாகியுள்ளார்.

இன்று உடலில் சற்று வலி அதிகமாக இருந்ததால் கிராம அதிகாரி, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றமையுடன், தாக்கிய நபரை கைது செய்யும் நடவடிக்கையில் வாழைச்சேனை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.


காகித நகர் கிராம சேவை அதிகாரியைத் தாக்கியவர் என்று கூறப்படும் காவத்தமுனையைச் சேர்ந்த நைனா முஹம்மது முஹம்மட் சியாம் என்பவர் காவத்தமுனை பிரதேசத்திற்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரமுகர் என்றும் தெரிவிக்கப்பட்டது.






# மரத்தில் சிக்குண்டு எட்டு மணி நேரம் தவித்த ஐந்து அடி நீளமான பெண் சிறுத்தை புலி மீட்பு

## மஸ்கெலியா காட்மோர் தம்பேதன்ன தோட்டத்தில் சம்பவம்







மஸ்கெலியா காட்மோர் தம்பேதன்ன தோட்டத்தில், ஐந்து அடி நீளமான பெண் சிறுத்தை புலியொன்று (ஸ்ரீலங்கன் டைகர்) 15 அடி உயரமான மரமொன்றில் ஏறி கிளைகளுக்கிடையில் சிக்கி, இறங்க முடியாமல் சுமார் 8 மணிநேரம் தவித்தது. இதனையடுத்து மயக்க ஊசி செலுத்தப்பட்டு அது உயிருடன் மீட்கப்பட்டது.

மேற்படி தோட்டத்தில் சிறுத்தை சிக்கியிருப்பதை அறிந்த தோட்ட முகாமையாளர் அது தொடர்பில் இன்று காலை மஸ்கெலியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார். அதன் பின்னர் பொலிஸார் ஊடாக நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இராணுவம், பொலிஸார், வனவிலங்கு அதிகாரிகள் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தோட்ட மக்களும் குவிந்தனர்.

மரக்கறி தோட்டமொன்றில், மிருகங்களிடமிருந்து விளைச்சலை பாதுகாக்கும் நோக்கில் போடப்பட்டிருந்த கம்பி வலையிலேயே 4 வயதான இச்சிறுத்தை புலி சிக்கியுள்ளது. மக்கள் நடமாட்டத்தை கண்டதும் வலையை பிய்த்துக்கொண்டு மரத்தின் மீது ஏறியுள்ளது.

மரத்தின் உச்சிக்கே சென்ற பிறகு, வலையில் இருந்த பலகைதுண்டு, மரத்தின் கிளைகளுக்கிடையில் சிக்கிக்கொண்டதையடுத்து, கீழே இறங்க முடியாமல் சிறுத்தைப் புலியும் சிக்கிக் கொண்டது.

பின்னர், ரந்தெனிகல மிருகவைத்தியசாலையிலிருந்து,



மிருக வைத்திய அதிகாரியொருவரும் வரழைக்கப்பட்டு, கீழிருந்து துப்பாக்கி மூலம் மயக்க மருந்து செலுத்தப்பட்டு, சிறுத்தைப்புலி கீழிறக்கப்பட்டது.

சிகிச்சைகளுக்காக மினிப்பே மிருக வைத்தியசாலைக்கு சிறுத்தைப்புலி கொண்டு செல்லப்பட்டது. குணமடைந்த பின்னர் சரணாலயத்தில் அது விடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சமுர்த்தி அலுவலரைத் தாக்கிய நான்கு பேருக்கு விளக்கமறியல்

ரத்தோட்டை பகுதியில் சமுர்த்தி அதிகாரியை தாக்கிய குற்றச்சாட்டில் நேற்றுக் கைதுசெய்யப்பட்ட நால்வர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மாத்தளை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதிகாரி நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தபோதே, அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


தாக்குதலுக்கு இலக்கான அதிகாரி ரத்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல. 021 222 4353 021 492 3200 071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikathir





# சூரிய ஒளி இல்லாமல் 127 நாள் இருந்து விட்டு நேரே கொரோனா வைரஸ் சமூக முடக்கத்துக்கு

## கேரள விஞ்ஞானியின் அனுபவம்

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக உலகம் முழுவதும் மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சில உடல் சார்ந்த பிரச்சினைகள் உள்ளவர்கள் 12 வாரங்களுக்கு வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என அறிவுரை கூறப்பட்டுள்ளது. அவர்களில் பலருக்கு மூன்று மாதங்களுக்குச் சூரிய ஒளியே பாராமல் இருப்பது மிகக் கடினமானது.

இந்நிலையில், சமீபத்தில் வட துருவத்தின் கடும் குளிர்காலத்தில், பல மாதம் தொடர்ந்து நீடிக்கும் துருவ இரவுக் காலத்தில் வாழ்ந்து திரும்பிய கேரள விஞ்ஞானி ஒருவர் அங்கு எப்படி வாழப் பழகினார் என்ற அனுபவத்தை பிபிசியுடன் பகிர்ந்துகொண்டார்.

ஒவ்வொரு ஆண்டும் கடுங்குளிர் காலத்தில் ஆர்க்டிக், அண்டார்க்டிக் பகுதிகளுக்குப் பலவித சோதனைகள் செய்வதற்காக நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் செல்கின்றனர். அங்கே அவர்கள் சூரிய ஒளியைப் பார்க்காமல் பல மாதங்களுக்கு வாழ்கின்றனர்.

### இந்த சூழ்நிலையில் எப்படி சமாளிப்பது?

முதலில் சில நாள்களுக்கு சூரிய வெளிச்சத்துக்காக ஏங்கினேன். அந்த சூழ்நிலையில் பொருத்திக்கொள்வது கடினமாக இருந்தது. ஆனால் வெகு விரைவில் தகவமைத்துக் கொண்டேன். கிட்டத்தட்ட, இருட்டு பிடித்துப்போய் கிட்டத்தட்ட இருளுக்கு அடிமையாகிப் போனேன் என்று பிபிசியிடம் கூறினார் விஷ்ணு நந்தன்.

இவர் ஒரு கடற்பனி ளௌதாலையுணர்வு விஞ்ஞானி. கனடாவில் உள்ள மனிடோபா பல்கலைக்கழகத்தின் புவி நோக்கு அறிவியல் மையத்தில் முனைவர் பட்டத்துக்குப் பிந்திய ஆய்வாளராக பணியாற்றுகிறார்.

'மொசைக்' (MOSAiC) என்று அறியப்படும், இதுவரை நடத்தப்பட்டதிலேயே மிகப்பெரிய ஆர்க்டிக் பருவநிலை ஆராய்ச்சிப் பயணத்தில் பங்கேற்ற ஒரே இந்தியர் இவரே.

ஜேர்மனியின் ஐஸ் உடைப்புக் கலமான ஆர்.வி.போலார்ஸ்டெர்ன் கப்பலில் தங்கியிருந்து சுமார் 60 விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சிப் பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.



### உயிரியல் கடிகாரம்

இந்த ஆராய்ச்சிப் பயணக் குழுவினர் ஆர்க்டிக் பகுதிக்கு வந்தவுடன் தங்கள் கடிகாரங்களில் மொஸ்கோ நேரத்தை வைத்துக்கொண்டனர்.



ஆனால், அது அவ்வளவு எளிதாக இல்லை. அவர்களுடைய உடல் இந்த நேர மாற்றத்துக்கு ஒத்துழைக்காமல் தகராறு செய்தது.

ஆர்க்டிக் பகுதியில் 127 நாள்கள் இருந்துவிட்டு திரும்பிய நந்தன் பிபிசியிடம் இது பற்றிப் பேசினார்.

என் உயிரியல் கடிகாரம் உறுதியாக செயல்படவில்லை. சில நாள்கள் நான் காலை உணவுக்குக் கூட எழுந்திருக்கவில்லை. சில நாள்களில் மிக சீக்கிரமாக இரவு தூங்கப் போவேன். சில நேரம் நள்ளிரவு தாண்டி தூங்கப்போவேன் என்றார் அவர்.

புவியின் உறைந்த பாகங்களைப் பற்றிய 'கிரையோஸ்பியர்' ஆராய்ச்சியில் 7 ஆண்டுகளாக அவர் ஈடுபட்டிருக்கிறார். இந்த காலகட்டத்தில் அவர் 15 முறை ஆர்க்டிக் மற்றும் அண்டார்க்டிக் பகுதிகளுக்குப் பயணம் செய்திருக்கிறார்.

உங்களுக்கு சூரிய உதயமோ, சூரிய அஸ்தமனமோ தெரியாது. சில நாள்களில் நான் தூக்கத்தில் இருந்து எழும்போதே சோர்வாக இருப்பேன் என்றார் அவர்.

வெளியே பார்த்தால் எப்போதும் இருட்டாகவே இருக்கும். உங்கள் உடல் உங்களை எழவிடாது.

### உறக்கமும் உடல் நலமும்

உடலுக்கு அத்தியாவசியமான டி விட்டமினை தருவது மட்டுமல்லாமல், மன நிலையையும் உற்சாகப்படுத்துகிறது சூரிய ஒளி. பகல் – இரவு இரண்டையும் தெளிவாகப் பிரித்துக்காட்டும் வழிமுறை இல்லாவிட்டால், உடலின் இயற்கையான ஒத்திசைவு மாறிவிடுகிறது.

தூங்கும் முறை சீர்கெடும்போது ஒருவருக்கு சோர்வும் எரிச்சலும் ஏற்படும். பல வாரங்களுக்கு, பல மாதங்களுக்கு இந்த நிலை தொடர்ந்தால் அதனால், உடல் நிலையில் மோசமான விளைவுகள் ஏற்படும்.

அக்டோபர் தொடக்கம் முதல் மார்ச் இறுதி வரையிலான குளிர் காலத்தில் வட துருவம் இருள் சூழ்ந்து காணப்படும்.

கரப்பான் பூச்சி அதிகம் உறங்காது. அதைப் போன்றவன் நான் என்றபோதும், போதிய தூக்கமின்மை என்னை களைப்படைய வைத்தது. பிற்பகலில் நான் வேலை செய்ய வேண்டியிருந்தால், சில நேரம் என்னை நானே ஊக்குவித்துக்கொள்வது கடினமாக இருக்கும்.

வெளியே வெறித்தனமான காற்றும், குளிரும் நிலவும். வெப்ப நிலை மைனஸ் 55 டிகிரி அளவுக்கு செல்லும் – என்றார்.

துருவப் பகுதியில் அனுபவம் மிக்கவரான நந்தன், துருவப் பகுதிகளில் கோடை காலம் நிலவும்போது அடர் இருளின் எதிர் நிலையாக தொடர்ந்து வெயிலைப் பார்த்துள்ளார்.

24 மணி நேரமும் வெயில் இருக்கும் போது, காலை வேளைகளில் மிகுந்த உற்சாகம் இருக்கும். ஆனால் மாலை வேளைகளில் சோர்வில் துவண்டுபோவீர்கள். இரவின் நடுவில் தூக்கம் கலைந்துவிட்டால் என்னால் மீண்டும் தூங்க முடியாது.

### மிகுந்த விழிப்பு

அதிநவீன கருவிகளையும், மொசைக் திட்ட விஞ்ஞானிகளையும் கொண்ட பனியை உடைத்துச் செல்லும் கப்பலான போலார்ஸ்டெர்ன் கடந்த பிப்ரவரி 23 ஆம் திகதி ஒரு பழைய சாதனையை முறியடித்து, புதிய சாதனை படைத்தது.

(21 ஆம் பக்கம் பார்க்க...)



**சமீபத்தில் வட துருவத்தின் கடும் குளிர்காலத்தில், பல மாதம் தொடர்ந்து நீடிக்கும் துருவ இரவுக் காலத்தில் வாழ்ந்து திரும்பிய கேரள விஞ்ஞானி ஒருவர் அங்கு எப்படி வாழப்பழகினார் என்ற அனுபவத்தை இங்கு பகிர்ந்துகொண்டார்.**

காலைக்கதிர்
Kalaikathir



# இன்றைய கொரோனாவும்...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

(இக்காலத் தில் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழீழ பிரதேசங்களே ஆகும். ஆனாலும் ஒப்பீட்டளவில் குறைந்தளவில் பாதிக்கப்பட்ட தமது பிரதேசங்களை மீட்க இலங்கை அரசு தள்ளாடியது வரலாறு.)

மிகப்பெரும் நாடுகளிற்கு பல மாதங்க ளும் பல வருடங்களும் எடுத்த ஒரு விட யத்தை தன் சொந்தக் காலில் நிற்கும் ஒரு சிறிய தேசம் குறுகிய காலத்தில் வென்றுகாட் டியது என்பது சாதாரண விடயம் அல்ல.

அது அவர்களின் பலமும் திறமையும் என்பதோடு மிகவும் தொன்மையான நாக ரிகமடைந்த தேசிய இனமொன்றின் பொது மனத்தில் பொது நலன் பேணும் பண்பாட் டின் வெளிப்பாடுமாகும். கூடவே பேரிடர் காலத்தை தனிமனிதராகவும் சமூகமாக வும் எதிர்கொள் ளும் தமிழ் மக்களுடன் தொன்று தொட்டு தொடர்ந்துவரும் இயல்பு மாகும்.

பேரிடர் முகாமைத்துவ கட்டமைப்பின் அடிப்படை யில் பேரிடர் ஏற்பட்டவுடன் அல் லது அபாயம் எச்ச ரிக்கப்பட்டவுடன் எடுக்கப் படுகின்ற நடவடிக்கைகளும் அடுத்து மீட்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதோடு தடுப்பு மற்றும் தணிக்கும் அல்லது இல்லாமல் போகச்செய்யும் நட வடிக்கைகளிற்கான முற்னேற்பாடுகளும் பின்னர் இன்னொரு பேரிடரிற்கான தயார் நிலையில் இருத்தல் அல்லது தயார்ப்படுத்து தலிற்கு தேவையான நவீன அவதானிப்பு மற்றும் எச்சரிக்கை நிலையங்களை அமைக்கும் பணிகளும் தொடர்ந்து முன் னெடுக்கப்பட்டன.

இன்றைகொரொனபேரிடரையும்உலகம் அதை எதிர்கொண்டு நிற்கும் பின்னணியை யும் மேற்படி தமிழீழ நிர்வாகத்தோடு ஒப் பிட்டுப்பார்க்கும்போது அது முன்னேற்றத் துக்கு வழிசொல்லும்.

உலகம் முழுவதும் கோரத்தாண்டவம் ஆடிவரும் கொரொனா வைரஸ் தாக்கம் ஏற்படுத்தியிருக்கும் பேரிடர் நிலையானது ஒவ்வொரு நாடுகளினதும் பேரிடர் முகா மைத்துவத்தை கேள்விக்கு உள்ளாக்கியிருக் கிறது.

அணுவைத் துளைத்து சக்தி பெறவும் அண்ட வெளியை ஆய்வு செய்து பயணம் தொடரவும் வல்லமை வழங்கும் நவீன விஞ் ஞான தொழில் நுட்பத்தால் சிகரம் தொட்டு நிற்கும் உலக நாடுகள் பேரிடர் முகாமைத் துவத்தில் கோட்டை விட்டிருப்பது என்பது கட்டிய கோட்டைகள் எல்லாம் வானத்தில் கட்டிய கற்பனைக் கோட்டைகள் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

உற்பத்தியை,ஏற்றுமதியை,பங்குச்சந் தையை என்று நவீன உலகின் இயங்கு மார்க்கமான நவதாரள வாதத்தின் தூண் களை ஆட்டம் காண வைத்திருக்கிறது.

வைரஸ் பரவலின் தாக்கம் ஒவ்வொரு நாடும் கட்டிவைத்திருக்கும் இராணுவ, பொரு ளாதார, தொழில்நுட்பப் புலனாய்வுக் கோட் டைச்சுவரில் உள்ள கற்களை ஒவ்வொன்றாக பிடுங்கி எறிவது போன்ற நிலையை ஏற்ப டுத்தியிருக்கிறது.

வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதன் வெற்றியே பொருளாத ரத்தை காப்பாற்றும், பொரு ளாதாரமே இருக்கும் இராணுவ தொழில்நுட்ப வல் லமையை தக்கவைக்கவும் மேலும் வலு வூட்டவும் உதவும்.

சுருங்கச் சொல்லின் பேரிடர் கால முகா மைத்துவத் தில் யார் வல்லவர்களோ அவர் களேதாம்கட்டிவைத்திருக்கும்கோட்டைச்சுவர் களை காக்கவும் மேலும் பலப் படுத்தவும் தகுதியானவர்கள் என்ற நிலை காணப்படு கிறது.

இராணுவ பொருளாதார மேலான்மை நிலைக்கும் அப்பால் ஒரு நாடு வல்லரசா இல்லையா என்பதையும் அது தனது மக்க ளுக்கான நல்லரசா இல்லையா என்பதையும் தீர்மானிக்கும் அடிப்படை விடயமாக அளக் கும் கூடுதல் கருவியாக அந்த நாட்டினது இடர் முகாமைத்துவ ஆற்றல் என்ற ஒன்று உண்டு என்ற பேருண்மையை கொரொனா வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

பேரிடர் முகாமைத்துவம் என்பது ஒரு பேரிடர் ஏற்பட்டவுடன் அல்லது அபாயம் எச் சரிக்கப்பட்டவுடன் எடுக்கப்படுகின்ற நடவ டிக்கைகள் (Response),அடுத்து மீட்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் (Rehabilitation and Recovery), அடுத்து தடுப்பு மற்றும் தணிக்கும் அல்லது இல்லாமல் போகச்செய் யும் நடவடிக்கைகள் (Prevention and Mitigation), பின்னர் இன்னொரு பேரிடரிற் கான தயார்நிலையில் இருத்தல் அல்லது தயார்ப்படுத்துதல் (Preparedness) என்ற நான்கு அடிப்படைக் கட்டங்களைக் கொண்ட ஒரு முகாமைத்துவம்.

இவ்வாறு பேரிடர் ஒரு நோய்த் தாக்க மாகஉருவெடுத்துத்தாக்கும்போதுநோயைக் கண்டறிதல்(Trace),நோயாளியை தனி மைப்படுத்துதல் (Test),சிகிச்சைய ளித்தல் (Treat) என்ற படிமுறைகளை பின்பற்று தலே அதனை வெல்வதற்கான சரியான வழிமுறை என்று உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த நோயை வெற்றிகரமாக எதிர் கொள்ளும் நாடுகளில் சீனா முதலிடத்தில் நிற்கின்றது. சீனாவையும்தென்கொரியாவை யும் முன் மாதிரியாகக் கொண்டுதான் உலக சுகாதார நிறுவனம் மேற்படி அறிவுறுத்தலை வெளியிட்டிருக்கிறது என்பது கவனத்திற்கு ரியது.

சீனா, இத்தாலி, ஸ்பெயின், ஈரான் மற் றும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் என இந்நோய் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் நாடுகளில் ஒப்பீட்டளவில் சீனாவால் எவ்வாறு அதை துரிதமாக கட்டுப் படுத்தவும் பாதிக் கப்பட்டவர்களை சுகப்படுத்தவும் முடிகிறது என்ற கேள்விக்கான பதிலில் ஆழமாக சிந் திக்கக்கூடிய பல விடயங்கள் உள்ளடங்கி யிருக்கின்றன.

மேற்சொன்னபடி இடர் முகாமைத்துவ வல்லமை, தொற்று நோய் முகாமைத்துவ பொறிமுறை போன்றவற்றுடன் 80 வீத மான வைத்திய சாலைகள் அரசின் கட்டுப் பாட்டில் இருப்பதும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் கலந்து பயன்படுத்தப்பட்டு வருவதும் காரணமாக சொல்லப்படுகிறது.

மருத்துவச்செலவிற்காக தனி நபர் ஒரு வரிற்கு இத்தாலி 2,700 டொலர், ஸ்பெயின் 2,354 டொலர், பிரிட்டன் 4,356 டொலர், ஜேர்மனி 4,592 டொலர், அமெரிக்கா 9,536 டொலர் எனச் செலவு செய்தாலும் அவற்றின் மருத்துவக் கட்டமைப்புக்கள் அனைத்தும் தனியார் வசம் இருப்பதால் அவசரகாலத்தில் அது மக்களுக்கு முழுவது மாக பயன்படும்நிலையில் இல்லாததால் அந்த அரசுகள் இன்று பல்லாயிரக்கணக் கான மக்களைப் பலிகொடுத்தும், அதைக் கட்டுப்படுத்துவதற்கான வழி தெரியாமலும் சிக்கித் திணறி வருகின்றன என்று சொல் லப்படுகிறது.

ஆனால் வெறும் 426 டொலர்களையே ஒரு தனி நபரிற்கான மருத்துவச்செலவாக கொண்டிருக்கும் சீன அரசிடம் 80 வீத மான மருத்துவமனைகள் இருப்பதும் பாரம் பரிய மருத்துவ முறைகளையும் கலந்து பாவிப்பதும் முன்னேற்றத்துக்கான கார ணங்கள் வரிசையில் அடுக்கப்படுகின்றன.

மருத்துவத்தை முழுமையாக தனியார் மயப்படுத்தியிருக்கும் அமெரிக்கா முற்று முழுதாக காப்புறுதி நிறுவனங்களில் தங்கியிருக்கும் நிலையில் உலகின் அதிக மான தொற்றுக்கு ஆளானோரின் நாடாகவும் இறப்புவிகிதம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது.

இவ்வாறு பேரிடர் முகாமைத்துவம், தொற்றுநோய் முகாமைத்துவ பொறிமுறை, மருத்துவமனைகளை இயக்குவது உட்பட்ட அரசின் பிடி, எத்தகையை வைத்தியத்தை மேற்கொள்வது என்ற வைத்திய முறை மற் றும் பலம் போன்ற விடயங்களே பொருளா தாரத்திற்கும் இராணுவ வல்லமைக்கும் மேலான நல்லரசிற்கும் வல்லரசிற்குமான உண்மையான தகுதியென கொரொனா இனம் காட்டியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இயங்கிவந்த கருநிலைத் தமிழீழ அரசின் இடர்கால மற் றும் பேரிடர்கால வரலாறு சொல்லும் பாடம் ஆச்சரியங்களும் வரப்பிரசாதங்களும் நிறைந்தது. மேலோட்டமாக பார்த்தால் சீனா போன்ற நாடுகளின் பேரிடர்கால நடவடிக் கைகள் இன்று முன் மாதிரியாக தோன்றும். ஆனால் வரலாற்றை ஆழமாக பார்த்தால் சீனாவிற்கும் முன்னோடியாக தமிழீழம் வெளித்தெரியும். இன்றைய பேரிடர் கால சவால்கள் அனைத்திற்கும் விடுதலைப்புலி களின் தமிழீழ வரலாற்றில் செல்வழி உள் ளது.

# சூரிய ஒளி இல்லாமல்...

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி..)



புவியியல் வட துருவத்தில் இருந்து 156 கி.மீ. தூரம் சென்றதே அந்த சாதனை.

கடுமையான ஆர்க்டிக் குளிர் காலத்தில் இதற்கு முன் எந்த ஒரு கப்பலும் இவ்வளவு தூரம் சென்ற தில்லை என்கிறார் நந்தன். ரேடார் செயற்கை கோள்களையும், தரை யில் இருந்து இயங்கும் ரேடார் உணர்விகளையும் கொண்டு இவர் கடலின் பனிப்பாறைகளின் தடி மனை அளக்கிறவர்.

போலார் கரடிகளின் இல்லமாக ஆர்க்டிக் பிரதேசம் விளங்குகிறது.

உலகில்தரையில்வாழும்வேட்டை விலங்குகளில் மிகப்பெரியதான துருவக் கரடிகளின் ஒரே வீடு கடற் பனிப்பரப்புதான்.

ஒரு நேரம், ஒரு பனிக்கரடி எங் களுடைய இடத்துக்கு வந்து எங்கள் கருவி ஒன்றை வைத்து விளையா டத் தொடங்கிவிட்டது என்றார் நந் தன்.

பாதுகாப்பைக்கருத்தில்கொண்டு, துப்பாக்கி ஏந்திய பனிக்கரடி கண் காணிப்போர் அவர்களோடு இருந் தார்கள். இந்த கடுமையான சூழல் தமது விழிப்பு நிலையை அதிகரித்த விட்டதாகக் கூறுகிறார் நந்தன்.

24 மணி நேரமும் இருள் சூழ்ந்த நிலையில், உங்களுக்கு அதிக கவ னம் வந்துவிடும் என்கிறார் இந்த விஞ்ஞானி.

ஆய்வுப் பயணத்தில் தினசரி செய்யவேண்டிய, கிட்டத்தட்ட என்றும் மாறாத செயல்திட்டத்தை வகுத்துக் கொண்டு செயல்பட இது தமக்கு உதவியதாக அவர் சொல்கிறார். காலை உணவுக்குப் பிறகு, (பல நேரங்களில், பசியின்மை காரண மாக காலை உணவை நந்தன் தவற விடுவார்) இவரது குழு கப்பலில் இருந்து இறங்கி களத்தில் அமைக் கப்பட்டுள்ள ஆய்வகத்துக்கு செல் லும். அங்குதான் கருவிகள் அமைக் கப்பட்டிருக்கும். பிறகு பகல் உண வுக்கு இந்தக் குழு கப்பலுக்குத் திரும்பும். பிறகு, மீண்டும் திரும்பிச் சென்று பல மணி நேரம் களப்பணி செய்யும்.

### தளர்ச்சி

பனிப் பரப்பில் இருக்கும்போது உங்களுக்கு ஏராளமான ஆற்றல் இழப்பு ஏற்படும். ஏனெனில் அப் போது உடல் கலோரிகளை எரிக்கும். நான்கு மாத காலத்தில் நான் 10 கிலோ எடையை இழந்தேன்.

கப்பலில் உள்ள சமையலறை யில் இருந்து அனைவருக்கும் வழக்க மான உணவு வழங்கப்படும். குழு உறுப்பினர்களுக்கும் சமைப்பதற்கு அழைப்பு விடுக்கப்படும். வெஜிடபிள் பிரியாணி, ஸ்பினாஷ் டோஃபு கறி, தந்தூரி கோழிக்கறி, மீன் ஆகிய வற்றை மொத்த குழுவுக்கும் சமைத் தார் நந்தன்.

பணியில் தொடர்ந்து கவனம் வைக்க, பொழுதுபோக்கும் அவசி யம். இரவு மதுக்கூட நிகழ்வு வாரத் துக்கு மூன்றுமுறை நடந்தது. மனம் சோர்வடையும்போது அவர்கள் விளையாடினார்கள்.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு போன்ற நிகழ்வுகளை குழுவினர் கொண் டாடினர். விஷ்ணு நந்தனின் பிறந்த நாள் கொண்டாட்டமும் நடந்தது.

ஆனாலும், தனித்து வாழ்வதால் ஏற்படும் பாதிப்புகளும் நிகழ்ந்தன.

பிப்ரவரி இறுதி வாக்கில், கடுமை யான வேலையால் பலரும் சோர்வ டைந்துவிட்டனர்.

### துருவப் பகுதியில் இருந்து பொது முடக்கத்துக்கு

வட துருவத்தில் இருந்து கப்பல் புறப்பட்டு தூரமாக வந்ததும் பகலவனின் முதல் கதிர்களைப் பார்த்தார் நந்தன்.

நான் இருளை வெறுக்கவில்லை. கப்பலில் இருந்த எங்களில் பலருக் கும் இருள் ஒரு வாழ்க்கை முறை ஆய்வுகூட வசதிகளுடன் ஜேர் மனி நாட்டுப் பனிபாறைகளை உடைக்கும் கப்பல் கனாவில் உள்ள கல்காரிக்கு அவர் திரும்பி வந்தபோது உலகமே கொரோனா வைரஸ் பரவல் காரண மாக பொது முடக்கத்தில் இருந்தது. கனடாவில் நுழைகிற ஒவ்வொரு வரையும் போலவே நந்தனும் தம் மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் பட்டார்.

தீவிரமான சூழ்நிலைகளில் அவர் வாழ்ந்த வாழ்க்கை, பொது முடக்கத் தின் கட்டுப்பாடுகளை பெரிய சிரமம் இல்லாமல் சமாளிக்க அவருக்கு உதவியாக இருந்தது.

உடல் நலத்தோடு இருக்க நீங் கள் உடற்பயிற்சிக்கூடம் செல்ல வேண்டியதில்லை. வீட்டிலேயே உடற் பயிற்சி செய்யலாம். பல ஸ்ட்ரீமிங் தளங்களில் நல்ல வழிகாட்டும் வீடியோக்கள் உள்ளன.

சில நாடுகளில் பொது முடக்கத் தின்போது, உடற்பயிற்சிக்காக சிறிது நேரம் வெளியே செல்ல மக்களுக்கு அனுமதி தரப்படுகிறது. ஆனால், வெளியில் செல்ல அனுமதி இல்லா தவர்கள், எப்போதும் தங்களை ஏதே னும் ஒரு வேலையில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என்கிறார் இந்த விஞ்ஞானி.

ஏதாவது ஒரு செயல்பாட்டில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங் கள் என்று கூறும் இவர், வாழ்வில் முதல் முறையாக பரபரப்பு இல்லா மல் இருக்கிறோம். இந்த ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்திக்கொள் ளுங்கள் என்கிறார்.

இது போன்ற கடினமான சூழ் நிலைகளில் வாழ்வதற்கு மக்கள் விரைவாக கற்றுக்கொள்ளவேண் டும் என்கிறார் நந்தன்.

கிட்டத்தட்ட இதெல்லாம் ஆட்டத் தைக் கலைத்துவிட்டு புதிதாகத் தொடங்குவதைப் போல, ஆக்கத் துக்கும் அழிவுக்கும் இடையே நடக் கும் இறுதிப் போர் போல என்கிறார் நந்தன்.

# அரச அலுவலகங்கள் இயங்குவதற்கு பின்பற்றவேண்டிய நடைமுறைகள்

கொழும்பு, ஏப்.19

கொரோனா தொற்று காலத்தில் வழமையான நாளாந்த செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்காக மாவட்டங்களைத் திறக்கும் காலப்பகுதியில் அரச அலு வலகங்களினால் கடைபிடிக்கப்படவேண்டிய வழிகாட்டுநெறிகள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ ஜயசுந்தரவால் சுற்றறிக்கை மூலம் அமைச்சுச் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் /நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள் / பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையான சுற்றறிக்கை விவரம் வருமாறு:–

கோவிட் – 19 தொற்று காலத்தில் வழமையான நாளாந்த செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்காக மாவட்டங்களை திறக்கும் காலப்பகுதியில் அரச அலுவலகங்களினால் கடைபிடிக்கப்படவேண்டிய வழிகாட்டுநெறிகள்.

அரச அலுவலகங்கள் வழமையான நாளாந்த செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு உதவுமுகமாக, தற்போது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள கோவிட் – 19 தொடர்புபட்ட கட்டுப்பாடுகளை படிப்படியானதொரு அடிப்படையில் தளர்த்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. எனவே, அத்தகைய கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் புவியியற் பகுதிகளில் பணிகளை மீள ஆரம்பிக்கும் அனைத்து அரச அலுவலகங்களும் பின்வரும் வழிகாட்டு நெறிகளை கடைப்பிடிக்கவேண்டும்:–

1.0 வேலைத்தலத்தில் கோவிட் – 19ஐ தடுப்பதை உறுதிசெய்வதற்குத் தேவையான அனைத்து சுகாதார பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும்.

அ. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசங்களை அணிதல், கை கழுவுதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக கண்டிப்பான இயைந்தொழுகலை உறுதி செய்யவும்.

ஆ, அனைத்து வேலைத்தலங்களையும், குறிப்பாக பொது வெளியிடங்கள், கரும பீடங்கள், பணி அமைவிடங்கள், உணவறைகள், தேநீர் அறைககள், சிற்றுண்டிச்சாலைகள், மலசல கூடங்கள் மற்றும் வேறு பகிரப்படும் வெளியிடங்கள் ஆகியவற்றை எப்போதும் சுத்தமானதும் சுகாதாரமானதுமான ஒரு நிலையில் பேணவும்.

இ. குறிப்பாக பொது மக்கள் அடிக்கடி வருகைதரும் வேலைத்தலங்கள் சவர்க்காரம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் கை கழுவுதல் அத்துடன் / அல்லது வேலைத்தலத்தில் பொருத்தமான இடங்களில் வைக்கப்படும் கையில் தடவும் செனிட்டைசிங் ஹேண்ட் ரப் டிஸ்பென்சர்கள் வசதிகளை வழங்கவேண்டும்.

ஈ. பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பராமரிப்பு மற்றும் துப்பரவு பற்றிய வழிகாட்டுநெறிகள் தொடர்பான தகவல்களை வழங்கும் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கமான அறிவிப்புகளை தெளிவாகக் காட்சிப்படுத்தவும்.

உ. வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்தல மற்றும் அலுவலக வளாக சுகாதார பராமரிப்பு பற்றிய வழிகாட்டுநெறிகள் நிர்மாணக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் போது நிலைநாட்டப்படவேண்டும்.

ஊ. வேலைத்தள கூட்டங்களை இன்றியமையாத பங்குபற்றுநர்கள் மாத்திரம் சமுகமளித்திருக்கும் வண்ணம் முகாமைத்துவம் செய்யவும். அல்லது குறைந்த எண்ணிக்கையிலானோர் கலந்துகொள்ளும் வண்ணம் கூட்ட பங்குபற்றுநர் எண்ணிக்கயைக் குறைக்கவும்.

எ. சாத்தியமானபோதெல்லாம் தொலைவிலிருந்து பணிபுரிதலையும் வேலைத்தலத்தில் ஆள்கள் நிரம்பியிருப்பதை முடிந்தவரை குறைப்பதையும் ஊக்குவிக்கவும் (கீழே பந்தி 4.0 யும் பார்க்கவும்).

ஏ. அனைத்து மாவட்டங்களிலும் பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி நிறுவனங்கள் ஆகியன மூடப்பட்டிருக்குமெனினும், தொலைக் கற்றல் முறைமை மற்றும் தொலைவிலிருந்து பணியாற்றும் ஏற்பாடுகள் மூலம் இயங்கும் (கீழே பந்தி 4.0 யும் பார்க்கவும்).

ஐ. இக்காலப்பகுதியில் பெரும் ஒன்றுகூடலோடு எவ்வித மத செயற்பாடுகள் மற்றும் கூட்டங்கள் முதலியன ஏற்பாடு செய்யப்படலாகாது.

ஒ. வேலையோடு தொடர்புபட்ட அத்தியாவசியமற்ற பயணங்களை நிறுத்திக் கொள்ளவும். இன்றியமையாத பயணங்களை மேற்கொள்ளவேண்டியுள்ள ஊழியர்கள் குறிப்பிட்ட புவியில் பகுதிகளில் நிலவும் ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்கவும்.

ஓ. மிக இலேசான கோவிட் – 19 தொற்று அறிகுறிகள் கொண்டவர்கள் கூட வீட்டிலேயே தங்கியிருக்கவேண்டும் என்று ஊழியர்களுக்கு அறிவுறத்தவும்.

ஔ. ஊழியர்கள், கூட்டங்களில் பங்குபற்றுபவர்கள் மற்றும் வேலைத்தலத்தில் பல்வேறு சேவைகளை வழங்குபவர்கள் ஆகியோரின் பெயர்கள் தொடர்பு விவரங்கள் ஆகியவற்றைப் பேணவும்.

ஃ. சுகாதார அமைச்சின் சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பணியகத்தினால் விடுக்கப்பட்ட வேலைத்தல கோவிட் – 19 தயார்நிலை வழிகாட்டுநெறிகளுக்கும் இயைந்தொழுகவும். இதனை:

http:www.epid.gov.lk/web/images/pdf/Circulars/Coronavirus/workplace - covid - guideline02042020.pdfஎன்ற இணையத்தளத்தின் மூலம் சென்றடையலாம்.

க. வேலைத்தல நிலமை சுகாதார மற்றும் துப்பரவு பாதுகாப்புகளுக்கு இயைந்தொழுகுகிறதா என்பதை முறையாகக் கண்காணிப்பதற்கும் தேவையானவிடத்து உடனடி தணிப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் உத்தியோகத்தரொருவரை அமர்த்தவும்.

2.0 ஊழியர்கள் கட்டங்கட்டமாக வேலைக்குத் திரும்பவதற்கான பொறிமுறையொன்றைத்திட்டமிட்டுநடைமுறைப்படுத்தவும்.

அ. ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பணியாளர்களோடு அரச அலுவலகங்கள் வழமையான அலுவலக பணிகளை மீள ஆரம்பிக்கவேண்டும். ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் இக்காலப்பகுதியில் வேலை முறைமை தொடர்பாக சிறப்பு அறிவுறுத்தல்களை விடுக்கவேண்டும்.

ஆ. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மாவட்டங்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் பாதிப்புறத்தக்க மாவட்டங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள அரச அலுவலகங்கள் ஆரம்பத்தில் ஒரு சுழற்சி அடிப்படையில் 50 சதவீத ஊழியர்கள் வேலைக்கு சமுகமளிக்கும் வகையில் இயங்கவேண்டும். ஊழியர்களைத் தெரிவு செய்தல் ஊழியர் வகை, சேவைத் தேவைப்பாடு, திறன், வேலைத்தலத்திற்கு அண்மித்திருத்தல் அல்லது அது போன்ற எடுகோள்களின் அடிப்படையில் அமையலாம்.

இ. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மாவட்டங்களிலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் பாதிப்புறத்தக்க மாவட்டங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் மாவட்டங்களிலும் உள்ள அரச அலுவலகங்கள் ஆரம்பத்தில் ஒரு சுழற்சி அடிப்படையல் 20 சதவீத ஊழியர்கள் வேலைக்கு சமுகமளிக்கும் வகையில் இயங்கவேண்டும். மேலே குறிப்பிடப்பட்டவாறு, ஊழியர்களைத் தெரிவு செய்வதற்கு நிறுவனத் தலைவர்கள் பொருத்தமான எடுகோள்களைக் கடைப்பிடிக்கலாம்.

ஈ. ஒவ்வொரு நிறுவனத்திலும் பணியாளர்களைக் கடமைக்கமர்த்துதல் அந்தந்த நிறுவனத் தலைவரினால் தீர்மானிக்கப்படவேண்டும். வேலைத்தலத்திலும் பொது போக்குவரத்து முறையிலும் ஆள்கள் அளவுக்கதிகம் நிரம்பியிருப்பதை குறைக்குமுகமாக பகலில் 02 தனித்தனி வேலை நேரங்களில் பணியாற்றுதல் போன்ற நெகிழ்வான கடமை நேரங்கள் நிறுவனத் தலைவரின் தற்றுணிபில் ஏற்பாடு செய்யபப்படலாம்.

உ. ஒரு குறிப்பிட்ட விகிதத்திலான ஊழியர்கள் பணிக்குச் சமுகமளிக்காத போதும் அரச சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான எற்பாடுகளை மேற்கொள்ளவும்.

3.0 அரச சேவைகளை நாடிவரும் பொதுமக்கள் வேலைத்தலங்களில் அல்லது பொதுப் போக்குவரத்து முறைமைகளில் அளவுக்கதிகம் நிரம்பியிராதிருப்பதை உறுதி செய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகளை அறிமுகம் செய்யவும்.

அ. வழக்கமாக பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் அரச அதிகாரிகள் மட்டுப்படுத்தபட்பட்டளவு ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிக்கும் இக்காலப்பகுதியில் பொதுமக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சிறப்புப் பொறிமுறைகளை அறிமுகம் செய்யவேண்டும்.

ஆ. பொதுமக்கள் வேலைத்தலங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் வருவதைத் தவிர்க்குமுகமாக நிறுவனத் தலைவர்கள் வெவ்வேறு வகையான பொதுச் சேவைகளையும் குறித்தொதுக்கப்பட்ட தினங்களிலும் நேரங்களிலும் வழங்கலாம். அத்தகையை பொறிமுறைகள் பற்றி வெகுசன ஊடகங்கள் மற்றும் வேறு தொடர்பாடல் முறைமைகள் மூலம் பொதுமக்களுக்கு போதுமானளவில் அறிவிக்கப்படவேண்டும்.

இ. தேசிய அடையாள அட்டை இலக்க முறைமை அடிப்படையில் குறிப்பிட்ட தினங்களில் அரச அலுவலகங்களுக்கு வருகை தருமாறு பொதுமக்களுக்கு அறிவிப்பது போன்ற புத்தாக்க தீர்வுகள் நிறுவனத் தலைவர்களினால் அறிமுகம் செய்யப்பட்டு வெகுசன ஊடகம் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

ஈ. டீஜிட்டல் முறை வாயிலாக பொது மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கு தற்போதிருக்கும் தொலை சேவை வழங்கள் பொறிமுறைகள் பலப்படுத்தப்படவேண்டும் என்ற அதேவேளை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகத்தோடு (ICTA) கலந்தாலோசித்து புதிய டிஜிட்டல் பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

உ. டிஜிட்டல் முறை மூலம் அரச சேவைகளை வழங்க படிப்படியாக மாறுகின்ற காலப்பகுதியில் இயன்றவரை குறுஞ் செய்தி (SMS), அலைபேசியின் பிரயோகம் மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றைப் பயன்படுத்தவும்.

4.0 வீட்டிலிருந்தே பணியாற்றுதல் (நிய்கஷி) மூலம் தொடர்ந்து வழமையானப் பணிகளை நிறைவேற்றவும்

அ. ஒவ்வவொரு நிறுவனத் தலைவரும் விட்டிலிருந்தே பணியாற்றும்; (WFH) ஏற்பாடுகள் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய பணிகளின் வகைகள், அத்தகைய பணிகளை நிறைவேற்றும் சிறப்பு ஊழியர்கள் வாரத்தில் எத்தனை முறை ஊழியர்கள் வேலைக்கு வரவேண்டும், (WFH) இல் இருக்கும் ஊழியர்களை வேலைத் தலத்திற்கு மீண்டும் அவசரமாக அழைப்பதற்கு இருக்கவேண்டிய ஏற்பாடுகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பார்.

அவ்வாறு செய்வதில் பின்வருவனவற்றிற்குக் கவனம் செலுத்தப்படவேண்டும்:

எந்தெந்த ஊழியரகள் வீட்டிருந்தே பணியாற்றலாம், எந்தெந்த ஊழியர்கள் பணிக்குச் சமுகமளிக்கவேண்டும், வாரத்தில் எத்தனை முறை அவர்கள் வேலைககுச் சமுகமளிக்கவேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.

பொதுப் போக்குவரத்து முறைமையிலும் வேலைத் தலங்களிலும் மக்கள் அளவுக்கதிகம் நிரம்பியிருப்பதை தடுக்குமுகமாக வழமையான வேலை நேரங்களில் 02 வெவ்வேறு வேலை நேரங்களில் ஊழியர்களுக்கு வேலை வழங்குவதை பரிசீலிக்கவும்.

ஊழியர்களின் பணி நிறைவேற்றத்திற்காக முடிந்தவரை இணைய (Online) ஏற்பாடுகளின் பாவனையைத் தொடர்தல்.

வீட்டிலிருந்து பணியாற்றுவதன் மூலம் நிறைவு செய்யப்படவேண்டிய அனைத்து வழமையான பணிகளுக்கும் நாளாந்த கால அவகாசங்களை நிர்ணயித்தல்.

சாத்தியமான அனைத்துப் பணிகளையும் சிறப்புக் கால அவகாசம் கொண்ட ஒப்படைகளாக மாற்றுதல்.

வீட்டிலிருந்து பணியாற்றும் அனைத்து ஊழியர்களையும் கோள் அப் டயரிகளையும் நிறைவேற்றப்பட்ட தமது உத்தியோபூர்வ பணிகள் பற்றி ஒரு நாளாந்த அடிப்படையிலான பதிவையும் பேணுமாறு வேண்டுதல்.

ஆ. இணைய கற்றல் வளங்கள் மற்றும் தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் கற்குமாறு தமது பிள்ளைகளை வழிநடத்துவதன்மூலம் அவர்கள் தங்குதடையற்ற கல்வி வாய்ப்புகள் கொண்டிருப்பதை உறுதிசெய்யுமாறு அனைத்து ஊழியர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது. Channel Eye \u®D Nethra TV ஆகியன கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி அமைச்சின் வழிகாட்டலின்கீழ் 2020 ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் பொதுக் கல்விக்காக (காலை 4.00 முதல் இரவு 9.00 மணிவரை), உயர் கல்வி மற்றும் வாழ்கைத்தொழில் கல்விக்காக (இரவு 9.30 முதல் காலை 12.00 மணிவரை) கல்வி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தொடங்கும்.

இ. வீட்டிலிருந்து பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் இக்காலப் பகுதியில் வீட்டுத் தோட்டம் செய்வதற்கு நேரத்தை ஒதுக்குமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள். இது வீட்டு உணவுத் தேவைக்கும் குறைநிரப்புச் செய்யும்.

ஈ. ஜனதிபதியின் செயலாளரின் PS/CSA/Circular/18/2020 ஆம் இலக்க 2020.03.30 ஆம் திகதிய சுற்று நிருபத்தின் பந்தி (2.m) மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் முறைமைகளை மீள் திட்டமிடுதல் தொடர்பாக (நடைமுறைகளை இலகுவாக்குமுகமாக) ஊழியர்களினால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை பரிசீலித்து அவற்றை அமுல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுகளின் செயலாளர்களது அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டும் – என்றுள்ளது.